DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Please Call me
Selva Karthigesu
Sales Representative
416-648-9757
CENTURY 21

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25 வது வெள்ளி விழா
2021 UTHAYAN
உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1318 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 9, 2021

# கனடிய பழங்குடிகளின் வம்சாவளிப் பெண்மணியான மேரி சைமன் நாட்டின் ஆளுனர் நாயகமாக பதவியேற்றார்



கனடாவின் ஆதிப் பழங்குடி இனத்தின் வம்சாவளிப் பெண்மணியான மேரி சைமன் நாட்டின் ஆளுனர் நாயகமாக நேற்று முன்தினம் ஒட்டாவா மாநகரில் பதவியேற்றார். இவருக்குரிய நியமனத்தை கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வழங்கினார்.

முன்னாள் இராஜதந்திரியான இவர் ஒரு வழக்கறிஞருமாவார். அத்துடன் ஆதிப் பழங்குடி இனத்தின் இனுட் பிரிவைச் சேர்ந்த சமூகத்தின் உரிமைகள் மற்றும் கலாச்சாரத்திற்கான வழக்கறிஞராகக் கடமையாற்றிய மேரி சைமன், கனடாவின் 30 வது ஆளுனர் நாயகமாக (கவர்னர் ஜெனரல்) பதவியேற்றுள்ளார். இவருக்கு முதல் இந்த உயர் பதவியை வகித்தவர் திருமதி யூலி பேய்ட்டி என்பவர் என்பதும் அவர் சில தவறான நடவடிக்கைகள் காரணமாக எழுந்த கேள்விகள் காரணமாக தனது பதவியை இராஜினாச் செய்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

*(உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)*

# ஸ்காபுறோ Terry Fox Public School பாடசாலைக்கு 14.3 மில்லியன் டாலர்களை ஒன்றாரியே அரசு ஒதுக்கியது



## Ontario Province Approves $14.3 Million to Scarborough Terry Fox Public School

ஸ்கார்பாரோ-அஜின்கோர்ட் மாகாண சபையின் எம்.பி.பி திரு அரிஸ் பாபிகியனின் வேண்டுகோளிற்கு இணங்க ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ்சே மற்றும் ஸ்கார்பாரோ-அஜின்கோர்ட் கல்வியாளர்களுடன் இணைந்து ஸ்காபுறோவில் அமைந்துள்ள **Terry Fox Public School** பாடசாலைக்கு 14.3 மில்லியன் டாலர் முதலீட்டு அறிவிப்பை நேற்று அறிவித்தார்.

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

சிறு விளம்பரங்கள்
4ம் பக்கத்தில்
Classified Advertisements On Page 4
'உதயன்' சிறு விளம்பரங்கள் மூலம் அதிக பயனடையுங்கள். குறைந்த கட்டணத்தில் நிறைந்த பலன். தற்போது புதுப் பொலிவுடன் 4ம் பக்கத்தில் பாருங்கள், படியுங்கள்.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

வெள்ளி விழா 25th ANNIVERSARY
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

எதிர்வரும் ஆகஸ்ட் ஆறாம் திகதி வெள்ளியன்று மலர்கிறது

# 'உதயன்' வெள்ளிவிழா ஆண்டுச் சிறப்பிதழ்

உங்கள் அபிமானத்திற்குரிய பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டுச்சிறப்பிதழ் எதிர்வரும் 06-08-2021 வெள்ளிக்கிழமை வெளிவருகின்றது.

தமிழ் பேசும் நல்லுலக நாடுகளிலிருந்து சிறப்புக் கட்டுரைகள் இலக்கியப் படைப்புக்கள் வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றோடும் அதிக பக்கங்களோடும் வாசகர்களையும் வர்த்தக அன்பர்களையும் எழுத்தாள நண்பர்களையும் மகிழ்விக்க மலர்கிறது.

சிறப்பிதழில் தங்கள் படைப்புக்கள் இடம்பெற விரும்பும் எழுத்தாளர்கள் கவிஞர்கள் வரவேற்கப்படுகின்றார்கள். தங்கள் வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரித்து ஆதரவளிக்கவும் வாழ்த்தவும் விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ளவும்.

**416 732 1608** அல்லது **416 752 1524**

மின்னஞ்சல்:- uthayannews@yahoo.com

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இவ்வாரச் செய்திகளில் தொங்கி நிற்கும் கனடாவின் ஆதிப் பழங்குடி வம்சாவளிப் பெண்மணிகள் இருவர்

கனடாவின் ஆதிப் பழங்குடி இனத்தின் முழு வரலாற்றையும் அறிந்து கொள்வதில் எத்தனை பேருக்கு ஆர்வம் உள்ளது என்பதை தெரிந்து கொள்வது மிகவும் கடினமான விடயமாக இருக்கின்றது. இவ்வாறான ஒரு பழங்குடி இனத்தில் கூட பல பிரிவுகள் உள்ளதை அறிந்து கொண்ட போது ஆச்சரியமாகவும் இருந்தது. ஒரு பாதிக்கப்பட்ட இனத்தில் பிரிவுகள் தோன்றுவது என்பது அவர்களின் பலத்தை பலவீனமாக்கும் அல்லவா?

அண்மைக் காலத்தில், கனடாவில் இந்த ஆதிப் பழங்குடிகள் தொடர்பான பல செய்திகள் வெளியாகிய வண்ணம் இருந்தன. அவையெல்லாம் அந்த இனத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளின் பட்டியல்களாகவே தெரிந்தன.

கடந்த ஐம்பது வருடங்களில் இந்த தேசத்திற்கு குடியேற்ற வாசிகளாக வந்தவர்களுக்கும் இந்த நாட்டில் பல நூறு வருடங்களாக வாழ்ந்து வரும் ஆதிப் பழங்குடி மக்களைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளவும் வாய்ப்புக்கள் கிட்டவில்லை. வந்தவர்கள், தங்களை தக்க வைப்பதற்காக போராடிக்கொண்டிருந்தார்கள், ஆனால் இங்கு இயற்கையோடு போராடி வாழ்ந்து வந்தவர்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தவர்களோடு போராடிக் கொண்டிருந்தார்கள். இவைதான் நிச்சயமாக இடம்பெற்றிருக்க வேண்டும்.

ஒரு காலத்தில் வட இலங்கையில் தாழ்ப்பட்டவர்கள் என்று வகைப்படுத்தப்பட்ட பிரிவினருக்கு, தரிசு நிலங்களைக் கொடுத்து உப்புத் தண்ணீர் நிறைந்த கிணறுகளோடு அதில் சிரமப்பட்டு விவசாயம் செய்து வாழுங்கள் என்று கட்டாயப்படுத்தியது போன்று, கனடாவிலும் இந்த ஆதிப் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகள் எந்தவிதமான வளங்களும் அற்று காணப்பட, அந்த மக்களுக்கு அரச உதவிகளும் சிகரட் போன்ற வாழ்வதற்கு அவசியமற்ற பொருட்கள் தாராளமாக மலிவு விலைகளில் வழங்கப்பட்டன என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவ்வாறான சூழ்நிலையிலும் இந்த இனம் சார்ந்த பலர் கல்வியில் ஆர்வம் காட்டி முன்னேறியிருந்தார்கள் என்பது வெளிப்படுகின்றது. இடையில் கனடாவின் சில மாகாணங்களில் கிறிஸ்த்துவ தேவாலயங்கள் சார்ந்து நிறுவப்பட்ட 'வதிவிடப் பாடசாலை'களிலும் அங்கு பலவந்தமாக தங்கள் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட இளம் வயதுப் பிள்ளைகளுக்கும் என்ன நடந்தது என்பதை நாம் தற்போது அறிந்து வருகின்றோம்.

எனினும் கனடாவில் ஆதிப் பழங்குடி வம்சாவளியினர் மீது ஒரு மறைமுகமான புறக்கணிப்பு பிரயோகிக்கப்பட்டது என்பது உண்மையானது என்றே நம்பக்கூடியதாக உள்ளது. இன்னொரு பக்கத்தில் தங்கள் இனத்தின் மீது மேலாதிக்கம் செலுத்துகின்ற அரசும் அது சார்ந்த நிறுவனங்களும் அறிந்து கொள்ளும் வகையில் போராட வேண்டிய சமூகமாக கனடாவின் ஆதிப் பழங்குடியினரின் வாழ்வு நகர்ந்து கொண்டிருந்தது. அதற்காக அவர்கள் தங்கள் இனம் சார்ந்த பல அமைப்புக்களை தோற்றுவித்து அவர்களின் பலத்தைக் காட்ட வேண்டியிருந்தது.

இவ்வாறு கனடிய தேசத்தின் வரலாறுகளில், மறைக்கப்பட்ட பக்கங்களில் ஆதிப் பழங்குடியினர் தங்கள் இருப்பை தக்க வைப்பதற்காக கடுமையாக உழைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான நிலையில் இந்த வாரத்தில் முன்னெப்போதும் நிகழாத வகையில் மேற்படி ஆதிப் பழங்குடி வம்சாவளியைச் சார்ந்த இரண்டு பெண்மணிகளின் பெயர்கள் செய்திகளில் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

கனடாவின் ஆதிப் பழங்குடி வம்சாவளிப் பெண்மணியான மேரி சைமன் என்பவர் நாட்டின் ஆளுனர் நாயகமாக நேற்று முன்தினம் ஒட்டாவா மாநகரில் பதவியேற்றார். ஒரு வழக்கறிஞராகவும் இராஜதந்திரியாகவும் விளங்கிய இவருக்குரிய 'ஆளுனர் நாயகம்' நியமனத்தை பிரித்தானிய மகாராணியின் அனுமதியோடு, கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வழங்கினார். அவரைத் தொடர்ந்து மற்றுமொரு பெண்மணியான ஒரு முன்னாள் அமைச்சர் செய்திகளில் இடம்பெறுகின்றார். கனடாவின் முதல் பழங்குடி வம்சாவளியைச் சார்ந்த நீதி அமைச்சர் என்ற பெருமையைப் பெற்ற ஜோடி வில்சன்-ரெய்போல்ட் நேற்று வியாழக்கிழமை ஒரு பகிரங்க அறிவிப்பை விடுத்ததார். இவர் தற்போது ஒரு கட்சியையும் சாராது ஒரு சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டு தற்போது கனடாவின் மத்திய பாராளுமன்றத்தை அலங்கரித்து வருகின்ற ஒருவர். இவருடைய அறிவிப்பின் படி அடுத்த பொதுத் தெர்தலில் போட்டியிடப் போவதில்லை என்ற செய்தியை தனது தொகுதி வாக்காளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தற்போது உள்ள கனடாவின் லிபரல் அரசாங்கத்திற்கு முன்னர் ஆட்சியில் இருந்த மந்திரி சபையிலேயே ஜோடி வில்சன்-ரெய்போல்ட் என்னும் இவர் நீதி அமைச்சராக பதவி வகித்து வந்தார். அப்போது தற்போதைய பிரதமரான ஜஸ்ரின் ட்ரூடோ அவர்களே பதவியிலிருந்தார்.

வில்சன்-ரெய்போல்ட் அவர்கள் நீதி அமைச்சராக இருந்த காலத்தில், கனடாவின் மொன்றியால் நகரைத் தளமாகக் கொண்ட பொறியியல் நிறுவனமான எஸ்.என்.சி-லாவலின் மீது குற்றவியல் வழக்கொன்றை தாக்கல் செய்வது தொடர்பான விடயத்தில் கனடியப் பிரதமர் அலுவலகத்துடன் மோத வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். ஏனென்றால் மேற்படி பொறியியல் நிறுவனம் செய்த மோசடிகளை பிரதமர் அலுவலகம் அறிந்திருந்தும் அவற்றைக் கண்டு கொள்ளவில்லை என்பதுதான் நீதி அமைச்சரான அவரது குற்றச்சாட்டாக இருந்தது. அரசாங்கத்தை ஏமாற்றும் வகையில் இயங்கிய அந்த பொறியியல் நிறுவனத்த்திற்கு பிரதமரும் அவரது அலுவலகமும் சாதகமாக விளங்கினார்கள் என்ற குற்றச்சாட்டை அப்போது அவர் துணிச்சலாக முன்வைத்தார்.

இதனால் நீதி அமைச்சராக இருந்த அவரின் பதவியை பிரதமர் பறித்தெடுக்க வேண்டிய தேவை வந்தது. எனவே ஜோடி வில்சன்-ரெய்போல்ட் என்னும் அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டியேற்பட்டது.

இந்து இரண்டு பெண்மணிகள் சார்ந்த விடயங்களை நாம் கவனத்துடன் நோக்கினால் சில வருடங்களுக்கு முன்னர் நீதி அமைச்சராக இருந்த ஒரு ஆதிப் பழங்குடி வம்சாவளி வந்த ஒரு பெண்மணியின் அமைச்சர் பதவியை பறித்தெடுத்த பிரதமரே சில நாட்களுக்கு முன்னர் மற்றுமொரு ஆதிப் பழங்குடி வம்சாவளி வந்த ஒரு பெண்மணிக்கு கனடாவின் "ஆளுனர் நாயகம்' என்னும் மிக உயர்ந்த பதவியை வழங்கிவைத்தார். இந்த பதவி இவருக்கு வழங்கப்பெற்ற ஓரிரு நாட்களில் தற்போது சுயேச்சை பாராளுமன்ற உறுப்பினராக விளங்கும் ஜோடி வில்சன்-ரெய்போல்ட் தான் அடுத்து வரவிருக்கும் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என்று அறிவித்துள்ளார். பதவிகளைப் பறிப்பதும் அளிப்பதும் கனடாவில் மட்டுமல் உலகெங்கும் அரசியலில் இடம்பெறு நிகழ்வுகளாக இருந்தாலும், கனடாவின் ஆதிப் பழங்குடி வம்சாவளிப் பெண்மணிகளுக்கும் இடம்பெற்றது, காலம் பதில் சொல்ல வேண்டியதொன்று என்று நாம் கருதுகின்றோம். ஏனென்றால் தர்மம் தோற்பதில்லை என்ற எழுதி வைத்த வரிகள் எமக்கு ஞாபகத்திற்கு வருகின்றன.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இயற்கைத் தாவரங்களை கொண்டு தயாரிக்கப்படும் கைகள் துடைக்கும் கடதாசிகள் இலங்கையில் தயாராகின்றன




இயற்கைத் தாவரங்களை கொண்டு தயாரிக்கப்படும் கைகள் துடைப்பதற்கு பயன்படும் கடதாசிகள் இலங்கையில் தயாராகின்றன. அனுராதபுரம் ராஜாங்கனை பிரதேசத்தில் சமுர்த்தி உதவி பெறும் ஒருவரால் ஜப்பான் ஜபர, இலுக், மானா, சோளம் இலைகள் மற்றும் வாழைமடல் உள்ளிட்ட தாவரப் பகுதிகளை பயன்படுத்தி கடதாசி உற்பத்தி செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சமுர்த்தி உதவி பெறுவோரின் பங்களிப்புடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ராஜாங்கனை பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட ராஜாங்கனை யாய 13 இல் வசிக்கும் ஒருவரே இத்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றார். இத்திட்டத்தில் சமுர்த்தி உதவி பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் உடையவர்கள் என 30 பேர் கொண்ட குழுவினர் பங்களிப்பு செய்து வருகின்றனர்.

இவர்களுக்குத் தேவையான கடன் மற்றும் இயந்திர சாதன வசதிகளை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தைப் பார்க்கும் போது கி.பி 105 ஆண்டை நினைவூட்டுகின்றது. சீனாவில் சாய் லூங் இலை மற்றும் குப்பை போன்றவற்றை சிதைத்து, அவித்து தயாரித்த கூழில் கடதாசி உற்பத்தி செய்யப்பட்டது. உலகில் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்பட்ட கடதாசி உற்பத்தி அதுவாகும். இயந்திர சாதனங்களின் உதவியின்றி கடதாசியை உற்பத்தி செய்த முதல் சாதனையும் அதுவாகவே இருந்தது.

தாவரங்களின் இலை மற்றம் தண்டு போன்ற பகுதிகளை சிறிய துண்டுகளாக வெட்டி அவிப்பதன் மூலம் கிடைக்கும் கூழ் போன்ற பதார்த்தத்தை சட்டகத்தில் இட்டு, பின்னர் அதை அச்சில் உலர்த்துவர். தேவைப்பட்டால் நிறத்தை மாற்ற கூழில் வெவ்வேறு வண்ணங்களைச் சேர்க்கும் திறனும் உள்ளது. உலர்ந்த கடதாசியை மென்மையாக்கும் பணி ஒரு இயந்திரத்தால் செய்யப்படுகிறது.

ராஜாங்கனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மிகவும் குறைந்த வசதியுடைய இடமொன்றில் கைக்கடதாசி உற்பத்தி செய்யப்படுகின்றது. அத்துடன் இயற்கையான கைக்கடதாசி உற்பத்தித் திட்டத்தை 30 பேர் கொண்ட குழுவினர் இணைந்து மேற்கொள்கின்றனர். இத்திட்டம் மிகவும் பயன்மிக்கதாக அமையும். இத்திட்டத்தை அவர்கள் பரந்தளவில் மேற்கொண்டு செல்வதற்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவது பற்றி ஆராய இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, அனுராதபுரம் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயனானந்த உள்ளிட்ட குழுவினர் அண்மையில் நேரில் விஜயம் செய்தனர். இங்கு அமைச்சரை சந்திந்த கைக்கடதாசி தயாரிப்புக் குழுவினர் மாதத்திற்கு 8,000 - 10,000 வரையான கைக்கடதாசியை தயாரிக்க முடியுமெனவும் அதற்குத் தேவையான உபகரணங்கள் இன்னும் தேவைப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இலங்கை அரசின் குடிசைக் கைத் தொழில் அமைச்சின் நிதி உதவியைப் பெற்றுக்கொள்ள இந்தக் குழுவினர் தற்போது முயற்சி எடுத்துள்ளனர் என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

# இலங்கைப் பாராளுமன்றத்திற்கு அருகே நேற்று அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் காவல்துறையினரால் கைது



இலங்கைப் பாராளுமன்றத்திற்கு அருகே நேற்று வியாழக்கிழமை அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்கள் என செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தை காணொளியாக பதிவுசெய்த ஊடகவியலாளர்களின் கமாராக்கள் மீதும் இலங்கைப் பொலிசாரால் கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் மற்றும் கைதுகள் தொடர்பாக எமக்கு கிடைத்த மேலதிக விபரங்கள் மூலம் அன்றைய தினம் பொலிசார் மிகவும் கடுமையாக நடந்து கொண்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பாரளுமன்றத்திற்கு அருகில், பத்தரமுல்லை, பொல்துவ சுற்றுவட்டம் அருகே தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக 31 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் சிறந்த தொழிற்சங்க வாதியுமான ஜோசப் ஸ்டாலின் மற்றும் பௌத்த பிக்குகள் இருவரும் உள்ளடங்குவதாக பொலிசார் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் கீழான ஒழுங்குவிதிகள் நேற்று வியாழக்கிழமையன்று இலங்கைப் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்கிடையில், அரசியல் கட்சிகள், சிவில் சமூகம், விரிவுரையாளர்கள், மாணவர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பலர் இந்த விரும்பத்தகாத சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

மேலும் உயர்கல்வியை தனியார்மயமாக்க வழிவகுக்கும் என்று இந்த உத்தேச கொத்தலாவலை தேசிய பாதுகாப்பு சட்டமூலத்தை வாபஸ் பெறுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த ஆர்ப்பாட்டத்தினிடையே இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய எரிபொருள் விலையேற்றம் மற்றும் பலவிதமான அடக்குமுறைகளுக்கு எதிராகவும் கோசங்கள் எழுப்பப்பட்டதால், போராட்டம் நடத்திய 31 பேர்வரை இலங்கைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவங்கள் நடைபெற்றபோது, கைதுகள் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் சம்பவங்களை காணொளி மூலம் பதிவுசெய்த சில ஊடகவியலாளர்களின் கமராக்களையும் பெண் பொலிஸ் சிப்பாய்கள் சிலர் தாக்கிய சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

உதயனில் விளம்பரங்கள் இதயத்தில் பதிந்த ஓவியங்கள் அனேக வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற பத்திரிகை உதயன்

### அலுவலக வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் அமைந்துள்ள சிறிய அலுவலகம் ஒன்றுக்கு பகுதி நேர அலுவலக உதவியாளர் உடனடியாகத் தேவை. போதிய ஆங்கில அறிவு, கொம்பியூட்டரில் வேலை செய்த அனுபவம் மற்றும் அடிப்படை Book Keeping அனுபவம் ஆகியன அவசியம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: **416 732 1608**

### House For Sale, In Ratmalana Sri Lanka

Two storied house on 9.5 perches
300 meters from Galle Road.Seaside.Maliban Junction.
Rs 20 million.
Please email cansri1986@gmail.com
**Call: 416 739 9107**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice
**RANJAN: (416) 464-2415**

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
**VARUNAN: (416) 894-6244**

### காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் கென்னடி - லோறன்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள காரைக்குடி செட்டிநாடு உணவகத்திற்கு தோசை மற்றும் பரோட்டா தயாரிக்க வல்ல சமையல் வல்லுனர்கள் உடனடியாகத் தேவை.
சிறிது அனுபவம் விரும்பத்தக்கது.
தகுந்த சம்ளம் வழங்கப்படும்.
**Call: (416) 701-0003**

### வேலைக்கு ஆட்கள் தேவை

East end restaurant ஒன்றிற்கு முழு நேர வேலை ஆட்கள் உடனடியாக தேவை. Wednesday to Sunday. தங்குமிடம், உணவு, மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரவு அல்லது திங்கள் காலை drop off வசதிகள் வழங்கப்படும்.
Wages details will be discussed with the interested candidate.
**Call: (416) 294-7887**
for further details.

### TUTORING AVAILABLE

French and English tutoring available. An Ontario Certified teacher is offering online tutoring to help you improve your writing, reading and speaking skills in French and/or English.
Prepare for next school year with a teacher who has experience with the Ontario curriculum.
Homework help and test preparation provided.
***Call: (416) 723-7287***

### உணவக வேலை வாய்ப்பு

Srilankan Cooks, Indian Tandoori Curry Cooks
ஆகியவற்றுக்கு ஆட்கள் தேவை.
Full-time and Part-time.

அத்துடன் Kitchen Helper, Dishwasher - Part-time.

இரண்டு இடங்களுக்கு:
Markham & Scarborough Locations.
தொடர்புகளுக்கு: AMAR
**(416) 988-9518**

### DRIVERS WANTED

Drivers wanted with small car.
Must have knowledge of GTA, Toronto & Woodbridge areas.

Monday to Friday -- 8 AM to 5 PM

**Call: (416) 320-1446**

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா லிபரல் அரசின் முன்னாள் நீதி அமைச்சரான ஜோடி வில்சன் – ரெய்போல்ட் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என அறிவிப்பு



கனடாவின் பாராளுமன்ற உறுப்பினரும் லிபரல் அரசாங்கத்தின் முன்னாள் நீதி அமைச்சருமான ஜோடி வில்சன் - ரெய்போல்ட் நேற்று வியாழக்கிழமை ஒரு பகிரங்க அறிவிப்பை விடுத்ததார். அதில் தான் அடுத்த பொதுத் தெர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்துள்ளார். அத்துடன் கடியப் பாராளுமன்றம் என்பது மோசமான பின்னணியில் இருந்து தனிநபர்களை ஓரங்கட்டும்” நச்சுத்தன்மையும் பயனற்ற தீர்மானங்களை எடுக்கும் ஒரு தளம் என்றும் அவர் கனடியப் பாராளுமன்றத்தை விமர்சனம் செய்தார்.

வில்சன் - ரெய்போல்ட் அவர்கள் தனது தொகுதியான வான்கூவர் - கிரான்வில் தொகுதி மக்களுக்கு என எழுதிய கடிதத்தில், 2015 ஆம் ஆண்டில் லிபரல் பதாகையின் கீழ் முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து பாராளுமன்றத்தில் தனதுஅரசியல் பயணத்தின் ஒரு ஆபத்தான கட்டத்தைத் தாண்டியதாகவும் தற்போது பாராளுமன்றத்திற்கு வெளியில் வந்து பல மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தனக்கு நம்பிக்கை இருப்பதாகக் கூறினார்.

“என்னைப் பொறுத்தளவில் மத்திய பாராளுமன்ற அரசியல், என்பது கணிசமான நடவடிக்கைகளுக்கு தீங்கு விளைவிக்கும் ஒரு இடம் என்பதையும் பாரபட்சத்தை அரங்கேற்றும் வெட்கக்கேடான ஒரு தளம்” என்றும் அவர் தனது தொகுதி மக்களுக்கு தெரிவித்துள்ளார்.

வில்சன் - ரெய்போல்ட் அவர்கள் நீதி அமைச்சராக பணியாற்றிய முதல் பழங்குடி வம்சாவழிப் பிரனி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வில்சன் - ரெய்போல்ட் தனது கடிதத்தில் தனது எதிர்காலத் திட்டங்கள் குறித்த கூடுதல் விவரங்களை விரைவில் பகிர்ந்து கொள்ளப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

“எனது குடும்பத்தினருடன் அதிக நேரம் செலவிடுவதற்காகவோ அல்லது பிற சவால்கள் மற்றும் முயற்சிகளில் கவனம் செலுத்துவதற்காகவோ நான் இந்த முடிவை எடுக்கவில்லை”, என்று அவர் கூறினார்.

வில்சன் - ரெய்போல்ட் அவர்கள் நீதி அமைச்சராக இருந்த காலத்தில், கனடாவின் மொன்றியால் நகரைத் தளமாகக் கொண்ட பொறியியல் நிறுவனமான எஸ்.என்.சி - லாவலின் மீது குற்றவியல் வழக்கொன்றை தாக்கல் செய்வது தொடர்பான விடயத்தில் கனடியப் பிரதமர் அலுவலகத்துடன் மோத வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். ஏனென்றால் மேற்படி பொறியியல் நிறுவனம் செய்த மோசடிகளை பிரதமர் அலுவலகம் அறிந்திருந்தும் அவற்றைக் கண்டு கொள்ளவில்லை என்பது “து ட்ரூடோ அரசாங்கத்தின் மிகப்பெரிய ஊழல்களில் ஒன்றாகும்” என்று அப்போது வில்சன் - ரெய்போல்ட் அவர்கள் பகிரங்கமாக அறிவித்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்ககது.

எஸ்.என்.சி - லாவலின் விவகாரத்திற்கு இடையில் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அவர் ஒரு சுயேட்சை வேட்பாளராக தனது தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஒன்றாரியோவில் கோவிட்-19 தொற்றின் இரண்டாவது அலையின் போது இளம் வயதினர் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளர்

ஒன்றாரியோ மாகாணத்தில் கோவிட் தொற்றின் இரண்டாவது அலையின் போது இளம் வயதினர் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஆய்வுகளின் முடிவுகள் தெரிவித்துள்ளதாக ஒன்றாரியோவின் விஞ்ஞானக் கழகம் அறிவித்துள்ளது.

இளைஞர்களுக்கு கோவிட் தொற்றுநோய் தொடர்பான இடையூறுகளின் பாதிப்புகள் மிகவும் கடுமையாக இருந்திருக்கவேண்டும் மேலும் இந்த கோடை முடிந்து இலையுதிர்காலத்தில் பாடசாலைகள் வகுப்பறைக் கற்றலுக்கு திரும்பாவிட்டால் இளம் வயதினம் தொடர்ந்து மன உளைச்சலுக்கு ஆளாவார்கள் என்றும் மருத்துவமனையின் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து தொடர்ந்து நடைபெற்று வரும் கோவிட்-19 மனநல ஆய்வின் கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன.

எட்டு முதல் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் தொற்றுநோயின் இரண்டாவது அலையின் போது மருத்துவ ரீதியாக குறிப்பிடத்தக்க மனச்சோர்வு அறிகுறிகளுக்கு உள்ளாகியுள்ளனர். தற்போது எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளின் படி இளம் பருவத்தினரிடையே அந்த எண்ணிக்கை 70 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும் அறியப்படுகின்றது.

ஒன்ராறியோ மாகாணத்தில் கோவிட்-19 தொற்றின் வீழ்ச்சி ஏற்பட்டதற்கு காரணங்கள் பல உள்ளன. ஆய்வாளர்களின் எச்சரிக்கையுடன், பாடநெறி நடவடிக்கைகள் மற்றும் மனநல உதவிகளை வழங்காமல் பள்ளி கதவுகளைத் திறப்பது பாதிப்பை மாற்ற போதுமானதாக இருக்காது. மேலும் தொற்றை அதிகரிக்கும் என்றே அறிவிக்கப்பட்டுள்ளது.

பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தொற்றுநோய்களின் இரண்டாவது அலைக்குப் பின்னர் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் மன ஆரோக்கியம் மீண்டும் முன்னேற்றம் காணவில்லை என்று ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துவதால், முடிவுகள் கவலை அளிக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் கவனமெடுக்க வேண்டும் என்று விஞ்ஞானக் கழகம் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, தெற்கு ஒன்ராறியோ மற்றும் டொராண்டோ பெரும்பாகப் பகுதியில் உள்ள குழந்தைகள், குறிப்பாக, நாட்டின் மிகக் கடுமையான தொற்றுநோய்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று விஞ்ஞானக் கழகத்தின் ஆய்வாளர் ஒருவர் கூறினார். பாடசாலைகளை மூடி வைத்தல் மற்றும் பாடநெறி நடவடிக்கைகளை ரத்து செய்வது ஆகியன இதில் அடங்கும். ஏப்ரல் மாதத்தில் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட வெளிப்புற நடவடிக்கைகளை தடை செய்வதற்கு ஒன்றாரியோ மாகாணம் உத்தரவிட்டது, இதறகு ஒன்றாரியோ வாழ் பெற்றோரிடமிருந்து எதிர்ப்புக்கள் கிளம்பவே ஒன்ராறியோஅரசு தனது முடிவை மாற்றிக்கொண்டது என்பது இங்கு குறிப்பிடத்க்கது.

# Ontario Province Approves 14.3 Million to Scarborough Terry Fox Public School

# ஸ்காபுறோ Terry Fox Public School பாடசாலைக்கு 14.3 மில்லியன் டாலர்களை ஒன்றாரியே அரசு ஒதுக்கியது

ஸ்கார்பாரோ - அஜின்கோர்ட் மாகாண சபையின் எம்.பி.பி திரு. அரிஸ் பாபிகியனின் வேண்டுகோளிற்கு இணங்க ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ் மற்றும் ஸ்கார்பாரோ - அஜின்கோர்ட் கல்வியாளர்களுடன் இணைந்து ஸ்காபுறோவில் அமைந்துள்ள Terry Fox Public School பாடசாலைக்கு 14.3 மில்லியன் டாலர் முதலீட்டு அறிவிப்பை நேற்று அறிவித்தார்.

ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சரின் இந்த அறிவிப்பின் பிரகாரம் உள்ளூர் பாடசாலைகளை புதிதாகக் கட்டுவதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் ஒன்ராறியோவின் அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாகும். இந்த நிதி தற்போது பாடசாலையின் வசதிகளுக்கு மேலதிகமான வசதிகளை மாணவர்களுக்கும் ஆசிரியர்களும் வழங்கும் என்றும் எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய மாகாண பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் தனது உரையில், “14.3 மில்லியன் டாலர்கள் முதலீடானது ஸ்கார்பாரோ - அஜின்கோர்ட் மாணவர்களுக்கு புதிய, தரமான கற்றல் சூழலையும், புதிய குழந்தை பராமரிப்பு அறைகளையும் வழங்கும். இந்த திட்டம் சிறந்த கற்றல் இடங்களைக் கொண்ட மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் மாகாணத்தின் மூலதன முதலீட்டு திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

Terry Fox Public School பாடசாலைக்கு நிதி வழங்கி அதன் வளங்களைப் பெருக்குவது என்பது எங்கள் சமூகத்திற்கான ஒரு சிறந்த செய்தி” என்று கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், “இந்த முதலீடு ஸ்கார்பாரோவின் குழந்தைகளுக்கு அவர்களின் திறனை பூர்த்தி செய்வதற்கும் நமது சமூகத்தின் வெற்றிகரமான மற்றும் உற்பத்தி உறுப்பினர்களாக மாறுவதற்கும் ஒரு சிறந்த கற்றல் அமைப்பையும் புதிய வாய்ப்புகளையும் வழங்கும். இந்த கணிசமான நிதியை அங்கீகரிப்பதன் மூலம் ஸ்கார்பாரோ - அஜின்கோர்ட் மாணவர்கள் மற்றும் குடும்பங்களுக்கு ஆதரவாக நின்றமைக்கு அமைச்சருக்கு நன்றி”.

இந்த நிதி அறிவிப்பானது ஸ்கார்பாரோ - அஜின்கோர்ட் பள்ளிகளுக்கு கல்வி அமைச்சினால் விடுக்கப்பெற்ற கடந்த எட்டு மாதங்களில் இரண்டாவது பெரிய அறிவிப்பாகும். கடந்த அக்டோபரில், கல்வி அமைச்சர், ஸ்டீபன் லெஸ், மற்றும் ஸ்கார்பாரோ எம்.பி.பி அரிஸ் பாபிகியன், இணைந்து ஒன்றாறியோ அரசு பாடசாலைகளுக்கு 5.7 மில்லியன் டாலர்களை ஒதுக்க ஒப்புதல் அளித்துள்ளதாக அறிவித்தது. இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் 40 புதிய குழந்தை பராமரிப்பு இடங்களை அமைக்க முடிஞயும் என்றும் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் தெரிவித்தார்.




Terry Fox Public School பாடசாலைக்கான இன்றைய அறிவிப்பு 276 புதிய தொடக்க மாணவர் இடங்கள், 88 புதிய உரிமம் பெற்ற குழந்தை பராமரிப்பு இடங்கள் மற்றும் 5 புதிய குழந்தை பராமரிப்பு அறைகள் ஆகியவற்றை உள்ளடக்கும் என்றும் அமைச்சர் தனது பதிலுரையில் தெரிவித்தார்.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடிய பழங்குடிகளின் வம்சாவளிப் பெண்மணியான மேரி சைமன் நாட்டின் ஆளுனர் நாயகமாக பதவியேற்றார்



கனடாவின் ஆதிப் பழங்குடி இனத்தின் வம்சாவளிப் பெண்மணியான மேரி சைமன் நாட்டின் ஆளுனர் நாயகமாக நேற்று முன்பாக பதவியேற்றார். இவருக்குரிய நியமனத்தை கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வழங்கினார்.

முன்னாள் இராஜதந்திரியான இவர் ஒரு வழக்கறிஞருமாவார். அத்துடன் ஆதிப் பழங்குடி இனத்தின் இனுட் பிரிவைச் சேர்ந்த சமூகத்தின் உரிமைகள் மற்றும் கலாச்சாரத்திற்கான வழக்கறிஞராகக் கடமையாற்றிய மேரி சைமன், கனடாவின் 30 வது ஆளுனர் நாயகமாக (கவர்னர் ஜெனரல்) பதவியேற்றுள்ளார். இவருக்கு முதல் இந்த உயர் பதவியை வகித்தவர் திருமதி. யூலி பேய்ட்டி என்பவர் என்பதும் அவர் சில தவறான நடவடிக்கைகள் காரணமாக எழுந்த கேள்விகள் காரணமாக தனது பதவியை கடந்த ஜனவரி மாதம் இராஜினாச் செய்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் ஒரு அகதியாகவே கனடாவிற்கு குடியேறியவர் ஆவார்.

கனடாவின் 30 வது ஆளுனர் நாயகமாக பதவியேற்றுள்ள சைமன் அவர்கள் தனது நியமனத்தின் மூலம் கனடாவுக்கு ஒரு "வரலாற்று மற்றும் ஊக்கமளிக்கும் தருணம்" கிட்டியுள்ளது என்றும், நல்லிணக்கத்தை நோக்கிய பாதையில் மற்றொரு முக்கியமான படியாக இது அமைந்துள்ளது என்றும் கூறினார்.

"எனது வருகையை அனைத்து கனேடியர்களும் தங்களின் ஒரு பகுதியாக உணர்வார்கள் என்றும் நான் நம்புகிறேன், ஏனென்றால் எனது நியமனமானது, மிகவும் உயர்ந்த விடயங்களைக் கொண்டதும் நியாயமானதும் மற்றும் சமமான சமுதாயத்தை உருவாக்குவதற்கான எங்கள் கூட்டு முன்னேற்றத்தை பிரதிபலிப்பதும் ஆகும்" என்று அவர் இன்று காலை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது நியமனம் பற்றி அறிவித்த பின்னர் உரையாற்றும் போது கூறினார்.



சைமன் அவர்கள் தனது சொந்தக் கதையானது கனடாவின் வடக்குக்கும் தெற்கிற்கும் இடையில் ஒரு பாலம் கட்டுபவராக தன்னை ஆக்கியுள்ளது என்றார் "அவரது தாயார் இனுக், அவரது தந்தை ஹட்சன் பே நிறுவனத்தில் பணியாற்றியவர்" என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

"எல்லா மக்களுடனும், அவர்கள் எங்கு வாழ்ந்தாலும், அவர்கள் எதை நம்புகிறார்கள் என்றாலும் அல்லது அவர்கள் எதை வெற்றிகொள்ள வேண்டும் என்றாலும் நான் அவை அனைத்தையும் தொடர்புபடுத்த வேண்டியவளாக உள்ளேன் என்றும் கனடாவின் புதிய ஆளுனர் நாயகம் சைமன்" அவர்கள் தெரிவித்தார்.

# ரொறன்ரோவின் "தமிழர் சமூக மையத்திற்கு" கனடாவின் மூவ்வகை அரசுகளிடமிருந்து நிதி கிடைப்பது உறுதியாகியது




கனடாவின் ரொறன்ரோ மாநகரில் எங்கேயாவது ஒரு இடத்தில் தமிழ் மக்களுக்கான ஒரு "சமூக மையம்" அமைய வேண்டுமென நீண்டகாலமாக எடுக்கப்பட்டு வந்த முயற்சிகளுக்கு தற்போது சாதகமான தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளமை தமிழ் மக்களுக்கு "நாக்கில் தேன் தடவியது" போன்ற ஒரு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

தமிழ் மக்களுக்காக அமையப் போகின்ற "தமிழர் சமூக மையத்திற்கு" கனடாவின் மூவ்வகை அரசுகளிடமிருந்து நிதி கிடைப்பது உறுதியாகிவிட்டது என்ற செய்தி தற்போது கசிந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடாவின் மத்திய அரசு, ஒன்ராரியோ மாநில அரசு மற்றும் ரொறன்ரோ மாநகர அரசு ஆகியவையே இந்த "தமிழர் சமூக மையத்திற்கு" தேவையான நிதியை வழங்குவதென உத்தியோகபூர்வமாக முடிவெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பெற்றுள்ளது.

இது பற்றி அதிகாரமான பூர்வமான அறிவிப்பு விரைவில் வெளிவருமென்று தெரியவந்துள்ளது.

# ஹையிட்டி ஜனாதிபதி படுகொலை தொடர்பாக ஹைட்டிய அமெரிக்கர்கள் என்று நம்பப்படும் இரண்டு ஆண்கள் கைது

## கொலையாளிகள் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள் என்ற சந்தேசம் வலுக்கின்றது



ஹைட்டிய ஜனாதிபதியாக பதவி வகித்த ஜோவெனல் மொய்சை ஹைட்டிய அமெரிக்கர்கள் என்று நம்பப்படும் இரண்டு ஆண்களும் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்ற சந்தேகத்தில் அவர்களி இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அரச அதிகா-ரி ஒருவர் வெளியிட்டு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது - அவர்களில் ஒருவர் ஹைட்டியின் போர்ட் ஓ பிரின்ஸ் நகரத்தில் அமைந்துள்ள கனேடிய தூதரகத்தில் முன்னர் மெய்க்காப்பாளராக இருந்ததாகக் கூறப்படுகிறது.

ஹைட்டியின் தேர்தல் மந்திரி மத்தியாஸ் பியர், அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் கடந்த புதன்கிழமை விடியற்காலையில் தனது வீட்டில் துப்பாக்கி ஏந்தியவர்களால் ஜனாதிபதி ஜோவெனல் மொய்ஸ் படுகொலை செய்யப்ப்ட்டார் என்றும் இந்த மோசமான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 பேரில் ஹைட்டிய அமெரிக்கரான ஜேம்ஸ் சோலேஜஸ் என்பவரும் அடங்குவதாகவும் கூறினார். மேலும் நான்கு பேர் கொலம்பியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களில் வயதில் அதிகமான சந்தேக நபர் 55 வயதுடையவர் என்றும் இந்த கொலைக்குழுவில் மிக இளையவர் சோலேஜஸ் என்னும் 35 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஹைட்டிய ஜனாதிபதி-யின் படுகொலையானது கூலிக்கு அமர்த்தப்பட்ட கொலையாளிகளினால் மேற்கொள்ளப்பட்டது என்ற சந்தேகம் வலுவடைந்துள்ளதாகவும் வெளிநாட்டு செய்தியாளர்கள் பதிவிட்டுள்ளனர்.

ஹைட்டியின் தேசிய காவல்துறை இயக்குனர் லியோன் சார்லஸ் கருத்துப்படி, கொலை செய்ய வந்த குழுவில் ஏழு பேர் போலீசாருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் கொல்லப்பட்டனர் என்றும் பின்னர் அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலாளர் விடுத்த அறிவித்தலில் சோலேஜஸின் பின்னணி குறித்த கூடுதல் விவரங்களை , ஹைட்டியின் தேசிய காவல்துறை தருவதற்கு மறுத்துள்ள்தாகவும் இரண்டாவது ஹைட்டிய அமெரிக்கரின் பெயரையும் வழங்க மறுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேற்படி இரண்டு சந்தேக நபர்களும் வியாழக்கிழமை போர்ட்-ஓ-பிரின்ஸ் நகரில் உள்ள புதர்களில் மறைந்திருந்ததைக் கண்ட மக்கள் அவர்கள் இருவரையும் சட்டை மற்றும் காற்சட்டைகள் மூலம் பிடித்து, பின்னர் தள்ளியும் பின்னர் அவ்வப்போது அவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தியும் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

அதிக அளவில் வியர்த்தல் மற்றும் மண்ணால் பூசப்பட்டதாகத் தோன்றும் ஆடைகளை அணிந்திருந்த நபர்களை போலீசார் கைது செய்தனர் என்று பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார். அதிகாரிகள் அவர்களை ஒரு பிக்அப் டிரக்கின் பின்புறத்தில் ஏற்றிக்கொண்டு சென்ற போது மக்கள் கூட்டம் அவர்களைத் தொடர்ந்து அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு ஓடிச் சென்றதால் மக்களை விரட்டவேண்டிய தேவை பொலிசாருக்கு ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அங்கு சென்ற மக்கள் கூட்டத்தில் இருந்த சிலர், "அவர்கள் எங்கள் ஜனாதிபதியைக் கொன்றார்கள்! எனவே அவர்களை எங்களிடம் கொடுங்கள். நாங்கள் அவர்களை எரிக்கப் போகிறோம்" என்று கூச்சலிட்டதாகவும் அறியப்படுகின்றது.

நாட்டின் தலைவரைக் கொல்ல வெளிநாட்டினர் ஹைட்டியில் வருவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று ஒருவர் சத்தமிட்டதாகவும் படுகொலை இடம்பெற்ற அடுத்த நாள் வியாழக்கிழமையன்று ஒரு செய்தி மாநாட்டில், ஹைட்டிய ஹைட்டிய பொலிஸ்மா அதிபர் சார்லஸ், மக்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார், பொலிஸ் தங்கள் வேலையைச் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.



ஹெய்ட்டியின் முக்கிய எதிர்க்கட்சிகள் மற்றும் சர்வதேச சமூகத்தால் கண்டிக்கப்பெற்ற இந்த தாக்குதல் "மிகவும் பயிற்சி பெற்ற மற்றும் அதிக ஆயுதமேந்திய குழுவினரால் நடத்தப்பட்டது என்று மட்டுமே கூறியுள்ளார்களே தவிர படுகொலைக்கான ஒரு நோக்கத்தைப் பற்றி ஒன்றும் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில் ஹைட்டிய காவல்துறைத் தலைவரின் கருத்துக்கள் குறித்து ஒரு அறிக்கை மக்களுக்கு சந்தேகத்தை வெளிப்படுத்தும தன்மை கொண்டதாக இருப்பதாகவும் காவல்துறையினரால் விவரிக்கப்பட்ட அதிநவீன தாக்குதல் செய்பவர்கள் மோஸின் வீடு, பாதுகாப்பு விவரம் மற்றும் அவரது அறைக்குள் எவ்வாறு ஊடுருவி, பின்னர் பாதிப்பில்லாமல் தப்பிக்க முடியும் என்று பலர் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இதற்கிடையில், விசாரணையில் சம்பந்தப்பட்ட ஒரு ஹைட்டி நீதிபதி, மோஸ் ஒரு டஜன் முறை சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், அவரது அலுவலகம் மற்றும் படுக்கையறை ஆகியவை தாக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் பல களவாடப்பட்டதாகவும், கொள்ளையடிக்கப்பட்டதாகவும் ஹைட்டிய செய்திப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

மோஸின் மகள், ஜோமர்லி ஜோவெனல், தாக்குதலின் போது தனது சகோதரனின் படுக்கையறையில் ஒளிந்து கொண்டார் எனவும் மேலும் ஒரு பணிப்பெண்ணும் மற்றொரு ஜனாதிபதி வதிவிடத்தின் தொழிலாளியும் தாக்குதல் நடத்தியவர்களால் கட்டி வைக்கப்பட்டனர்.எனவும் கூறப்படுகின்றது

காவல்துறை மற்றும் இராணுவத்தின் ஆதரவுடன் ஹைட்டியின் தலைமையை ஏற்றுக்கொண்ட இடைக்கால பிரதமர் கிளாட் ஜோசப், சர்வதேச விமான நிலையத்தை மீண்டும் திறக்க உத்தரவிட்டதால், வணிகங்களை மீண்டும் திறந்து மீண்டும் வேலைக்குச் செல்லுமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

புதன்கிழமை, ஜோசப் மோஸின் கொலையைத் தொடர்ந்து இரண்டு வார கால அவசரகால நிலையை அவர் அறிவித்தார்,

"இப்போது இங்கு ஒரு வெற்றிடம் உள்ளது, மேலும் தங்களின் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடக்கும் என்று அவர்கள் பயப்படுகிறார்கள்" என்று மியாமியின் லிட்டில் ஹைட்டி சமூகத்தில் உள்ளவர்களுக்கு உதவும் ஒரு குழுவான குடும்ப நடவடிக்கை நெட்வொர்க் இயக்கத்தின் நிர்வாக இயக்குனர் மார்லின் பாஸ்டியன் கூறினார்.

இதற்கிடையில், ஹைட்டியின் நிலைமை குறித்து பேசுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் வியாழக்கிழமை கூடியது, யு.என். சிறப்பு தூதர் ஹெலன் லா லைம், போர்ட்-ஓ-பிரின்ஸிலிருந்து யு.என். தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஹைட்டி கூடுதல் பாதுகாப்பு உதவியைக் கோரியதாகக் கூறினார்.

ஒரு வருடத்திற்கும் மேலாக தனது ஆணையால் ஆட்சி செய்து வந்தவரும் வன்முறை ஆர்ப்பாட்டங்களை எதிர்கொண்டவருமான மோயிஸின் கீழ் ஹைட்டி ஒரு நிலையற்ற பொருளாதாரத்தைக் கொண்டு நகர்ந்து கொண்டிருந்தது வளர்ந்தது, விமர்சகர்கள் அவர் அதிக அதிகாரத்தை குவிக்க முயற்சிப்பதாக குற்றம் சாட்டியதால், அவர் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சி கோரியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.





இந்தியா செய்திகள் India News

# ஸ்டாலின் நடவடிக்கையால் அதிர்ந்து போயுள்ள அதிமுக



தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஸ்டாலின் சமீபத்தில் டெல்லி சென்றபோதுகூட, இந்த விவகாரத்தை பற்றிதான் பிரதமரிடம் எடுத்துரைத்ததாக தெரிகிறது. அதற்கு டெல்லி மேலிடமும் ஓகே சொல்லி உள்ளது. இதற்கு பிறகுதான், லஞ்ச ஒழிப்பு துறை இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ள கந்தசாமியிடம், கடந்த ஆட்சியில் நடந்த ஊழல் முறைகேடுகள் தொடர்பான ஆவணங்களை சேகரிக்கும்படி, அரசு வாய்மொழியாக உத்தரவிட்டதாம்.

இதைதவிர, அமைச்சர்களிடமும், அவர்கள் துறைகளில் நடந்த முறைகேடு, ஊழல் தொடர்பான ஆவணங்களை சேகரித்து, கந்தசாமியிடம் வழங்கவும், வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதையடுத்து, எடப்பாடி பழனிசாமியிடம் இருந்த நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணி துறையில் நடந்த ஊழல் குறித்த விபரங்களை, தோண்டி எடுக்கும் பணி துவங்கியதாக கூறப்பட்டது.

மேலும், “பாரத் நெட் டெண்டரில்” நடந்த முறைகேடுகள், உணவு தானியங்கள் கொள்முதலில் நடந்த முறைகேடுகள், உள்ளாட்சி துறையில் நடந்துள்ள ஊழல்கள், மீன் வளத்துறையில் “வாக்கி டாக்கி” ஊழல், சுகாதாரத் துறையில் கொரோனா சிகிச்சை மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் வாங்கியதில் நடந்த ஊழல் போன்றவை குறித்த விபரங்களை சேகரிக்கும் பணி நடந்து வருவதாகவும் கடந்த வாரம் முழுவதும் தகவல்கள் வந்தன. இப்போது விஷயம் என்னவென்றால், கடந்த ஆட்சியில நடந்த ஊழல் குறித்த விசாரணையை துவங்கலாம் என்று லஞ்ச ஒழிப்புத்துறைக்கு திமுக அரசு அனுமதி தந்து விட்டதாம். இந்த விஷயம் தெரிந்ததும் மாஜிக்கள் அலர்ட் ஆகி உள்ளனர். அதிலும் குறிப்பிட்ட கொங்கு மண்டல 2 மாஜிக்களும் தங்கள் மாவட்ட வக்கீல் அணியிடம் ஆலோசனை நடத்த தொடங்கி விட்டார்களாம். அதுமட்டுமல்ல, திறமையான வக்கீல்கள் 3 பேரை தேர்ந்தெடுத்து, தங்களுக்கு எதிரான வழக்குகளில் வாதாட வேண்டும் என்று சொல்லி உள்ளார்களாம். இவர்களாவது பரவாயில்லை 3 வக்கீல்கள், சேலத்தில் எடப்பாடி பழனிசாமி 30 வக்கீல்களை அழைத்து ஆலோசனை நடத்தினாராம்.





திமுக அரசு வழக்கு போடாமல் லேசில் விடாது என்ற உறுதி அதிமுக மேலிடத்துக்கே தெரிந்துள்ளது. எனவே தான் அதை எப்படி எதிர்கொள்வது என்ற முயற்சியில் முழு மூச்சாக இறங்கிவிட்டதாம். ஏற்கனவே சசிகலாவை சமாளிக்க முடியால் அதிமுக திணறி கொண்டிருக்கிறது. தூத்துக்குடியில் சசிகலாவுக்கு ஆதரவாக தீர்மானமே நிறைவேற்றியாகிவிட்டது. அதிலும் அதிமுக சேலம் மாவட்ட நிர்வாகிகளின் கூட்டத்தில் சசிகலாவுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மற்ற மாவட்டங்களில் நிறைவேற்றுவதில் சில மாவட்ட நிர்வாகிகளே வேறுபட்டிருக்கிறார்களாம். இப்போது ஸ்டாலின் தன் பணியை தொடங்கி உள்ளார். இனி விடாது திமுக.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஈழத்தமிழ் மக்கள் கண்களை மூடிக்கொண்டு இரு இனவாதக் கட்சிகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதே மிகப்பெரிய சோகம்

இலங்கையில் நீண்ட காலப் பிரச்சனைகளில் ஒன்றாக மொழிப் பிரச்சினை என்பது இலங்கையில் மொ ஒரு நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. இப்பொழுது இலங்கையில் சிங்களத்துடன் தமிழும் அரச கரும மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இருந்தாலும், அந்த நிலையை அடைவதற்கு நீண்ட காலம் போராட வேண்டியிருந்ததை அனைவரும் அறிவர். மொழிப் பிரச்சினையால் இரண்டு பகுதியினர் இலாபம் அடைந்தனர். ஒரு தரப்பினர் சிங்கள இனவாத அரசியல்வாதிகள். மறு தரப்பினர் தமிழ் இனவாத அரசியல்வாதிகள். அதிலும் தமிழ் இனவாத அரசியல்வாதிகளே கூடுதலான இலாபம் தமிழரசுக் கட்சியினர் மொழிப் பிரச்சினையை வைத்தே தமது கட்சியை வளர்த்துக் கொண்டனர் எனவும் கூறலாம்.ஆனால் இன்று வரை எதையும் ஆராய்ந்து பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டு ஆதரவளிக்கும் தமிழ் மக்கள் இந்த இரு கட்சிகளினதும் ஏமாற்றுத் தனத்தைப் புரிந்து கொள்ளாமல் தொடர்ந்தும் அவர்களுக்கு ஆதரவளித்து வருவதுதான் மிகப்பெரிய சோகம்.





இலங்கையில் மொழிப் பிரச்சினையைத் தொடக்கி வைத்தவர் ஐக்கிய தேசியக் கட்சியின் அபகீர்த்திமிக்க தலைவர்களில் ஒருவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தன தான். அவர் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னரே பிரித்தானியர் அமைத்திருந்த சட்டசபையில் ஒரு உறுப்பினராக இருந்த காலத்திலேயே இலங்கையின் ஆட்சி மொழியாகவும், பாடசாலைகளில் போதனா மொழியாகவும் சிங்களம் மட்டுமே இருக்க வேண்டும் என்றொரு தீர்மானத்தை சட்டசபையில் கொண்டு வந்தார். அன்றைய காலகட்டத்தில் இனவாதம் பெரிதாக மேலோங்கி இருக்காத காரணத்தால் அதிர்ஸ்ட்டவசமாக அவரது தீர்மானம் தோற்றுப்போனது. சுப்பராயன் பின்னர் 1956 பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்கள் முன்னதாக ஐ.தே.க. களனியில் நடத்திய மாநாட்டில் தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாக இருக்கும் என்றொரு தீர்மானத்தை அதே ஜே.ஆரே முன்மொழிந்து மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. இதிலிருந்து ஓர் உண்மை புலனாகின்றது. அதாவது, பண்டாரநாயக்க 1956இல் ஆட்சிக்கு வந்து "தனிச் சிங்களம்" சட்டத்தைக் கொண்டு வந்தாலும், அவர் ஆட்சிக்கு வராமல் ஐ.தே.க. ஆட்சிக்கு வந்திருந்தாலும், தனிச் சிங்களச் சட்டம் வந்திருக்கும். அதுமட்டுமல்ல, பண்டாரநாயக்க தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது ஐ.தே.க. அதை ஆதரித்தே வாக்களித்தது. இதிலிருந்து மொழிப் பிரச்சினையில் ஐ.தே.கவின் கொள்கை என்னவென்பது தெட்டத்தெளிவாகிறது.

தனிச் சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது, இடதுசாரிக் கட்சிகளான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் அதை வன்மையாகக் கண்டித்ததுடன், எதிர்த்தும் வாக்களித்தன. தனிச் சிங்களச் சட்டம் சம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்வினையை கட்சியின் பருத்தித்துறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான பொன்.கந்தையா தனது நீண்ட உரையின் மூலம் தெரியப்படுத்தினார். அதேபோல, "ஒரு மொழி என்றால் நாடு இரண்டாகும். இருமொழி என்றால் நாடு ஒன்றாகும்" எனத் தெரிவித்து மொழிப் பிரச்சினையில் லங்கா சமசமாஜக் கட்சியின் கொள்கையை அதன் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா தெளிவுபடுத்தினார். (பிற்காலத்தில் கொல்வினதும் அவரது சமசமாஜக் கட்சியினதும் கொள்கை மாறிவிட்டது உண்மையே) தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்திருந்தபோதிலும், அவர்களது தமிழ்மொழிப்பற்று அந்தரங்க சுத்தியானதா என்று ஐயப்பாடு இருக்கின்றது.

9ம் பக்கத்தொடர்ச்சி 9ம் பக்கத்தொடர்ச்சி... ஏனெனில், பண்டாரநாயக்க தனிச்சிங்களச் சட்டத்தை கொண்டுவந்தபோது, சிங்களத்துடன் தமிழையும் ஆட்சிமொழியாக்கும்படி இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் அரசாங்கத்தை வலியுறுத்தின. வலியுறுத்தியதுடன் நின்றுவிடாது, தமிழையும் ஆட்சி மொழியாக்கக்கோரி கம்யூனிஸ்ட் கட்சி இயக்கமொன்றை மக்கள் மத்தியில் ஆரம்பிக்க முனைந்தது. அதன்பொருட்டு யாழ்ப்பாணம் மாநகர சபை மண்டபத்தில் கூட்டமொன்றைக் கூட்டி இதர அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தது. இந்த அழைப்புக்கு பதிலளித்த தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம், "ஆங்கிலமே தொடர்ந்தும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்" என்பதே தனது கட்சியின் கொள்கை என்பதால், கம்யூனிஸ்ட் கட்சி கூட்டிய கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என மறுத்துவிட்டார். பொன்னம்பலத்தின் முடிவை அறிந்த தமிழரசுக் கட்சியினர், "தமிழ் காங்கிரஸ் கலந்து கொண்டால் மட்டுமே நாமும் கலந்து கொள்வோம்" எனத் தெரிவித்து அவர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ள மறுத்துவிட்டனர். இப்படிச் சொன்ன இந்த இரு தமிழ் கட்சியினரும்தான், வெளியே "ஐயோ சிங்கள ஆட்சியாளர்களால் தமிழ் பறிபோகிறது" எனக் கூச்சல் போட்டு தமிழ் மக்களிடம் தொடர்ந்தும் வாக்கு வேட்டையாடி வந்துள்ளனர்.

**நன்றி - வானவில்**

# சக்கர நாற்காலியில் பாராளுமன்றத்திற்குச் சென்ற இரா. சம்பந்தனை விமர்சித்து சமூக ஊடகங்களில் "பதிவுகள்"




செவ்வாய்கிழமை 6ம் திகதி ஒரு சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்து தனது உதவியாளர்கள் சகிதம் பாராளுமன்றத்திற்குச் சென்ற இரா. சம்பந்தனுக்கு எதிராக சமூக ஊடகங்களில் "விமர்சனங்கள்" முன்வைக்கப்படுகின்றன என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

"இவ்வளவு கஸ்டப்பட்டு மக்களுக்கு சேவையாற்ற விரும்பியவர் கடந்த மைத்திரி - ரணில் காலத்தில் எவ்வளவு சேவைகள் செய்திருக்கலாமே" என்று பலர் முகநூலிலும் டுவிட்டர் பக்கங்களிலும் பதிவிட்டுள்ளனர்.

மேலும் சிலர் "சம்பந்தன் ஐயா, சம்பளத்திற்கும் சலுகைக்குமாகவே இவ்வாறு சிரமங்களோடு பாராளுமன்றத்திற்கு வருகின்றார்" என்றும் "இவருக்கு வாக்களித்த திருகோணமலை வாக்காளர்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும்" என்றும் கேள்விகளை முன்வைத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் நீண்ட நாட்களுக்குப் பின்னர் செவ்வாய்கிழமை சக்கர நாற்காலியில் நாடாளுமன்றத்திற்கு சென்றார். இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் "குள்ள நரி" ரணில் விக்ரமசிங்கவின் உதவியுடன் அவர் தனது ஆசனத்தில் அமர்ந்துள்ளார். இதைப் பார்த்து சிலர் கைகொட்டிச் சிரித்துள்ளார்கள்.

நாடளுமன்றம் செவ்வாக்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் காலை 10 மணிக்கு கூடிய வேளையில் சபை அமர்வுகள் ஆரம்பித்து சிறிது நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சக்கர நாற்காலியில் பாராளுமன்ற உதவியாளர்களால் சபைக்கு அழைத்துச் செல்லப்பட்டாடர்.

ஆனால் சக்கர நாற்காலியில் வருகை தந்தால் எதிர்க்கட்சித் தரப்பில் கடைசி வரிசையிலேயே அமர்ந்திருக்க முடியும் என்ற ஏற்பாடுகள் அங்கு கடைப்பிடிக்கப்பெற்று வருகின்றன.

அதற்கு விரும்பாத சம்பந்தன் எம்.பி தனது ஆசனத்தில் அமர வேண்டும் என கூறியதால் அவரை வெளியே அழைத்துச் சென்ற உதவியாளர்கள் அவரை கைத்தாங்கலாக மீண்டும் சபைக்குள் அழைத்து வந்தனர்.

தனது ஆசனத்துக்கு செல்வதற்கு சம்பந்தன் பெரும் சிரமப்பட்டே சென்றார். சம்பந்தன் உள்ளே வரும்போதே அவரது அடுத்த ஆசனத்தில் அமர்ந்திருந்த ரணில் விக்ரமசிங்க சம்பந்தன் வருவதை அவதானித்து அவருக்கு உதவும் வகையில் சம்பந்தன் அமர வசதியாக அவரது ஆசனத்தை ஒழுங்குபடுத்திக் கொடுத்தார்.

இந்தச் செய்தி தற்போது சமூக ஊடகங்களில் மிக வேகமாகவே ஊசலாடுகின்றது என்பதையும் பலர் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

# மகிந்த, பசில், கோட்டாபாய ஆகியோரை "மும்மூர்த்திகள்" என்று வர்ணித்துள்ள முகநூல் அன்பர்கள்



இலங்கையின் புதிய நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட பசில் ராஜபக்ஷ வியாழக்கிழமை (8) காலை பாராளுமன்றத்தில் சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராகவும் பதவி பிரமாணம் செய்துக் கொண்டார். அவருக்கு முன்னர் இந்தப் பதவியை வகித்து வந்தவர் அவரது சகோதரர் மகிந்த ராஜபக்ச என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி கோட்டாபாய அலுவலகத்தில் நிதி அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் அங்கு கோட்டாபாய ராஜபக்ச, மகிந்த ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோர் கூட்டாக நின்று எடுத்துக்கொண்ட படத்தைப் பார்த்து முகநூல்களில் தமிழ் பேசும் அன்பர்கள் அவர்களை "மும்மூர்த்திகள்" என்று வர்ணித்து, இந்த மூவரால் நாடு மூழ்கப்போகின்றதா? அன்றி எழுந்து நிற்கப் போகின்றதாக? என்ற கேள்விகளையும் பதிவிட்டுள்ளனர்.

**- மன்னார் நிருபர் (8-07-2021)**





உலக செய்திகள்
World News

# "அமெரிக்காவில் கொரோனாவால் இறந்தவர்களில் 99 சதவீதம் பேர் தடுப்பூசி போடாதவர்கள்"

அமெரிக்காவில் கொரோனாவால் இறந்தவர்களில் 99% பேர் தடுப்பூசி போடாதவர்கள் என அந்நாட்டு தொற்று நோய் நிபுணர் கூறியுள்ளார்.

உலக நாடுகளில் கொரோனாவால் உயிரிழந்தவர்களில் அமெரிக்கா முதலிடத்தை பெற்றுள்ளது. அமெரிக்காவில் கொரோனாவால் இதுவரை 6 லட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் தொற்று நோய் நிபுணர் டாக்டர் அந்தோணி பாசி தெரிவித்துள்ளதாவது: அமெரிக்காவில் கொரோனா பெருந்தொற்றால் உயிரிழந்தவர்களில் 99.2% பேர் கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி போடாதவர்கள். கொரோனாவுக்கு எதிராக நம்மை காத்துக்கொள்ள தடுப்பூசி இருக்கிறது.

ஆனாலும், முழுமையாக தடுப்பூசி நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது ஏன் என்று தெரியவில்லை. அமெரிக்காவில் அனைவருக்கும் போடும் அளவிற்கு தடுப்பூசி கைவசம் உள்ளது. இருந்தபோதிலும், சிலர் தடுப்பூசிக்கு எதிராக இருக்கின்றனர்.

இதனால் கருத்து வேறுபாடுகளை மக்கள் விடுத்து, அனைவருக்கும் எதிரி கொரோனா வைரஸ் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.





# ஹைட்டி நாட்டின் ஜனாதிபதி ஜோவெனல் மோஸ் ஆயுதம் தாங்கி குழுவினரால் படுகொலை செய்யப்பட்டார்

ஹைட்டி நாட்டின் ஜனாதிபதி ஜோவெனல் மோஸ் ஆயுதம் தாங்கி குழுவினரால் படுகொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. தனது உத்தியோக பூர்வமான வாசஸ்த்தலத்தை விட்டு வெளியேறி தனது சொந்த இல்லத்தில் தங்கியிருந்தபோதே இந்த படுகொலைத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் அதிகளவில் பயங்கரமான ஆயுதங்களை ஏந்திய குழுவினரால் மிகவும் திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஜோவெனல் மோஸ் படுகொலை செய்யப்பட்டார். தாக்குதல் நடத்தியவர்கள் அடையாளம் காணப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரது படுகொலைக்குப் பின்னர் இடைக்கால பிரதம மந்திரியாகப் பதவியேற்றுள்ள கிளாட் ஜோசப் என்பவரின் அறிவிப்பின்படி ஹைட்டிய ஜனாதிபதி ஜோவெனல் மோஸ், கடந்த புதன்கிழமை தனது சொந்த வீட்டில் நன்கு திட்டமிடப்பட்ட வகையில் ஒரு குழு உறுப்பினர்களால் படுகொலை செய்யப்பட்டார் என்று அறிவித்துள்ளார்.

ஜோவெனல் மோஸ், நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக ஜனாதிபதியாக பணியாற்றினார். இந்த தாக்குதலில் அவரது மனைவி மார்ட்டின் மோஸ் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் பல பிரமுகர்கள் ஜோவெனல் மோஸ், பற்றிய கருத்துக்களை ஊடகவியலாளர்களோடு பகிர்ந்து வருகின்றார்கள்.

ஹைட்டிய - கனேடிய ஆர்வலரும் மெக்கில் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு பற்றிய சிறப்பு ஆலோசகருமான ஜீன் செயிண்ட்-வில் இவர் பற்றி தெரிவிக்கையில், "மோஸ் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட ஹைட்டிய ஜனாதிபதி அல்ல" "கடந்த தசாப்தத்தில் ஹைட்டியில் என்ன நடந்தது என்பதை பகுப்பாய்வு செய்யும் பெரும்பாலான மக்கள் அந்நாட்டில் வெளிநாடுகளின் தலையீட்டால் தங்கள் சுதந்திரத்தை இழந்துவிட்டார்கள் என்பதை உணர்கிறார்கள். 2004 முதல் வெளிநாட்டு, ஆக்கிரமிப்பு சக்திகளால் தீவிரமாகக் கட்டுப்படுத்தப்படும் மோசடி தேர்தல்களை எமது மக்கள் தொடர்ந்து அனுபவித்து வருகின்றார்கள்" என்றார்.

ஹைட்டியின் நவீன அரசியல் வன்முறை மற்றும் வெளிநாட்டு தலையீட்டைக் கற்பிக்கும் டொராண்டோ பல்கலைக்கழகத்தின் கரீபியன் ஆய்வுகளின் உதவி பேராசிரியரான கெவின் எட்மண்ட்ஸ், கொல்லப்பட்ட ஜனாதிபதி மோஸ் ஒரு "வரலாற்று ரீதியாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட "மிகவும் சர்ச்சைக்குரிய மற்றும் அதிகளவில் செல்வாக்கற்ற ஜனாதிபதி" என்றும் கூறினார். தகுதியான மக்களில் 10 சதவீதத்துக்கும் குறைவானவர்களே அவருக்கு வாக்களித்தனர். ஆனால் அவரே தனது வெற்றியை அறிவித்துவிட்டு தொடர்ந்தும் மக்கள் விரும்பாத ஜனாதிபதியாக இருந்தார்" என்றார். மேலும் ஜனாதிபதி மோஸ் "2018 முதல் தனது ஆட்சிக்கு எதிரான போராட்டங்களைத் தடுக்க தொடர்ச்சியான வன்முறை மற்றும் அடக்குமுறையைப் பயன்படுத்தினார்" என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.



தமது நாட்டின் ஜனாதிபதி படுகொலை செய்யப்பட்ட நிலையில் இப்போதே, ஹைட்டியில் இருந்து வெளிவரும் செய்திகள் பலவாறாக உள்ளன என்று எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

"கதை என்னவென்றால், படுகொலை செய்ய அவசர அவசரமாக வந்தவர்கள் ஆங்கிலம் மற்றும் ஸ்பானிஷ் மொழிகளில் பேசினர், அவர்கள் போதைப்பொருள் வர்த்தகம் சார்ந்த வர்த்தகம் செய்யும் மாபியா கும்பல்களின் ஆட்களாக இருக்க இருக்கலாம்" என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹைட்டியிலும் மற்றும் வெளிநாட்டிலும் கூலிப்படையினர் இதற்கு முன்னர் "மிகவும் பிரபலமான ஜனாதிபதிகளையே பதவியிலிருந்து அகற்றியோ அல்லது நீக்கி இருக்கின்றார்கள் அதாவது ஹைட்டியின் முதல் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி ஜீன் - பெர்ட்ராண்ட் அரிஸ்டைட், ஆட்சி கவிழ்ப்பைத் தொடர்ந்து 1991ல் அமெரிக்காவிற்கு நாடுகடத்தப்பட்டார், அவர் 1994ல் மீண்டும் ஆட்சிக்கு வந்தார்" என்றும் ஹெய்டியில் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட சிரேஸ்ட பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதற்கிடையில் ஜனாதிபதி ஜோவனல் மோஸின் "கொடூரமான படுகொலை" என்று போப்பாண்டவர் பிரான்சிஸ் கூறியுள்ளார். தொடர்ந்து போப் பிரான்சிஸ் அவர்கள் வியாழக்கிழமை தனது இரங்கலை ஹைட்டி நாட்டின் அரசிற்கு அனுப்பியுள்ளார்.

குடல் அறுவை சிகிச்சையிலிருந்து ரோம் மருத்துவமனையில் குணமடைந்து வரும் போப்பாண்டவர் பிரான்சிஸ் அவர்கள் "நெருக்கடிகளையும் மோதல்களையும் தீர்ப்பதற்கான ஒரு வழியாக அனைத்து வகையான வன்முறைகளையும் கண்டித்தார்" என்று வத்திக்கான் மாநில செயலாளர் கையெழுத்திட்ட பத்திரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹைட்டிய மக்களுக்காகவும், கொல்லப்பட்ட ஜனாதிபதியின் மனைவி மார்ட்டின் மோஸுக்காகவும் தான் பிரார்த்தனை செய்து வருவதாகவும், புதன்கிழமை அவர்களது வீட்டில் நடந்த தாக்குதலில் படுகாயமடைந்தார் என்றும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியை கொல்வதற்காகச் சென்றவர்களோடு நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையின் போது, நான்கு சந்தேக நபர்களை ஹெய்ட்டி நாட்டு பொலிசார் கொன்றனர் என்றும் மேலும் இருவரை தடுத்து வைத்துள்ளனர் என்றும் மற்றும் தற்போது பதவியேற்றுள்ள பிரதமர் தெரிவித்துள்ளார்.

பிரதம மந்திரி கிளாட் ஜோசப் ஹைட்டியின் தலைமையை ஏற்றுக்கொண்டார் என்றும் மோஸ் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இரண்டு வார கால ஊரடங்கை அவர் அறிவித்தார், ஹெய்ட்டி என்பது உலகில் வறுமை, வன்முறை மற்றும் அரசியல் ஸ்திரமின்மை ஆகியவை அதிகம் நிலவும் ஒரு நாடு என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.






# ஜிஎஸ்பி+: "அரசு அறிவிலித்தனமாகச் செயல்படுகிறது"

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)




ஐ நா மனித உரிமைகள் ஆணையம் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்றம் கொடுத்த அழுத்தம் காரணமாக, "அடிக்க அடிக்க அம்மியும் நகரும்" என்பதற்கு ஏற்ப-பன்னாட்டு அரங்கில் வாங்கிய அடியின் காரணமாக சில மாறுதல்களை ஏற்படுத்த உதட்டளவில் இசைவு தெரிவித்துள்ளது. பயங்கரவாத தடைச் சட்டம், மனித உரிமைகளைப் பேணுதல், அரசியல் கைதிகள் விடுதலை என்று சில வி'யங்களில் பம்மாத்து காட்ட அரசு எத்தனிக்கிறது.

ஆனால் அரசு இதய சுத்தியுடன் எதையும் செய்யாது, செய்ததில்லை என்பதே யதார்த்தமாக இருந்துள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்தால் ஒரு புறம் சர்வதேசத்தின் அபகீர்த்தியை சம்பாதித்துக் கொண்டுள்ள இலங்கை, ஜி எஸ் பி+ விஷயத்தில் வெளிப்படையாக ஏதும் செய்யாவிட்டால் பறிபோகும் நிலையில் இருக்கும் சலுகையை தக்கவைத்துக் கொள்ள முடியாது.

அது பல நாடுகள் தொடர்புடைய விஷயம். ஐரோப்பிய நாடாளுமன்ற தீர்மானம் அந்த சலுகையைத் இலங்கைக்கு அளிக்கும் பல நாடுகள் மீதான அழுத்தத்தை அதிகரித்துள்ளது. ஜி எஸ் பி+ தக்கவைத்து கொள்ள மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுவது மிகவும் அவசியமாகும்.

ஆனால் இலங்கை அரசோ ஐரோப்பிய சந்தைகள் குறித்த யதார்த்த நிலையை உணரலாம் மேம்போக்காக செயல்படுகின்றன என்று தொழிற்சங்கத் தலைவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அரசு தொழிலாளர்களின் உரிமைகளைப் புறக்கணிக்க அரசு தொடர்ந்து முயல்கிறது என்று கவலை வெளியிடப்பட்டுள்ளது.


ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், சிறுபான்மையினரை அடக்குவதற்கு பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவது குறித்து விசேட கவனம் செலுத்தியது.

ஊடகங்களை அடக்குதல், சட்டத்தின் ஆட்சி இல்லாமை, காணாமல் போதல், கைதின் போதான கொலைகள், குழந்தைத் தொழிலாளர்கள் மீதான சுரண்டல் மற்றும் தொழிலாளர் உரிமைகளை பறித்தல் உள்ளிட்ட பல்வேறு மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை பரவலாக கண்டனத்திற்கு ஆளானது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்வது உட்பட மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான அதன் வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால், இலங்கையை ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான உதவிகளை இழக்கும் அபாயங்கள் ஏற்படுமெ‌ன, ஐரோப்பிய நாடாளுமன்ற தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.பி+ வரிச் சலுகை ரத்து செய்யப்படும் என ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் எச்சரிக்கையைத் தொடர்பாக கடந்த வாரம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது பயங்கரவாத தடுப்பு சட்டத்தை ரத்து செய்யும் விடயத்தில் தலையீடு செய்வதை தொழிற்சங்க தலைவர்கள் தவிர்க்க வேண்டும் என்று அரசு தரப்பு கூறியதாக செய்திகள் கசிந்தன.

மனித உரிமைகள் மீறல் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்வது ஆகிய விடயங்கள் குறித்து மாத்திரமே ஐரோப்பிய நாடாளுமன்றம் நிபந்தனைகளை வகுத்துள்ளதாக தொழில்துறை அமைச்சர் கூறியபோது, அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவென்றால் ஐரோப்பிய ஒன்றியத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்யவுள்ளதாக தொழிற்சங்கத் தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.




ஐரோப்பிய ஒன்றிய தீர்மானம் தொழிற்சங்கத் தலைமையின் முறைப்பாடு எதுவும் இன்றி தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தியுள்ளது, நாட்டில் ஆயத்த ஆடை தொழிற்சாலையில் பணியாற்றுவோர் எவ்வித பிரச்சனைகளையும் எதிர்நோக்கவில்லை என்று அரசு தரப்பு கூறியதாக பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தொழிற்சங்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜி எஸ் பி+ சலுகையை நாட்டின் பாதுகாப்பு விஷயங்களுடன் தொடர்பு படுத்துவது சரியான அணுகுமுறையாக இருக்காது என்று அரசு கருதுவதாகக் கூறப்படுகிறது. இதை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தாங்கள் விளக்கவுள்ளதாகவும் அரச தரப்பு எண்ணுகிறது என்று கசிந்த தகவல்கள் மேலும் கூறுகின்றன.

சுதந்திர வர்த்தக வலயங்கள் உள்ளிட்ட தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் தொழில் உரிமைகளை மேலும் வலுப்படுத்தவும், முதலீட்டு ஊக்குவிப்பு வலையத்தில் நடைமுறைப்படுத்தப்படும் தரநிலைகள் மற்றும் சர்வதேச சட்டத்தின்படி தொழிலாளர் உறவுகளுக்கான நடத்தை விதிகளைத் தயாரிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஐரோப்பிய நாடாளுமன்றத் தீர்மானத்தில் தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுவது குறித்து "எந்தவொரு பிரச்சினையும் எழுப்பப்படவில்லை" எனக் குறிப்பிட்டுள்ள தொழில் அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா "தொழிலாளர் உரிமைகள் குறித்து எதுவும் பேசுவதற்கில்லை" எனவும் கூறியுள்ளார்.

தொழில் அமைச்சரின் கருத்துக்களுக்குப் பதிலளித்த சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொது சேவை ஊழியர் சங்கத்தின் இணை செயலாளர் அன்டன் மார்கஸ், அமைச்சர்கள் இவ்வாறு வாதிட்டால், சர்வதேச அமைப்புகளிடம் ஆதாரத்துடன் தொழிலாளர்களில் நிலை எடுத்துச் செல்லப்படும் என்று பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட மூத்த தொழிற்சங்கத் தலைவர் ஆண்டர் மார்கஸ் எச்சரித்துள்ளார்.

"இதற்கமைய, ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையுடன் தொடர்புடைடைய, இலங்கை அரசு கையெழுத்திட்ட சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) உடன்படிக்கையை யதார்த்தமாகவும் சட்டரீதியாகவும் நடைமுறைப்படுத்த பன்னாட்டு அமைப்புகள் தலையிட்டு அதை உறுதிப்படுத்துமாறும் கோரப்படும்" என அன்டன் மார்கஸ் கூறியுள்ளார்.

2017 இல் மஹிந்த ராஜபக்ச ஆட்சியின் போது இழந்த ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையை மீண்டும் பெறுவதற்கு, உதவிய தொழிற்சங்கங்களிடம் தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்படும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் காப்பாற்றப்படவில்லை என்று அரசுடன் நடைபெற்ற கூட்டத்தில் பங்குபெற்ற மற்றொரு மூத்த தொழிற்சங்கவாதி லீனஸ் ஜயதிலக தெரிவித்தார். கிடைக்கப்பெற்ற வரிச்சலுகையை முதலாளிகளும் அரசிலுள்ள சிலருமே அனுபவித்து வருகின்றனர், உழைக்கும் தொழிலாளிகள் தொடர்ச்சியாக ஏமாற்றப்படுகின்றனர் என்கிறார் ஜயதிலக.

"இப்போது வரை, முதலாளிகள் மட்டுமே ஜி.எஸ்.பி பிளஸின் மூலம் பயனடைந்துள்ளனர். மறுபுறம், இந்த சலுகையின் காரணமாக, அந்நிய செலாவணி இருப்புக்கள் மேம்பட்டுள்ளதால் நாட்டின் ஏற்றுமதி வருவாய் அதிகரிப்பால் அரசாங்கங்கள் பயனடைந்துள்ளன. அவ்வளவுதான். தொழிலாளர்களுக்கு எதுவுமில்லை. இது ஒரு அநீதி என்றும் அதைச் சரிசெய்ய வேண்டும் என்றும் அப்போதைய தொழில் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தொழிற்சங்க பிரதிநிதிகள் முன்னிலையில் ஒப்புக்கொண்டார். ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையின் 50% நன்மைகளை இந்த துறையில் உள்ள ஊழியர்கள் பெற வேண்டும் என அவர் கூறினார். இந்த சலுகையால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சமூக-பொருளாதார நிவாரணம் தொடர்பிலான இணக்கத்துடன் சர்வதேச தொழிலாளர் அமைப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டது, ஆனால் தொழிலாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் எந்த சட்டத்தையும் கொண்டு வரவில்லை" என லீனஸ் ஜயதிலக கூறியுள்ளார்.

தொழிலாளர்களின் உரிமைகளையும் நாட்டில் நிலவும் இதர மனித உரிமை மீறல்களையும் அரசு பிரித்துப் பார்த்து பிளவு ஏற்படுத்தி அதில் இலாபம் அடைய விழைகிறது என்று தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன. தொழிலாளர் உரிமைகளும் அடிப்படை மனித உரிமைகளின் ஒரு பங்கு என்பதை அரசு ஏற்க மறுப்பது அதன் அறிவிலித்தனமான பிடிவாதத்தைக் காட்டுகிறது என்று அரசுடன் நடைபெற்ற கூட்டத்திற்குப் பிறகு தொழிற்சங்கத் தலைவர்கள் தெரிவித்தனர்.



அரசு பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரை மட்டுமல்ல உழைக்கும் மக்களை அடக்குவதற்கும் ஏராளமான சந்தர்ப்பங்களில் பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டும் தொழிற்சங்கத் தலைவர்கள், பயங்கரவாத தடைச் சட்டம் ரத்து செய்யப்பட்டால் மட்டுமே தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலைகளுக்கும் சிறுபான்மையினருக்கும் சம்பந்தம் இல்லை என்று அரசு கருதுகிறது. எனவே சிறுபான்மையினருக்கு எதிரான ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் பயங்கரவாத தடைச் சட்டத்தை ஆயத்த ஆடைத் தொழிலாளர்கள் விஷயத்துடன் தொடர்புபடுத்தக் கூடாது என்று அரச தரப்பில் ஒரு கருத்து நிலவுகிறது.

ஆயத்த ஆடைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பெரும்பாலும் தென்னிலங்கை சிங்கள மக்களே எனவே அவர்களுடன் சிறுபான்மையினரின் உரிமைகளை முடிச்சுப் போடக் கூடாது என்று அரசு கூறுவது அறிவிலித்தனம் மட்டுமல்ல தீய எண்ணம் கொண்டதும் ஆகும் என்கிறார்கள் தொழிற்சங்கவாதிகள். உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் செயல்படும் ஆடைத் தொழிற்சாலையில் 90% அதிகமானவர்கள் தமிழர்கள். இது தவிர வடக்கு கிழக்குப் பகுதிகளில் மேலும் சில ஆடைத் தொழிற்சாலைகளை தொடங்குவதற்கான திட்டமும் இலங்கையில் உள்ளது. அப்படியான சூழலில் தொழிலாளர்களின் உரிமைகளுக்கும் சிறுபான்மையினருக்கும் தொடர்பில்லை என்று அரச தரப்பில் எண்ணுவது ஏற்புடையது அல்ல என்கிறார் அந்தக் கூட்டத்திற்குச் சென்றவர்கள்.

"ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கமே ஜனநாயகத்தின் அடிப்படை. ஆனால் இன்று தொழிலாளர் வர்க்கம் மிகவும் பலவீனமான அமைப்பு நிலையில் உள்ளது.

மொத்த தொழிலாளர் வர்க்கத்தில் 7% மாத்திரமே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. நாம் பேசும் ஏற்றுமதி துறையில் உள்ள ஊழியர்களை பார்த்தால், 5% கூட ஒழுங்கமைக்கப்படவில்லை என்றார் ஆண்டன் மார்க்கஸ். அதுவே இந்த ஆயத்த ஆடைத்துறையின் மிகப்பெரிய பலவீனமாகவும் பேரம் பேச முடியாத நிலைக்கும் காரணமாக அமைந்துள்ளது.


இணக்கம் தெரிவிக்கப்பட்ட மனித உரிமைக் கடமைகளை இலங்கை நிறைவேற்றவில்லை என்பதை நிரூபித்தால், தற்போதுள்ள ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை இடைநிறுத்தப்படும் அபாயம் காணப்படுகின்றது.

ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையைத் தொடர்ந்து வழங்குவது குறித்த தீர்மானத்துடன் இணைந்ததாக, ஐரோப்பிய ஒன்றியம் இந்த வருடம் நவம்பரில் இலங்கையின் மனித உரிமை நிலைமையை மதிப்பாய்வு செய்யும். சிறுபான்மையினர் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை கடமைகளைச் செயல்படுத்துவதையும் இது உள்ளடக்கியுள்ளது.

மனித மற்றும் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சர்வதேசத்திற்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதியை மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதால் கடந்த 2010 பிப்ரவரி மாதம் இந்தச் சலுகை இடைநிறுத்தப்பட்டது. பின்னர் "நல்லாட்சி அரசாங்கம்" என்று தங்களை அழைத்துக் கொண்ட அரசு மனித உரிமைகள் தொடர்பான 27 சர்வதேச உடன்படிக்கைகளைச் செயல்படுத்த உத்தரவாதம் அளித்த, நம்பிக்கையின் அடிப்படையில், 2017 மே மாதம் ஜிஎஸ்பி பிளஸ் மீண்டும் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றது.

சீனாவுக்கு அடுத்ததாக ஐரோப்பா இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக பங்காளியாகும். ஐரோப்பா கடந்த வருடம் இலங்கையிலிருந்து 21 கோடி யூரோ பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராஜபக்சக்கள் தமது சொந்த இறுமாப்புகளுக்காக விட்டுக் கொடுக்காத நிலையைத் தொடர்ந்தால், அது பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பது புதிய விஷயமல்ல. அதன் தாக்கம் உள்நாட்டில் தெரியும். ஆயத்த ஆடைகளின் தயாரிப்பு முடங்கிப் போனால், நாட்டின் பொருளாதாரம் பெரியளவில் பாதிக்கும். இவற்றுக்கும் மேலாக இவர்கள் வாக்குக்காக சார்ந்திருக்கும் "பௌத்த சிங்களவர்களே" ஆயிரக்கணக்கில் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசு ஏன் உணரவில்லை?



# கரோனா 3வது அலையைத் தடுக்க வேண்டுமென்றால் அது தடுப்பூசியால் மட்டும்தான் முடியும்: புதுச்சேரி சுகாதாரத்துறைச் செயலர் பேட்டி



கரோனா இன்னும் நம்மை விட்டுப் போகவில்லை. 3வது அலையைத் தடுக்க வேண்டுமென்றால் அது தடுப்பூசியால் மட்டும்தான் முடியும் என்று புதுச்சேரி சுகாதாரத்துறைச் செயலர் அருண் தெரிவித்துள்ளார்.புதுச்சேரியை கரோனா இல்லாதமாநிலமாகமாற்றும் நோக்கில் 100 சதவீதத் தடுப்பூசி செலுத்துதலைத் தீவிரப்படுத்தும் வகையில் புதுச்சேரி அரசு சுகாதாரத் துறை சார்பில் தடுப்பூசி திருவிழாக்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக புதுச்சேரியில் கரோனா தடுப்பூசித் திருவிழா வரும் 10ம் தேதி முதல் 12ம் தேதி வரை 3 நாட்களுக்கு அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட நிலையங்களில் நடைபெற உள்ளது.இந்தத் தடுப்பூசித் திருவிழாவைச் சிறப்பாக நடத்துவதற்காகச் செய்யப்பட்டுள்ள ஏற்படுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் உள்ள கருத்தரங்கக் கூடத்தில் இன்று (ஜூலை 8) நடைபெற்றது. புதுச்சேரி சுகாதாரத்துறைச் செயலர் அருண் தலைமை தாங்கினார்.இக்கூட்டத்தில் அரசு செயலர்கள் உதயகுமார், வல்லவன், துணை மாவட்ட ஆட்சியர் வடக்கு கந்தசாமி, துணை மாவட்ட ஆட்சியர் தெற்கு கிரிசங்கர், சுகாதாரத்துறை இயக்குநர் மோகன் குமார், சுகாதார இயக்ககத்தின் இயக்குநா ஸ்ரீராமுலு, போக்குவரத்து ஆணையர் சிவகுமார் மற்றும் சுகாதாரத்துறை, வருவாய்த்துறை உள்ளிட்ட துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.


இக்கூட்டத்தில் கரோனா பெருந்தொற்றின் மூன்றாவது அலையைத் தடுக்க தடுப்பூசி செலுத்திக் கொள்வதன் அவசியம் குறித்துப் பொதுமக்களிடையே தீவிர விழிப்புணர்வை ஏற்படுத்துவது, கடந்த இரண்டு தடுப்பூசி திருவிழாக்களைப் போல இந்தத் தடுப்பூசித் திருவிழாவையும் மக்களின் ஆதரவோடு வெற்றிகரமாக நடத்துவது, தற்போது கையிருப்பில் உள்ள தடுப்பூசிகள், தடுப்பூசித் திருவிழாவைச் சிறப்பாக நடத்தத் தேவையான மருத்துவ உபகரணங்களைத் தயார் நிலையில் வைத்திருப்பது, முகாம் நடைபெறும் மையங்களில் மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது ஆகியவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.கூட்டத்துக்குப் பின்னர் சுகாதாரத்துறைச் செயலர் அருண் கூறியிருப்பதாவது:''கரோனா தொற்றைக் கட்டுப்படுத்த புதுச்சேரி அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்பு ஒருநாள் தொற்று 2 ஆயிரம் வரை வந்தது. அது இன்று 200க்குள் உள்ளது. இதன் மூலம் 90 சதவீதம் வரை குறைந்துள்ளது.ஆனாலும், கரோனா இன்னும் நம்மை விட்டுப் போகவில்லை.

3வது அலையைத் தடுக்க வேண்டுமென்றால் அது தடுப்பூசியால் மட்டும்தான் முடியும். இதற்காகத்தான் மற்றொரு தடுப்பூசித் திருவிழா நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரியில் முதல் டோஸ் தடுப்பூசி 4.75 லட்சம் பேருக்குப் போட்டுள்ளோம். இரண்டாவது டோஸ் 60 ஆயிரம் பேருக்குப் போட்டுள்ளோம். இதன் மூலம் 45 முதல் 50 சதவீதம் பேர் வரை தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இதுவரை எந்தவிதமான உயிரிழப்பும், ஒவ்வாமையும் ஏற்படவில்லை.இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்ட ஆய்வில் தீவிரத்தன்மையுடன் அனுமதிக்கப்பட்ட 97 சதவீதம் பேர் தடுப்பூசி போடாதவர்கள் என்பது தெரியவந்தது. எனவே, தடுப்பூசி போட்டால் கரோனாவைத் தடுக்கலாம்.

தீவிரத் தன்மைக்குச் செல்லாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.ஆகவே, அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். தற்போது 70 ஆயிரம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன. தடுப்பூசித் திருவிழா ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மையங்களில் நடைபெறும்.''இவ்வாறு அருண் தெரிவித்தார்.

துணை ஆட்சியர் (தெற்கு) கிரிசங்கர் கூறும்போது, ''கரோனா முதல் அலைக்கும், இரண்டாம் அலைக்கும் வித்தியாசம் என்னவென்றால், முதல் அலையில் நகரத்து மக்களும், இரண்டாவது அலையில் கிராமப்புற மக்களும் அதிக அளவில் பாதிக்கப்பட்டனர். ஆகவே, கரோனா தடுப்பூசி போடாமலும், கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்காமலும் இருந்தால் 3வது அலை வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதில் அதிக அளவில் கிராமப்புற மக்கள் பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. ஆகவே, அனைத்து மக்களும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். குறிப்பாக கிராமப்புற மக்கள் தடுப்பூசியை முன்வந்து போட்டுக்கொள்ள வேண்டும்'' என்று தெரிவித்தார்.

# பாஜகவுடன் கூட்டணி; உரிய நேரத்தில் முடிவெடுப்போம்: ஜெயக்குமார் பதில்



"பாஜகவுடன் கூட்டணி தொடருமா?, தொடராதா? என்பதைத் தனிப்பட்ட ஜெயக்குமார் கூறமுடியாது. ஒட்டுமொத்தமாகக் கட்சி எடுக்க வேண்டிய முடிவு. அதுகுறித்து உரிய நேரத்தில் கட்சி முடிவெடுக்கும்'' என அதிமுக மூத்த தலைவர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். பாஜகவுடன் கூட்டணி வைத்ததால்தான் அதிமுக தோல்வியைத் தழுவியது எனக் கட்சி செயல்வீரர்கள் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் பேசியது சர்ச்சையானது.

நாங்களும் அதிமுகவுடன் கூட்டணி வைத்ததால்தான் குறைந்த இடங்களை வென்றோம் அல்லது கூடுதலாக வென்றிருப்போம் என பாஜக தலைவர்கள் பதிலடி கொடுக்க, அதிமுக பாஜக கூட்டணி தொடர்கிறது என ஓபிஎஸ், இபிஎஸ் இருவரும் கூட்டறிக்கை வெளியிட்டனர்.

இந்நிலையில் சி.வி.சண்முகம் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாஜக பொருளாளர் எஸ்.ஆர்.சேகர் போன்றோர் அதிமுக தலைமைக்குக் கோரிக்கை வைக்க, எங்களுக்கு பாஜக உத்தரவிட முடியாது என்று ஜெயக்குமார் பதில் அளித்தார்.கூட்டணி தொடர்கிறது என்று ஓபிஎஸ்இபிஎஸ் கூட்டறிக்கை விட்ட நிலையில், அதிமுகபாஜக கூட்டணி குறித்த கேள்விக்கு பதில் அளித்த ஜெயக்குமார், தேர்தல் நேரத்தில் கட்சித் தலைமை உரிய முடிவெடுக்கும் எனக் கூறியுள்ளார்.இதுகுறித்து தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு ஜெயக்குமார் அளித்த பேட்டி:கடந்த தேர்தல் தோல்வி குறித்து ஆராய வேண்டும் என்று கே.டி.ராகவன் கூறியுள்ளாரே?

தேர்தல் தோல்வி குறித்து ஆராய்வது, ஆராயாமல் இருப்பது என்பது அவர்கள் கட்சியில் எடுக்க வேண்டிய முடிவு. அதுகுறித்து நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை. ஆனால், எங்களைப் பொறுத்தவரை இது பெரிய தோல்வியே கிடையாது. எங்களுக்கும், திமுகவுக்கும் பெரிய அளவில் வாக்கு வித்தியாசம் இல்லை. நல்ல வாக்குகள்தான் நாங்கள் பெற்றுள்ளோம். வலுவான எதிர்க் கட்சியாக உள்ளோம்.அந்த அடிப்படையில் ஆளுங்கட்சியாக வரக்கூடிய சூழ்நிலையில் எப்படி அது நடக்காமல் போனது என்பதெல்லாம் அலசி ஆராயக்கூடியவைதான்.சி.வி.சண்முகம் கருத்தால் பாஜகஅதிமுக கூட்டணியில் விரிசல் ஏற்படுமா?கட்சியைப் பொறுத்தவரை கடந்த சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி வைத்தோம். தற்போது உள்ளாட்சித் தேர்தல் வர உள்ளது. அந்தத் தேர்தல் வர உள்ள நிலையில்தான் கட்சிக் கூட்டணி குறித்து முடிவெடுக்கும். அந்த நேரத்தில் வெளியில் உள்ள சில கட்சிகள் உள்ளே வரலாம். உள்ளே சில கட்சிகள் இருக்கலாம். அவர்கள் கூட வெளியேறலாம். அந்த நேரத்தில்தான் கட்சி முடிவெடுக்கும்.அதிமுக பாஜக கூட்டணி தொடருமா?தொடருமா?, தொடராதா? என்பதைத் தனிப்பட்ட ஜெயக்குமார் கூறமுடியாது. ஒட்டுமொத்தமாகக் கட்சி எடுக்க வேண்டிய முடிவு. அதுகுறித்து உரிய நேரத்தில் கட்சி முடிவெடுக்கும். இவ்வாறு ஜெயக்குமார் தெரிவித்தார்.

# திமுகவில் இணைந்தது ஏன்? 11,000 பேர் மநீமவைத் துறந்ததன் காரணம் என்ன? மகேந்திரன் பேட்டி

மக்கள் நீதி மய்யத்தின் துணைத் தலைவராக இருந்து பதவி விலகிய மகேந்திரன், இன்று திமுக தலைவர் ஸ்டாலின் முன்னிலையில் தொண்டர்களுடன் அக்கட்சியில் இணைந்தார். அத்துடன் 11 ஆயிரம் தொண்டர்கள் கொண்ட பட்டியலையும் அளித்தார். நடிகர் கமல்ஹாசன் மக்கள் நீதி மய்யம் கட்சியைத் தொடங்கியதிலிருந்து அவருடன் பயணித்தவர் மகேந்திரன். மருத்துவரான மகேந்திரன் தனி அமைப்பு ஒன்றை நடத்தி வந்தார். பின்னர் மக்கள் நீதி மய்யத்தில் இணைந்தார்.

கட்சியின் ஆரம்பக்காலத் தலைவர்களில் ஒருவராக, துணைத் தலைவராக கமலுடன் இணைந்து பயணித்தார்.கமலுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் கட்சியிலிருந்து விலகினார். இந்நிலையில், இன்று மாலை 5 மணி அளவில் கட்சி நிர்வாகிகளுடன் திமுக தலைவர் ஸ்டாலின், பொதுச் செயலாளர் துரைமுருகன்,



பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலையில் திமுகவில் இணைந்தார். திமுகவில் இணைந்தபின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த மகேந்திரன் "நான் திமுக தொண்டனாக அரசியல் பயணத்தைத் தொடங்கியுள்ளேன்.

என்னுடன் 78 நிர்வாகிகளும், 11000க்கும் மேற்பட்ட உறுப்பினர்களும் இன்று திமுகவில் இணைந்துள்ளோம். நான் யாரையும் வலுக்கட்டாயமாக திமுகவுக்கு அழைத்துவரவில்லை. அவர்களாகவே விரும்பி வந்து சுயமரியாதை இயக்கத்தில் இணைந்துள்ளனர். எங்கு தலைமை சரியாக உள்ளதோ அங்குதானே தொண்டர்கள் இணைவார்கள். நான் அரசியலுக்கு வந்தபோது செயல்பாடு அடிப்படையில் ஒரு தலைவரைத் தேர்வு செய்தேன். அவர் மீது நம்பிக்கை வைத்தேன். ஆனால், அந்த நம்பிக்கை நிறைவேறவில்லை.ஆனால், பத்தாண்டுகளாக ஆட்சியில் இல்லாத திமுக கடந்த 2 மாதங்களில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இதுவே நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த செயல்பாடு.கரோனா பெருந்தொற்று இல்லையென்றால் அனைவரும் இணையும் நிகழ்ச்சியை கோவையில் பெரிய அளவில் நடத்தியிருப்போம்" எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழக பாஜக தலைவராக அண்ணாமலை நியமனம்

தமிழக பாஜக தலைவர் எல்.முருகன் மத்திய இணை அமைச்சராகப் பொறுப்பேற்றதால், முன்னாள் ஐபிஎஸ் அதிகாரியும், தற்போதைய பாஜக துணைத் தலைவருமான அண்ணாமலை தமிழக பாஜக தலை வராக நியமிக்கப்பட்டுள்ளார்.தமிழக பாஜக தலைவராக எல்.முருகன் நியமிக்கப்பட்டார். இதே காலகட்டத்தில் விருப்ப ஓய்வுபெற்ற கர்நாடக ஐபிஎஸ் அதிகாரியும், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவருமான அண்ணாமலை பாஜகவில் இணைந்தார். பின்னர் அவர் மாநிலத் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அரவக்குறிச்சியில் போட்டியிட்ட அண்ணாமலை வெற்றி வாய்ப்பை இழந்தார். விருப்ப ஓய்வுபெற்ற ஐபிஎஸ் அதிகாரி என்பதால் மிகுந்த எதிர்பார்ப்புடன் தமிழக பாஜகவில் பிரபலமான தலைவர்களில் ஒருவராக அண்ணாமலை விளங்குகிறார். அண்ணாமலை கட்சியில் இணைந்த ஓராண்டிற்குள் அவருக்கு தமிழக பாஜக தலைவர் பதவி அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஒடுக்குமுறைக்கு எதிரான உயிராயுதங்கள்!

தமிழ் ஈழ நிலத்தில், சிங்களப் பேரினவாத அரசின் கொடுமையான ஒடுக்குமுறைகள் முடுக்கிவிடப்பட்ட போது, அதன் விளைவாக, எதிர்வினையாக தமிழீழ விடுதலைப் போராட்டம் முகிழ்ந்தது. உரிமை மறுப்பும், இனவழிப்பும் ஈழத் தமிழ் இனத்தை பலியெடுத்த சூழலில், ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டப் பயணத்தில் ஒடுக்குமுறைக்கு எதிரான மிகக் கூர்மையான ஆயுதங்காள, உயிராயுதங்களாக கரும்புலிகள் அமைப்பை தலைவர் பிரபாகரன் தோற்றுவித்தார். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கரும்புலிகளின் பங்களிப்பு மிகவும் உன்னதமானது.

ஜூலை 05 கரும்புலிகள் நாள். தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் உரிமைக்காகவும் தம்மை அர்ப்பணித்த உன்னதமான வீரர்களை நினைவுகொள்ளுகின்ற நாள். தமது சுயத்தை மறைத்து, தமது முகத்தை மறைத்து, தமது அடையாளங்களை துறந்து மிக உறுதிபடுத்த மனங்களுடன் உயிரை ஈகம் செய்த உன்னத மறவர்களை நினைவுகொள்ளுகின்ற நாள். ஈழத் தமிழ் மக்களின் நெஞ்சங்களை கதறி அழச் செய்யும் புனித நாள். தமிழர் தேசத்தின் கற்களும் உருகி கண்ணீர் விடுகின்ற நாள். இன்று எமது தேசத்தில் நினைவுகொள்ள முடியாமல் மறுக்கப்பட்ட நாள்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதல் கரும்புலியாக காற்றில் வித்தாகியவர், கப்டன் மில்லர். இவர், யாழ்ப்பாணம் வடமராட்சி நெல்லியடி மகா வித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது, ஜூலை 5ஆம் நாள், 1987ஆம் ஆண்டு தாக்குதலை நடாத்தினர். வெடி பொருட்கள் நிரப்பிய வாகனத்தை செலுத்திச் சென்று இராணுவ முகாமில் மோதி இராணுவத்திற்கு பேரிழப்பை ஏற்படுத்தினார் மில்லர். இதன் வாயிலாக தமிழ் மக்களை அழிப்பதற்கு தயார் செய்யப்பட்டிருந்த ஒப்பிரேசன் லிபேரேசன் என்ற தாக்குதல் நடவடிக்கை தடுக்கப்பட்டது.

கப்டன் மில்லர் அவர்கள், வீரச்சாவடைந்த தினமே கரும்புலிகள் தினமான அனுஷ்டிக்கப்படுகின்றது. இதேவேளை, முதல் பெண் கரும்புலியாக வீரகாவியம் ஆகியவர் கப்டன் அங்கயற்கண்ணி. இவர் ஸ்ரீலங்கா அரசின் போர்க் கப்பல் மீது காங்கேசன்துறைமுகத்தில் வைத்து தாக்குதல் நடத்தினார். வடபிராந்தியப் போரில் கட்டளையிடும் தாய்க் கப்பல்மீது தாக்குதல் நடத்தி அதனை முற்றாக அழித்தமையின் வாயிலாக ஒரு போர் நடவடிக்கையை முடக்கினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் படையணியில் பல பிரிவுகள் காணப்பட்டன. அவை விடுதலைப் புலிகளின் படைக்கட்டுமான பலமாகவும் பரிமாணம் பெற்றன.



தரைக் கரும்புலிகள், மறைமுகக் கரும்புலிகள், கடற் கரும்புலிகள், வான் கரும்புலிகள் என கரும்புலிகள் படையணி பல பிரிவுகளைக் கொண்டதுடன் பல்வேறு வகையான தாக்குதல்களையும் மேற்கொண்டது. முதல் கடற்கரும்புலிகள் என்ற வரலாற்றை மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோர் தமதாக்கிக் கொண்டனர். இவர்கள், யாழ். மாவட்டம் வல்வெட்டித்துறை கடற்பரப்பில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா கடற்படையினரின் "எடித்தாரா" கட்டளைக் கப்பல் மீது தாக்குதல் நடத்தி அதனை மூழ்கடித்தனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் முகம் அறியாத இன்னொரு படையணியாக மறைமுக கரும்புலிகள் காணப்பட்டனர். இவர்கள் தமது பெயர், முகம் போன்றவற்றை தெரியப்படுத்தாத நிலையில் நாட்டுக்காக உயிரை அர்ப்பணித்துள்ளனர். மாவீரர்களுக்கு அவர்கள், மாண்ட பின்னர், இராணுவ நிலைகள் அளிக்கப்பட்டு மரியாதை செய்யப்படுவதுடன் கல்லறைகள் எழுப்பப்படும். மறைமுக கரும்புலிகள் அவ்வாறு நினைவுகூரப்படாத வகையிலான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து, தமது தாய்நாட்டின்மீதும் மக்கள் மீதுமான பாசத்தையும் பற்றையும் வெளிப்படுத்துகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பல்வேறு படை நடவடிக்கைகள் உலகின் கவனத்தை ஈர்த்தன. ஆனையிறவு வெற்றிச் சமர், கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல் என்பன புலிகள் இயக்கத்தின் இராணுவ பலத்தை சர்வதேச நாடுகளே வியக்க வைத்தது. அதற்கு அடி நாதமாக, ஆதாரமாக கரும்புலிகள் நடத்திய தாக்குதல்கள் அமைகின்றன. அத்துடன் கரும்புலிகளின் தாக்குதல்கள், மக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையிலும் கட்டுக்கோப்புடனும், ஒழுக்கத்துடனும் மேற்கொள்ளப்பட்டவை என்பதற்கு கட்டுநாயக்கா மீதான கரும்புலித் தாக்குதல் நல்லதொரு எடுத்துக்காட்டாக வரலாற்றில் நிலைத்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையம்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவதற்குப் பிரதான காரணமாக அமைந்தது, அந்த விமான நிலையத்தில் இருந்து சிங்கள அரச படை விமானங்கள் தமிழீழ மக்கள்மீது இனவழிப்பு தாக்குதல்களை மேற்கொண்டமையே. இதனால் தமிழர் தாயகம் பேரழிப்பை சந்தித்தது. ஒவ்வொரு விமானத் தாக்குதல்களும் தமிழ் மக்களை கொத்துக் கொத்தாக அழித்தன. பள்ளிக்கூடங்கள்மீது விமானத் தாக்குதல்களை நடாத்தி பள்ளி மாணவர்களை அவர்களின் சீருருடையுடன் கொலை செய்த சம்பவங்கள் நிகழ்ந்தேறின.

இந்த நிலையில் தான், அந்த விமானங்களை அழிப்பதற்காக கட்டுநாயக்கா விமான நிலையம்மீது கரும்புலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இங்கே முக்கியமாக நோக்கப்பட வேண்டியது புலிகளின் கட்டுக்கோப்பும் ஒழுக்கமும் ஆகும். இந்த தாக்குதலின் போது சர்வதேச பயணிகளுக்கோ, ஸ்ரீலங்கா விமானப் பயணிகளுக்கோ எந்தவிதமான சிறு பாதிப்பும் ஏற்படாத வகையில் ஸ்ரீலங்கா அரசுக்கும் அதன் விமானப்படைக்கும் பாரிய இழப்பையும் பதிலடியையும் கொடுக்கும் வகையில் இந்த தாக்குதல் இடம்பெற்றமையை எவராலும் மறுக்க முடியாது.



விடுதலைப் போராட்ட வரலாற்றில் இராணுவ ரீதியாக பாரிய வளர்ச்சியைப் பெற்ற புலிகள் இயக்கம் வான்புலிகள் படையணியை ஆரம்பித்த பின்னர், வான் கரும்புலிகள் படையணியையும் உருவாக்கியது. இந்த நிலையில் முதல் வான் கரும்புலித் தாக்குதலை 20.02.2009 அன்று சிறிலங்காவின் வான்படைத் தலைமையகம் மற்றும் கட்டுநாயக்கா வானூர்த்தித் தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் வான் கரும்புலிகளான கேணல். ரூபன், லெப்.கேணல். சிரித்தரன் ஆகியோர் தற்கொலைத் தாக்குதலாக நடத்தி வரலாற்றில் பதிவாகினர்.

"பலவீனமான ஒரு இனத்தின் பலமான ஆயுதமாக கரும்புலிகள் படையணியை உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புகவசங்கள், எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்புமனிதர்கள். கரும்புலிகள் வித்தியாசமானவர்கள். அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும், பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தை காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்" என்று தலைவர் பிரபாகரன் கூறியுள்ள பொன் மொழிகள், கரும்புலிகளின் பலத்தை பறைசாற்றுகின்றன.

ஒரு போராட்டத்தில் உயிரை ஈகம் செய்வது என்பது ஒரு மகத்துவம். மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்தே, தன்னலச் சமூக அமைப்பில், பிறருக்காக வாழ்பவர்கள், நாயகர்களாக நிலைக்கின்றனர். நவீன சமூகத்தில் அத்தகைய நாயகர்கள் அருகிவிட்ட நிலையில், சரித்திரத்தின் புதிய நாயகர்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மை அடையாளப்படுத்தினர். அந்தப் பயணத்தில் ஒடுக்குமுறைக்கு எதிரான எழுச்சியாக, புரட்சியாக உயிரை ஆயுதம் ஆக்கிய கரும்புலிகளின் ஈகத்தை, இந்தப் பூமி உள்ளவரையில், மனித இனம் உள்ள வரையில் மறக்காமல் இருப்போம்.

கல்லறையற்ற, முகமற்ற அந்த வீரர்களை நினைவுகூர காற்றும் மண்ணும் கடலும் போதுமானது. சிங்கள அரசின் நினைவழிப்பு யுத்தத்திற்கு முகம் கொடுத்துள்ள ஈழத் தமிழ் மக்களாகிய நாம், புலம்பெயர் தேசங்களில் கரும்புலிகள் நாளை எழுச்சியோடு கொண்டாடுவதும், தாயகத்தில் மனக் கோயில்களில் அவர்களை பூசிப்பதும், இழந்த உரிமையைப் பெறவும், இனவழிப்புக்கான நீதியைப் பெறவும் உதவுகின்ற உயிராயுதமாகும்.

**- பார்த்தீபன்**

## வீணாவின் கவிக்கணை

அழகாய் உடுத்துவாய்,
அழகாய் பழகுவாய்,
அழகாய் வீட்டையும்
பார்த்துக்கொள்வாய்,
அழகாய் படித்து
பல பதவியும் பெறுவாய்,
நீ எத்தனை எத்தனை
பட்டங்கள் பெற்றாலும்,
பதவிகளில் அமர்ந்தாலும்,
ஏனோ பெண்ணே,
உன்னைமட்டும்,
இந்த உலகம் வானத்தில்
சிறகடித்து பறக்கவிடாமல்,
பட்டத்தைப்போல் அவர்
பிடியிலேயே வைத்திருக்கிறதோ?

# கனடாவில் ஒருவர் வங்குரோத்து அல்லது நுகர்வோர் முன்மொழிவை தாக்கல் செய்தால் அவரது தொழில்சார்ந்த பதவிக்கு என்ன நடக்கும்?



எந்தவொரு நபரும் வங்குரோத்து நிலையடைந்து விட்டதாக தாக்கல் செய்தால் அவர்களுக்கு எதுவும் நடக்காது. அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் தங்கள் வேலைவாய்ப்பை நிறுத்துவதை சட்டம் தடை செய்கிறது. ஒருவர் வங்குரோத்து நிலையை தாக்கல் செய்ததால், அவர் ஒரு புதிய வேலைக்கு விண்ணப்பிக்கும்போது அல்லது புதிய வேலையைத் தேடும்போது அந்த வேலை கிடைக்காமல் போகலாம். அந்த விடயத்தில் பல தனியார் நிறுவனங்களில் நிலைமை அவ்வளவு உதவும் வகையில் இல்லை. ஆனால் வங்குரோத்து நிலையைத் தாக்கல் செய்வதால் ஒருவர் வேலைக்கு அல்லது எதற்கும் தகுதியற்றவர் என்று அர்த்தமல்ல. ஒருவர் குறிப்பிட்ட பதவிக்கான தகுதியைக் கொண்டிருந்தால், நிறுவனம் அந்த நபரை வேலைக்கு அவசியம் அமர்த்த வேண்டும்.

ஆனால் சில சந்தர்ப்பங்களில், பதவியில் இருக்கும் ஒருவர் வங்குரோத்து நிலையை அல்லது நுகர்வோர் திட்டத்தை தாக்கல் செய்திருந்தால் நிறுவனம் புதிய பணியாளரை நியமிக்காது. அது சிலரின் மனநிலை மட்டுமே ஏற்புடையதாக இருக்கும். ஆனால் ஒருவர் வங்குரோத்து நிலையை தாக்கல் செய்திருந்தால் வேலைக்கு தகுதியற்றவர் என்று எந்த சட்டமும் கூறவில்லை. வேலைக்கு விண்ணப்பிக்க அவர்களுக்கு அனைத்து உரிமைகளும் உண்டு, குறித்த ஒருவர், அந்த வேலைக்கு தகுதியானவர் என்றால் அந்த வேலையைப் பெறுவார். வங்குரோத்து நிலையை தாக்கல் செய்த ஒருவரை பணிக்கு அமர்த்துவதில் பெரும்பாலான நிறுவனங்கள் பின் நிற்பதில்லை அவர்கள் அந்த வேலைக்கான திறன்களை மட்டுமே விரும்புகிறார்கள், குறித்த வேலைக்கு விண்ணப்பித்த ஒருவருக்கு அதற்குரிய தகுதிகள் இருந்தால் அவருக்கே அந்த வேலை கிடைக்கும்.

நுகர்வோர் திட்டத்தை தாக்கல் செயத பின்னர் பிறகு கடன் மதிப்பெண்ணில் எந்த விளைவும் ஏற்படுமா?

ஆம், வங்குரோத்து நிலை அல்லது நுகர்வோர் திட்டத்தை தாக்கல் செய்த பிறகு, அது எந்தவொரு தனி நபரின் கடன் மதிப்பையும் பாதிக்கும். கடன் மதிப்பு அறிக்கை அவருக்கு எதிர்மறையாக செல்லலாம். ஏனெனில் வங்குரோத்து அல்லது நுகர்வோர் திட்டத்தை தாக்கல் செய்வது என்பது குறிப்பிட்ட ஒருவரிடம் பணம் இல்லை என்று அவர் வங்கியிடம் கூறுகிறார். அதனால்தான் அவர் நுகர்வோர் திட்டத்தை தாக்கல் செய்கின்றார். இதன் அர்த்தம் என்னவென்றால், நுகர்வோர் கடன் தொகையையோ அல்லது எதனையோ மீளச் செலுத்த முடியாது. எனவே, கடன் மதிப்பு அறிக்கை தானாகவே எதிர்மறையாகச் செல்லலாம்.

நீண்டகால முன்னோக்கு பற்றி சிந்தியுங்கள்

கடன் மதிப்பு அறிக்கை என்பது தற்காலிகமானது, மேலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஒருவர் நல்ல கிரெடிட் ஸ்கோரைப் பெறலாம். ஆனால் யாராவது ஒருவர் கடன் தொகையை மீளச் செலுத்த முடியாத சூழ்நிலையில் இருந்தால், அவர்கள் நுகர்வோர் திட்டத்தை சிறப்பாக தாக்கல் செய்கிறார்கள். ஒருவர் எடுக்கும் ஒரு நல்ல திட்டம் அது. அவ்வாறு செய்வதன் மூலம் ஒருவர் கடன் நிவாரணம் பெற முடியும். அனைத்து கடன்களையும் செலுத்திய பிறகு ஒருவர் தங்கள் கடன் மதிப்பெண்ணை அதிகரிக்க முடியும்.

உங்கள் கிரெடிட் மதிப்பெண்ணை நன்றாகப் பராமரிக்கவும்

கடன் அட்டைகளுக்குரிய மாதாந்த கட்டணங்களை சரியான நேரத்தில் செலுத்தத் தொடங்க கடன் தொகையை செலுத்திய பிறகு. கிரெடிட் மதிப்பெண் ஒருபோதும் எதிர்மறைக்குச் செல்லாது. மேலும் வங்கி தங்கள் நுகர்வோரை எளிதில் நம்புவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு.

உங்களிடம் கடன் அல்லது கடன் சிக்கல்கள் இருந்தால் www.gta-credit.com ஐப் பார்வையிடவும் அல்லது (416) 650-1100 ஐ அழைக்கவும்.



# சீன பொதுவுடமைக் கட்சியின் தலைவர்கள் அதிகாரத்தில் நீடித்து இருப்பதற்குச் சித்தாந்தத்தை ஒதுக்கித் தள்ளியுள்ளனர்!



**- கனடா நக்கீரன்**

“**சீ**னா? அந்தப் பூதம் தூங்கட்டும், ஏனென்றால் அது எழுந்தால் உலகை அசைத்துவிடும்” என பிரான்ஸ் நாட்டின் பேரரசர் நெப்போலியன் பொனபாட் சொன்னதாக கூறப்படுகிறது. நெப்போலியன் பொனபாட்தான் (1804-14/15) பிரான்ஸ் நாட்டின் முதல் பேரரசர். பிரஞ்ச் புரட்சியில் (1789-99) அவர் முக்கிய பங்கு வகித்தார். ஒரு சாதாரண குடியில் பிறந்த அவர் இராணுவத்தில் சேர்ந்து படிப்படியாக உயர்ந்து நாட்டின் தலைவரானார்.

சீனாவைப் பற்றிய நெப்போலியனின் கணிப்பீடு இன்று பலித்து வருகிறது. மா சே துங் இருபதாம் நூற்றாண்டில் சீனாவில் நிகழ்ந்த கம்யூனிசப் புரட்சியையும் அதனைத் தொடர்ந்த உள்நாட்டுப் போரையும் முன்னின்று நடத்தினார். சீன உள்நாட்டுப் போரில், குவாமிங்டன் ஆட்சியை எதிர்த்து சீனப் பொதுவுடமைக் கட்சி நடத்திய போரில் அது வெற்றி கண்டது. இதன் பின், ஒக்தோபர் 1, 1949 அன்று வரலாறு மற்றும் பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த பீஜிங் தியனெமன் சதுக்கத்தில் இருந்து சீன மக்கள் குடியரசு புரட்சி மூலம் நிறுவப்படுவதை மாவ் அறிவித்தார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி யூலை 01, 1921 இல் தொடங்கப்பட்டது. இந்த ஆண்டு அந்தக் கட்சி தனது நூறாவது ஆண்டு நிறைவைப் பெரும் ஆரவாரத்தோடு கொண்டாடுகிறது. தொண்ணுறு மில்லியன் (9கோடி) உறுப்பினர்களைக் கொண்டுள்ள இக் கட்சியே உலகின் மிகப் பெரிய அரசியல் கட்சியாகும்.

சீனக் குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டு 72 ஆண்டுகள் கடந்து விட்டன. இன்று சீனா உலகத்தின் இரண்டாவது பெரிய வல்லரசாக - அமெரிக்காவுக்கு அடுத்த பெரிய வல்லரசாக உருவெடுத்துள்ளது. நண்டு கொழுத்தால் வளையில் இராது என்று சொல்வார்கள். சீனாவும் அப்படித்தான். அண்டை நாடான இந்தியா மற்றும் மேற்குலக சனநாயக நாடுகளோடு சீனா பகைமை பாராட்டி வருகிறது. சீனப் பொதுவுடமைக் கட்சியின் நூற்றாண்டு நிறைவையொட்டி இந்த ஆண்டு முழுவதும் தொடர் கொண்டாடங்களுக்கு அந்த நாட்டை ஆளும் கட்சி ஏற்பாடு செய்துள்ளது. இதையொட்டி கடந்த வியாழக்கிழமை (யூலை முதல்நாள்) நடைபெற்ற பிரமாண்டமான கொண்டாட்ட நிகழ்ச்சியில் பேசிய சீன நாட்டின் அதிபர் ஷி ஜின்பிங் “சீன உள்விவகாரங்களில் எப்படி நாங்கள் செயற்பட வேண்டும் போன்ற போதனைகள் வழங்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்” என்று முழங்கினார்.

கொங்காங்கில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாகவும் அங்கு சனநாயக ஆதரவுக்குரல்கள் ஒடுக்கப்படுவதாகவும் உலக அளவில் பரவலாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் வேளையில், சீன அதிபரின் இந்தக் கடுமையான எச்சரிக்கை அமெரிக்காவை குறிப்பிட்டுப் பேசுவது போல உள்ளதாக அரசியல் இராசதந்திரிகள் கருதுகிறார்கள். அண்மைக் காலமாக சீனா தனது அரசியல் மற்றும் பொருளாதாரச் செல்வாக்கை ஆசியாவில் மட்டுமல்ல அதற்கப்பாலும் உள்ள ஆபிரிக்கா மற்றும் தென் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நிலைநிறுத்தி வருகிறது.





சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் பண்டைய கால பட்டுச் சாலையை மீண்டும் புதுப்பித்து வருகிறார். இந்தப் புதிய வாணிக (சரக்கு போக்குவரத்து) பாதைகள் முக்கிய பங்கு வகிக்கிறது. பட்டுச் சாலை பொருளாதார மண்டலம் (Silk Road Economic Belt) சீனாவின் ஜியான் பிரதேசத்தில் தொடங்கி மத்திய ஆசியா, ஐரோப்பிய நாடுகளை இணைக்கிறது. மற்றோரு பட்டுச் சாலை பாகிஸ்தான் (சீனா-பாகிஸ்தான் பொருளாதார மண்டலம்), மியான்மர், இந்தியா (வங்காளதேசம், சீனா, இந்தியா, மியான்மர் பிரதேசம்) தென்கிழக்கு ஆசிய நாடுகளை (சீனாவில் குன்மிங் இல் இருந்து தாய்லாந்து, சிங்கப்பூர் ரயில் பாதை) இணைக்கிறது.
மண்டலம் (Belt) என்பது பட்டுச் சாலை பொருளாதார மண்டலம் என்பதன் சுருக்கமாகும்.

இது சீன அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உலகளாவிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு உத்தி கிட்டத்தட்ட 70 நாடுகள் மற்றும் அனைத்துலக அமைப்புகளில் முதலீடு செய்யப்படும் திட்டமாகும். இந்தத் திட்டம் சீன பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளரும் சீனத் தலைவருமான ஷி ஜின்பிங் அவர்களின் வெளியுறவுக் கொள்கையின் மையப் பகுதியாகக் கருதப்படுகிறது.

இது மேற்குப் பிராந்தியங்களின் புகழ்பெற்ற வரலாற்று வாணிக பாதைகளில் மத்திய ஆசியா வழியாக சாலை மற்றும் தொடர்வண்டி போக்குவரத்திற்கான உத்தேச நிலப்பரப்பு தென்கிழக்கு ஆசியா வழியாக தெற்காசியா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா வரையிலான இந்தோ - பசிபிக் கடல் வழிகளைக் குறிக்கும். இதன் கீழ் துறைமுகங்கள், வானளாவிய கட்டிடங்கள், தொடர்வண்டிப் பாதைகள், சாலைகள், விமான நிலையங்கள், அணைகள் மற்றும் இரயில் பாதை சுரங்கங்கள் ஆகியவை உருவாக்கப்படும்.

இதே போல் கடல் பட்டு பாதை (கப்பல் போக்குவரத்துக்காக) சீனாவின் கிழக்கு பிராந்தியத்தில் உள்ள கடற்கரை நகரமான புஜியான் மாகாணத்தில் இருந்து தொடங்கி தென்கிழக்கு ஆசிய நாடுகள், இந்த மகா சமுத்திரம் வழியாக செல்கிறது. ஒரே வாணிக மண்லம் - ஒரே போக்குவரத்துப் பாதை என்பதே, சீன அதிபர் ஜி ஜின்பிங் வெளிநாட்டு கொள்கையின் முக்கிய அம்சம் ஆகும்.

இந்த ஒரே வாணிக மண்டலம் - ஒரே போக்குவரத்துப் பாதை என்பதை 21 ஆம் நூற்றாண்டின் மார்ஷல் திட்டம் எனலாம். இதன் நோக்கம் அனைத்துலக அளவில் சீனாவை புதிய பொருளாதார மையமாக மாற்றுவதே. இதற்காகச் சீன நாட்டுத் தலைவர்கள் கோடிக்கணக்கான டொலர்களை செலவு செய்து வருகிறது. அத்துடன் இந்தத் திட்டத்தில் 60க்கும் மேற்பட்ட நாடுகள் இணைந்துள்ளன. இந்தியா உட்பட பல நாடுகள் இந்தத் திட்டத்தில் சேருவதற்குப் பாதுகாப்புத் துறை நிபுணர்கள் மத்தியில் அச்சம் உள்ளது. அண்மையில் அவுஸ்திரேலியா இந்தத் திட்டத்திலிருந்து வெளியேறியது குறிப்பிடத்தக்கது.

சீனாவின் இந்தத் திட்டங்களை அமெரிக்கா சந்தேகக் கண்களோடு பார்க்கிறது. இதனால் வணிகம், உளவு பார்த்தல், கொரோனா பெருந்தொற்று போன்ற விவகாரங்களில் சீனாவும் அமெரிக்காவும் ஆளுக்காள் குற்றம்சாட்டிக் கொண்டு வரும் வேளையில், கடந்த சில ஆண்டுகளாக மிகவும் கவனமாக கட்டியெழுப்பப்பட்டு வந்த இரு நாட்டு உறவுகள் இன்று மோசமான வகையில் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளன.

உலகில் எஞ்சியுள்ள ஐந்து பொதுவுடமை நாடுகளில் சீனா முக்கியமானது. ஏனையவை கியூபா, வட கொரியா, வியட்நாம் மற்றும் இலாவோஸ் என்பன.

சீனா பொதுவுடமை நாடென்றாலும் அதன் பொருளாதாரம் அசல் சந்தை முதலாளித்துவ கோட்பாட்டை அடித்தளமாகக் கொண்டதாகும். மா சே துங் சீனாவின் அதிபராக இருந்தவரை நாடு சோசலீச பொருளாதாரக் கொள்கையைக் கெட்டியாகப் பிடித்திருந்தது. ஆனால் அவரது மறைவுக்குப் பின்னர் எல்லாம் தலை கீழாக மாறியது.

அவருக்குப் பின் ஆட்சிக் கட்டில் ஏறிய டெங் ஷியாபிங், மாவோ ஆட்சியில் நிலவிய குழப்பமான அரசியல் இயக்கங்களின் விளைவாக நிறுவன சீர்கேடு மற்றும் பொதுவுடமைத் தத்துவத்துடன் அதிருப்தி அடைந்த ஒரு நாட்டை மாற்றியமைக்கும் பணியில் தீவிரமாக இறங்கினார். நாட்டை மீண்டும் ஒழுங்கிற்கு கொண்டு வந்தார். 1977 முதல் 1979 தொடக்கம் வரை, பத்து ஆண்டுகளாக கலாசாரப் புரட்சியால் தடைபட்டிருந்த பல திட்டங்களை மாற்றி அமைத்தார். பொருளாதார மண்டலங்களை உருவாக்கினார். சனவரி 1, 1979 இல், அமெரிக்காவுடன் இராசதந்திர உறவுகளை ஏற்படுத்தினார். டெங் அமெரிக்காவிற்கு வருகை தந்த முதல் சீனத் தலைவரானார். அரசியல், பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டார். அவரால் முன்மொழியப்பட்ட சீர் திருத்தங்கள் சீனாவின் மூன்றாவது அரசியலமைப்பில் (1982) இணைக்கப்பட்டன. 1980 களில், டெங் சீனாவின் மக்கள் தொகை நெருக்கடியைச் சமாளிக்க ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தைக் கொள்கையை ஆதரித்தார். மேலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான 863 திட்டத்தைத் தொடங்கினார். கொங்காங் ஒரு நாடு, இரண்டு முறைமைகள் என்ற கொள்கையையும் முன்மொழிந்தார்.

டெங் ஷியாபிங் பொதுவுடமை பொருளாதாரக் கோட்பாட்டைக் கைவிட்டு முதலாளித்துவ கோட்பாட்டை கைக்கொண்டதை நியாயப்படுத்த ”ஒரு பூனை கருப்பு அல்லது வெள்ளை நிறம் என்பதல்ல முக்கியம். அது எலிகளைப் பிடித்தால் அது கெட்டிக்காரப் பூனைதான் (It doesn't matter if a cat is black or white, so long as it catches mice) என்ற முழக்கத்தை முன் வைத்தார். அது இன்று சீனாவை ஒரு பெரிய வல்லரசாக மாற்றியுள்ளது. தனியார் நிறுவனங்கள் பொருளாதாரத்துறையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. சீனா பற்றிய முக்கிய தரவுகளைப் பார்ப்போம்.

பெயர் - சீன மக்கள் குடியரசு
பரப்பளவு - 9,596,960 சதுர கிமீ (அமெரிக்காவை விட சற்றுச் சிறியது)
எல்லை நாடுகள் - (14): ஆப்கானிஸ்தான், பூட்டான், பர்மா, இந்தியா, கஜகஸ்தான், வட கொரியா, கிர்கிஸ்தான், லாவோஸ், மங்கோலியா நேபாளம், பாகிஸ்தான், உருசியா, தஜிகிஸ்தான், வியட்நாம்.

கடற்கரை - 14,500 கிமீ.
மலை - இமயமலைச் சிகரம் (ஆசியாவின் மிக உயர்ந்த சிகரம் மற்றும் கடல் மட்டத்திலிருந்து பூமியின் மிக உயர்ந்த புள்ளி) 8,849 மீட்டர்.
இயற்கை வளங்கள் - நிலக்கரி, இரும்பு தாது, ஹீலியம், பெட்ரோலியம், இயற்கை எரிவாயு.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விழுக்காடு - 6.14% (2019 மதிப்பீடு)

வருவாய்: 2.553 டிரில்லியன் டொலர்கள் (2017 மதிப்பீடு)

செலவு: 3.008 டிரில்லியன் டொலர்கள் (2017 மதிப்பீடு)

மக்கள் தொகை - 1,397,897,720 (யூலை 2021 மதிப்பீடு). உலகில் முதலிடம்.

இனக்குழுக்கள் - ஹான் சீன 91.6%, ஜுவாங் 1.3%, மற்றவை 7.1% (2019 மதிப்பீடு). சிறிய இனக்குழுக்களை சீன அரசு அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது.

மொழிகள் - சீன அல்லது மாண்டரின், யூ (கான்டோனீஸ்), வு (ஷ'ாங்கானீஸ்), மின்பீ (புஜோ), மின்னன் (ஹொக்கியன்-தைவான்), சியாங், கன், ஹக்கா கிளைமொழிகள், சிறுபான்மை மொழிகள் (இனத்தைப் பார்க்கவும் குழுக்கள் நுழைவு); குறிப்பு - குவாங்சி ஜுவாங்கில் ஜுவாங் அதிகாரப்பூர்வமானது, குவாங்டாங்கில் யூ அதிகாரப்பூர்வமானது, மங்கோலியன் நெய் மங்கோலில் அதிகாரப்பூர்வமானது, உய்குர் சிஞ்சியாங் உய்குரில் அதிகாரப்பூர்வமானது, கிர்கிஸ் ஜின்ஜியாங் உய்குரில் அதிகாரப்பூர்வமானது, மற்றும் திபெத்தியன் ஜிசாங்கில் (திபெத்) அதிகாரப்பூர்வமானது.



அச்சிடப்பட்ட முக்கிய மொழி மாதிரி: 世界 - 不可 缺少 的 基本 來源 (மாண்டரின்)

மதங்கள் - நாட்டுப்புற மதம் 21.9%, பவுத்தம் 18.3%, கிறிஸ்தவர் 5.2%, முஸ்லீம் 1.8%, ஒரு மதத்திலும் இணைக்கப்படாதவர்கள் 51.8% (2020 மதிப்பீடு)

படைபலம் - 2.8 மில்லியன் மாலுமிகள் மற்றும் விமான, கடற்படை வீரர்கள் உள்ளனர். இது அமெரிக்க எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு அதிகம் ஆகும். (அமெரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது, ஒரு மில்லியனுக்கும் அதிகமான செயலில் - துருப்புக்களைக் கொண்ட மற்ற நாடுகள் உருசியா, இந்தியா மற்றும் வட கொரியா மட்டுமே.)

படைபலச் செலவு - மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.9%.

பொதுவுடமைத் தத்துவம் கோலோச்சிய சோவியத் ஒன்றியம் தொண்ணூறுகளில் இருந்த இடம் இல்லாது மறைந்துபோன பின்னரும் சீனாவில் பொதுவுடமைக் கட்சி நிலைத்து நீடித்து வருவது உலக அதிசயங்களில் ஒன்றாகும். சோவியத் ஒன்றியத்தின் சிதைவு, சீன பொதுவுடமைக் கட்சிக்கு மிகப்பெரிய பாடமாக விளங்குகிறது. சோவியத் ஒன்றியம் சிதைந்ததற்கான காரணிகளை கண்டுபிடித்து அது போன்ற நிலை தவிர்க்கப்பட வேண்டும் என்று ஜி ஜின்பிங் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார்.

சீன பொதுவுடமைக் கட்சியின் மிகப் பெரிய பலம் அது காலத்துக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொண்டதாகும். சோசலீச பொருளாதாரக் கோட்பாடு நடைமுறையில் வெற்றிபெறாது என்பதை அறிந்து கொண்ட சீன பொதுவுடமைக் கட்சி அதனைத் தூக்கி எறிந்து விட்டு முதலாளித்துவ பொருளாதாரக் கோட்பாட்டை தழுவிக் கொண்டது நல்ல எடுத்துக் காட்டாகும்.

மாவோவின் கலாச்சாரப் புரட்சியின் போது ஏற்பட்ட பசி பட்டினிகள் டெங் ஷியாபிங்கின் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்தது. நீண்ட பயணம் முதல் சீன பொதுவுடமைக் கட்சியின் தலைவர்கள் அதிகாரத்தில் நீடித்து இருப்பதற்குச் சித்தாந்தத்தை ஒதுக்கித் தள்ளியுள்ளனர்.

ஒன்ராறியோ முழுவதும் லட்சக்கணக்காணோர் தங்கள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்கள்.

உங்கள் பங்கை செய்யுங்கள். தடுப்பூசியை போட்டுக்கொள்ளுங்கள்.

ஹெல்த் கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள், மருத்துவ மனைகள், டாக்டரின் காரியாலயங்கள், பார்மசிகள் மற்றும் பெருந்தொகையாக தடுப்பூசி போடும் இடங்களில் கிடைக்கும். ஒவ்வொரு தடுப்பூசியும் முன்பிருந்த சாதாரண நிலைமைக்கு நம்மை நெருக்கமாகக் கொண்டுவரும்.

**ontario.ca/bookvaccine** இல் உங்கள் நியமிப்பை இன்றே பதிவுசெய்யுங்கள் அல்லது 300 மொழிகளில் உதவி பெற்றுக்கொள்ள **1-888-999-6488** ஐ அழையுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario


# கனடாவின் BisRing நிறுவனத்தின் தலைமை அதிகாரி திரு. அகிலனின் பங்களிப்போடு திருகோணமலை சீனன்குடா கிராம மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பெற்றன










தற்போது இலங்கையின் அனைத்துப் பகுதியிலும் கொரோனா காரணமான முடக்க நிலையில், சாதாரண மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் குடும்பங்கள் மற்றும் குழந்தைகள் சிறுவர் சிறுமியர் உணவுக்கு திண்டாடும் நிலையேற்பட்டுள்ளது. பணம் இருந்தாலும் வெளியில் சென்று அரிசி பருப்பு போன்ற உணவுப் பொருட்களை வாங்கி வருவதற்கு தடை யேற்பட்டுள்ளது.

இதற்கமைய கனடாவில் இயங்கும் "ரொறன்ரோ மனித நேயக் குரல்" அமைப்பிற்கு அனுப்பி வைக்கப்பெற்ற வேண்டுகோளிற்கு இணங்க கனடாவின் BisRing நிறுவனத்தின் தலைமை அதிகாரி திரு. அகிலனின் பங்களிப்போடு திருகோணமலை சீனன்குடா கிராம மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பெற்றன.

இந்த உடனடி உதவிப் பணிக்கு, அதே கிராமத்தில் சமூக சேவைப் பணிகளில் ஈடுபட்டு வருபவரும் "விடியல்" மற்றும் "தாயக விருட்சம்" ஆகிய அமைப்புக்கள் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றும் திருமதி. தவமலர் கோணேஸ்வரநாதன் ஊடாக இந்த உதவிப் பணி மேற்கொள்ளப்பட்டது.

சில நாட்களுக்கு முன்னர் திருகோணமலை சீனன் குடா கிராமத்தில் உதவிகள் தேவைப்பட்ட சுமார் 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பெற்றன.

பாதிக்கப்பட்டு உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொண்ட மக்கள் கனடா கனடாவின் BisRing நிறுவனத்தின் தலைமை அதிகாரி திரு. அகிலனின் பங்களிப்பிற்கும் இந்த பணிக்கு தேவையான நிதியை பெற்றுக்கொடுத்த "ரொரன்ரொ மனித நேயக் குரல்" அமைப்பிற்கும் நன்றி தெரிவிதுள்ளனர்.

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI
PAWN BROKERS





25
வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198




Global Event
Single Mingle
Platinum Sponsors
ASIYANS Quality Forever
SAT, JULY 10TH 2021
ZOOM EVENT IST 6:30PM | EST 9:00AM | ECT 8:00AM
PERFORMERS
Prabha Balakrishnan
Ram Agarathi
Jeevanandhan
Mathushikan
Steve Cliff Valentine
Dayan Shan
Loo Ganesh
Kiruthika Thayaparan
Archana Maheswaran
Abiseheka Lloydson
SPECIAL GUEST
VIJAY TV PUGAZH
Friends MATRIMONY
WWW.FRIENDSMATRIMONY.COM
FOR SPONSORSHIP CALL US BEFORE FRIDAY
4164776854 | 4164772259 | 647 709 1536.




Carefirst Family Health Team
புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்
தமிழ் பேசும் வைத்தியர்கள்
ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
நீரிழிவு கல்வி திட்டம்
Ontario
ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT
Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com
Steeles
McNicoll
Silver Star
Kennedy
Midland
Finch
N


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக்
கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும்
உணவுப் பதார்த்தங்களும்.....
மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...
Sumeet
Aachi
LEMON RICE POWDER
GARAM MASALA
Vidiem
ABC
Fair Lovely
NESCAFE Sunrise
MAHANARAYAN TAILA
BRU
KILLI
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# ஈழத்து அறிஞர் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை



ஈழத்திலுள்ள யாழ்ப்பாண மண்ணானது பல அறிஞர்களை உருவாக்கித் தந்த பெருமைக்குரிய இடமாக விளங்குகின்றது. இந்தவகையில் அம்மண்ணில் அவதரித்த அறிஞர் வரிசையில் ஒருவராகவும், முக்கியமானவராகவும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் விளங்குகின்றார். அவர் யாழ்ப்பாணத்திலுள்ள பருத்தித்துறை என்ற இடத்திலே தும்பளை என்னும் கிராமத்தில் *1903* ஆம் ஆண்டு யூலை மாதம் இரண்டாந்தேதி ஆயுள்வேத வைத்தியரான கந்தசாமிப்பிள்ளை என்பவருக்கு மகனாகப் பிறந்தார். சிறுவயதிலிருந்தே கல்விகேள்விகளிற் சிறந்து விளங்கியவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. இவரின் தந்தையாரான கந்தசாமிப்பிள்ளைக்குத் தன் மகன் கல்விகேள்விகளில்ற் சிறப்புற்று மேல்நிலைக்கு வரவேண்டும் என்ற பேரவா தோன்றியது.

இதன் காரணமாக அக்காலத்தில் சிறந்து விளங்கிய நல்லாசான்களிடம் தனது மகனை அனுப்பி வைத்தார். தந்தையின்நல்ல வழிநடத்தலின் பயனாகக் கணபதிப்பிள்ளையும் கல்விகற்று இன்று தமிழ்கூறும் நல்லுலகு போற்றும் உத்தம ஆசானாகப் புகழ்பெற்று விளங்குகின்றார்.

கணபதிப்பிள்ளை அவர்கள் முதன்முதலில் தமது ஆரம்பக்கல்வியைப் பருத்தித்துறையில் வாழ்ந்த முத்துக்குமாரசாமிக்குருக்களிடம் கற்றார். அங்கு அவர் மரபு வழித்தமிழ், சமஸ்கிருதக் கல்வி கற்றுக்கொண்டார். பின்பு தனது ஆங்கில வழிக்கவியைப் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியற் பெற்றுக்கொண்டார். இதன் பின்பு *1927* ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலே சிறப்புப் பட்டதாரி மாணவராகப் படித்தார். இக்கற்கைநெறியில் சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளை அக்காலத்தில் புகழ்பூத்த அறிஞர்களான ரம்புக்வெல்லே சித்தாத்த தேரர், ஜி.பீ மலலசேகரா ஆகியோரிடத்தில்கற்றார்.

*1930* ஆம் ஆண்டு கலைமாணிப் பரீட்சையில் மிகத்திறமையான சித்தியைப் பெற்றார். இதன் பெறுபேறாக அவருக்குநான்கு ஆண்டுகள் வெளிநாட்டில் படிப்பதற்கான புலமைப்பரிசில் கிடைத்தது. இப்புலமைப் பரிசிலைப்பயன்படுத்தியே இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் பின்னர் லண்டன் பல்கலைக்கழகத்திற்கும் சென்றார்.

கணபதிப்பிள்ளை அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கச்சென்ற காலப்பகுதியில் அங்குமுத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் முதலாவது தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தார். அவரிடம் கற்கும் பேற்றைக் கணபதிப்பிள்ளையும் பெற்றுக்கொண்டார். அத்துடன் விபுலானந்தரின் அன்பிற்கும் பெருவிருப்பத்திற்கும் உரிய நல்ல மாணவனாகக் கணபதிப்பிள்ளை அவர்கள் விளங்கியுள்ளார். என்பதைக் கணபதிப்பிள்ளை பற்றிக் கூறும் நூல்கள் வாயிலாக அறிய முடிகின்றது. அங்கு கல்வி பயிலச்சென்ற கணபதிப்பிள்ளை அவர்கள் மேலும் அங்கிருந்த சிறந்த அறிஞர்களான சங்கரராமசாமிப்புலவர், கந்தசாமியார், பலராமையர், இறைஒளி சுப்பிரமணியபிள்ளை ஆகியோரிடமும் கல்வி கற்றுள்ளார். இவ்வாறாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நூல்களைப் பாரம்பரிய முறையிற்கற்கும் நெறியினை நன்கு அறிந்து கொண்டார். *1932* ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். அதன் பின்பு லண்டன் பல்கலைக்கழகம் சென்று கீழைத்தேய ஆய்வுப் பாடசாலையில் கி.பி ஏழாம், எட்டாம் நூற்றாண்டுக்குரிய தமிழ்க் கல்வெட்டுக்களின் மொழிநடை பற்றி ஆராய்ந்தார்.

மேலும் மேலை நாடுகளுக்குச் சென்று மிகவும் சிறப்புறக்கற்ற கணபதிப்பிள்ளை அவர்கள் சமஸ்கிருதம், பாளி, பிரெஞ்சு, ஜேர்மன், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய பல மொழிகளிலும் புலமை உடையவராக விளங்கியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

*1936* ஆம் ஆண்டு லண்டனில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டு அவ்வாண்டே இலங்கை திரும்பியகணபதிப்பிள்ளை அவர்கள் *1936* ஆம் ஆண்டே இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். *1947* ஆம் ஆண்டு பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்ற கணபதிப்பிள்ளை அவர்கள் *1965* ஆம் ஆண்டு இளைப்பாறும் வரை நீண்டகாலம் தொடர்ந்து (இருபத்தொன்பது வருடங்கள்) தமிழ்த்துறையில் நற்பணிகள் பல செய்தார்.

இவரால் பல்கலைக்கழகத்திற்கும், சமூகத்திற்கும், தமிழுக்கும் செய்யப்பட்ட சேவைகள் அதிகம். அவற்றுள் சிலவற்றை இங்கு குறிப்பிட்டுக் கூறுதல் அவசியமானதே. பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அவர்சேவை புரியும் காலங்களில் பல அளப்பரிய சாதனைகளைச் செய்துள்ளார் என்பதை அவரைப்பற்றி அவரது மாணவர்கள் எழுதிய கட்டுரைகள், நூல்கள் முதலியவற்றிலிருந்து அறிய முடிகின்றது. பேராசிரியர் கணபதிப்பிள்ளை மிகுந்த எளிமையுடையவராகவும், மரியாதைப்பன்மை பாவிக்காது மாணவர்களுடன் எந்நேரமும் அன்பாகப் பழகுபவராகவும் "கொதிக்குணம்" அற்றவராகவும் விளங்கி நல்ல அறிஞர் பரம்பரை ஒன்றினை உருவாக்கித்தந்த பெருமைக்குரியவராகவும் திகழ்கின்றார். பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் வாழ்க்கைப் பின்னணியை அறியவிரும்பும் எவரும் அவரது காலத்தில் அவரால் மேற்கொள்ளப்பட்ட இலக்கியப்பணிகளையும், கல்விப்பணிகளையும் அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் நாடகம், கவிதை, கட்டுரை, புனைகதை ஆகிய துறைகளில் தமக்கெனத் தனி இடத்தைப் பெற்று விளங்குபவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள். அவராற் பல நாடகங்கள் எழதப்பட்டுள்ளன. அவை சமூக நாடகங்கள், தழுவல் நாடகங்கள், வரலாற்று நாடகங்கள் என்ற பிரிவுக்குள் அடக்கக்கூடியன. அவரது நாடகங்களில் சமூக நாடகங்களுக்கு எடுத்துக்காட்டாக உடையார் மிடுக்கு, நாட்டவன் நகர வாழ்க்கை, முருகன் திருகுதாளம், கண்ணன் கூத்து, பொருளோ பொருள், தவறான எண்ணம், சுந்தரம் எங்கே, துரோகிகள் போன்றவற்றையும், வரலாற்று நாடகங்களுக்கு எடுத்துக்காட்டாக மாணிக்க மாலையையும் குறிப்பிடலாம்.

அவரின் கவிதை இலக்கியங்களாக காதலியாற்றுப்படை, தூவுதும் மலரே முதலியன விளங்குகின்றன. இவை தவிரப்பல கட்டுரைகள், சஞ்சிகைகளுக்கான ஆக்கங்கள் என அவரின் இலக்கியப்பணிகள் பெருமளவில் காணப்படுகின்றன. மேலும் அவரது கட்டுரைப் பங்களிப்பிற்கு "ஈழத்து வாழ்வும் வளமும்" என்ற நூல் சிறந்த உதாரணமாக விளங்குகிறது. இவை தவிர சாசன வியற்துறையிலும், மொழி ஆய்வுத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு அவை தொடர்பாகப் பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதியதுடனமையாது அத்துறைகளுக்குப் பல மாணவர்களையும் உருவாக்கிக்கொடுத்துள்ளார். அவரது பெரும்பாலான ஆக்கங்கள் யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்கை வெளிப்படுத்துவனவாகவும், யாழ்ப்பாணத்து சமூக பண்பாட்டு அம்சங்கள், அக்காலத்து ஆங்கில கலாச்சாரத்தினால் மக்கள் அடைந்த இன்னல்கள் முதலியவற்றைச் சித்தரிப்பனவாகவும் காணப்படுகின்றன.

ஆங்கிலக்கலாச்சாரத்தின் மோகத்தால் கொழும்பில் வாழ்ந்த யாழ்ப்பாணத்து தமிழ் மக்களின் போலி வாழ்க்கையையும் அக்காலத்து யாழ்ப்பாணத்து அரசியல் நிலையினையும் தமது நாடகங்கள், ஏனைய ஆக்கங்கள் முதலியவற்றின் மூலம் விளக்கிக் காட்டியுள்ளார். மேலும் அவரது ஆக்க இலக்கியங்களில் யாழ்ப்பாணப்பிரதேச மண்வாசனை பல இடங்களிலும் வெளிப்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

*1948* ஆம் ஆண்டு ஆங்கிலேயரது ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட ஈழம் அவர்களது பண்பாட்டுப் பாரம்பரியங்களில் இருந்து முற்றிலும் விடுபடமுடியாமற் போனது. இதற்குக் காரணம் மக்களுக்கு ஆங்கிலக் கலாச்சாரத்தின் மீது ஏற்பட்டமோகம். இதனால் ஆங்கிலக் கலாச்சாரத்தை உள்வாங்கியது மக்கள் அதிலிருந்து விடுபடமுடியாமல் ஆங்கிலேயரின் பாணியில் வாழ முற்படும் போது அதனைக் கண்ட கணபதிப்பிள்ளை அர்கள் அந்த மக்களின் நடவடிக்கையால் தமிழ்க்கலாச்சாரம் அடைந்த சீரழிவையும் தமது ஆக்கங்கள் மூலம் தெளிவாகவே எடுத்துக்காட்டியுள்ளார்.

அடுத்துப் பேராசிரியரால் மேற்கொள்ளப்பட்ட கல்விப்பணிகளை நோக்கின், அவர் குழந்தை இலக்கியங்களில் ஆர்வமுடையவர் ஆகையால் குழந்தைகளுக்கு ஏற்றவகையில் பஞ்ச தந்திரக்கதைகள் போன்றவற்றை எழுமைப்படுத்தி வானொலியில் உரையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் பாடசாலை மாணவர்களின் பாடநெறியிலும் புதிய பாடத்திட்டத்தைக் கொண்டுவந்தார். இதனடிப்படையில் கல்விப் பொதுத்தராதர உயர்வகுப்பிற்குப் பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் "இலக்கியவழி" என்ற நூலையும் பாடநூலாகச் சேர்த்தார். அடுத்த அவரது கல்விப்பணியில் குறிப்பிடக்கூடிய இன்னோர் அம்சம் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்திற்கும் அதன் ஆண்டு மலரான இளங்கதிருக்கும் அவர் ஆற்றிய தொண்டுகள் எனலாம். "தமிழ்ச்சங்கத்தை பல்கலைக்கழகத்தில் நிறுவி அந்தச் சங்கத்தினூடாக இளங்கதிர் ஆண்டுமலர் வெளிவர வேண்டும்" என எண்ணிப் பல மாணவர்களுக்கு ஊக்கமளித்து மாணவர்களின் ஆளுமைகளை வெளிக்காட்ட முக்கியவழிகாட்டியாகவும் விளங்கியுள்ளார்.

மேலும் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாக அறிமுகப்படுத்தி நன்கு செயற்பட வைத்தவராகவும் அவர் விளங்கியுள்ளார். அத்துடன் நம்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ் ஆராய்ச்சி பணிகளுக்கு மூல வித்திட்டவராகவும் அவர் விளங்குகின்றார். மேலும் இன்று பெருமளவில் போற்றப்படும் இலக்கியப்பணிகளில் ஒன்றான மண்வாசனை இலக்கியங்களுக்கு வித்திட்டவராகவும் அவர் காணப்படுகின்றார். இந்த வகையில் எமது நாட்டு இலக்கிய, கல்விவளர்ச்சியில் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் பங்களிப்பு முக்கியமானதாகத் திகழ்கின்றது.

இவ்வாறாகச் சிறுவயது தொடக்கம் தமது வாழ்வின் இறுதிவரை கல்வி நிலையில் தாமும் சிறப்புற்று, மேலும் பல சிறந்த கல்விமான்களையும் எமது நாட்டிற்கு உருவாக்கித்தந்த பெருமைக்குரிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் *1968* ஆம் ஆண்டு மே மாதம் பன்னிரண்டாம் திகதி இவ்வுலகை நீத்தார்.

**- மொன்றியலில் இருந்து உமா மோகன்**

(தமிழ் சிறப்புக் கலைமாணி - யாழ்பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம்.
முதுகலைமாணி - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கனடா வளாகம்)


**TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE**

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்பந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# "சிகரெட்" பற்றி எழுத்தாளர் பாலகுமாரன்

இந்த சிகரெட்தான் என்னை குனிய வைத்து சுருள வைத்து இடையறாது இரும வைத்து மூச்சு திணற வைத்து மரணத் தறுவாயில் இருக்கும் பிராணியை போல மாற்றும் என்று அப்போது தெரியவில்லை.

சிகரெட்டில் நிகோடின் என்ற நஞ்சு இருக்கிறது. அந்த நஞ்சு நரம்புகளில் பாய்ந்து நரம்பு மண்டலத்தை சேதப்படுத்தும் என்று பத்திரிகை வாயிலாக தெரிந்தபோது, எனக்கெல்லாம் அது நடக்காது என்று முட்டாள்தனமாக நினைத்துக் கொண்டேன்.

நாலைந்து சிகரெட்டில் நரம்பு மண்டலம் என்ன ஆகிவிடும் என்ற அலட்சியமும் இருந்தது. நாலைந்து சிகரெட் மெல்ல மெல்ல பெருகி ஒரு பாக்கெட் என்றாகி பத்து இருபது என்றாகி ஒரு நாளைக்கு நூற்றியிருபது சிகரெட்டுகளாக மாறிவிட்டால் வேறென்ன நடக்கும்?

நிகோடின் என்பது வெறும் புகையல்ல. அதுவொரு போதையான ரசாயனம். அது என்ன செய்யும்?

கன்னக் கதுப்புகளில், உதடுகளில், ஈறுகளில் அந்த ரசாயனம் தாக்கும்போது ஒரு விறுவிறுப்பு ஏற்படுகிறது. ஒரு குணமாற்றம் ஏற்படுகிறது. சிகரெட் புகையை இழுத்து நுரையீரலில் தேக்கும்போது அங்கிருந்து உடம்பிலுள்ள எல்லா ரத்த அணுக்களுக்கும் பரவி எல்லா இடங்களிலும் ஒரு அமைதி படர்கிறது. கண் கிறக்கமான ஒரு நிலைமை ஏற்படுகிறது.

இது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

உதவியும் செய்தது. என்ன உதவி?

சுற்றுப்புறம் எவ்வளவு மோசமாக இருந்தாலும் எத்தனை இரைச்சல் இருந்தாலும் உள்ளடங்கி ஆழ்மனதில் அமிழ்ந்து சிந்திக்க சிகரெட் உதவி செய்வதாக நினைத்துக் கொண்டேன். அப்படி சிந்திப்பதால்தான் கதை எழுதுகிறேன் என்று நினைத்துக் கொண்டேன்.

காலை, மாலை, இரவு என்று எல்லா நேரங்களிலும் சிகரெட் வேண்டியிருந்தது. சிகரெட் பிடிப்பதற்காகவே பலமணி நேரம் கூட்டங்களில் உட்காருவதை தவிர்த்தேன். அரை மணிக்குமேல் யாரோடும் அமர்ந்து அமைதியாக பேச முடியவில்லை.

வெகு விரைவாக சாப்பிட்டு விடுவேன். குழம்பு சாதம் நாலு கவளம், தயிர் சாதம் நாலு கவளம் மடமடவென்று சாப்பிட்டுவிட்டு வயிறு நிறைந்ததும் வெளியே போய் ஒரு சிகரெட் பற்ற வைத்து புகை இழுத்தால்தான் சாப்பிடதன் நிறைவு பூர்த்தியாகும்.

இது மிகமிக கேவலமான நிலைமை. ஆரோக்ய குறைவான சிந்தனை. உடம்பிலுள்ள நரம்பு மண்டலத்தை அறுத்தெறிகின்ற மிகப்பெரிய காரியம்.

பத்தொன்பது வயதில் தொடங்கிய சிகரெட் பழக்கம் மெல்ல மெல்ல வளர்ந்து நாற்பத்தைந்தாவது வயதில் உச்சகட்டத்தை அடைந்தது. இழுத்து இழுத்து புகையை உள்வாங்கியதால் புகை நுரையீரலுக்கு மட்டுமல்லாது இரைப்பைக்கும் போயிற்று. இரைப்பையில் புகை தங்கி மேல் வயிறு பெரிதானது. மேல் வயிறு பெரிதாக இருந்ததால் நடக்கும்போது மூச்சு வாங்கியது. மாடிப்படி ஏறும்போது சிரமமாக இருந்தது.

எது பற்றியும் கவலைப்படாமல் இடையறாமல் சிகரெட் பிடித்தபடி இருந்தேன். என் வீட்டிலுள்ளவர்கள் "இவனை மாற்ற முடியாது" என்று கைகழுவி என் போக்கிலேயே விட்டார்கள். "நிச்சயம் ஒருநாள் நீங்களாக விட்டுவிடுவீர்கள்" என்றும் சொன்னார்கள்.

அது நேர்ந்தது.

திருமணத்திற்காக ஒரு மகள் இருக்கிறாள். வளர்ந்து படிக்க வேண்டிய ஒரு மகன் இருக்கிறான். இருந்தும் கவலையின்றி இத்தனை செலவு செய்கிறோமே, உடம்பு பாழாகிறதே என்று கவலைப்பட்டு என் குருநாதரை மனமுருக வேண்டி இந்த சிகரெட்தான் கடைசி, என்று சொல்லி ஒரு பாக்கெட் சிகரெட் முழுவதும் வீட்டு வாசலில் நின்றே அமைதியாக பிடித்து முடித்த பிறகு அந்த பெட்டியை கசக்கி குப்பைத் தொட்டியில் எறிந்தேன்.



மறுநாளிலிருந்து சிகரெட் பிடிக்கவில்லை.

முதல் ஒரு மணி நேரம் தவிப்பாக இருந்தது. பல் கடித்து பொறுத்துக் கொண்டேன். இன்னும் அரை மணி "இன்னும் அரைமணி" என்று தள்ளிப் போட்டேன். அரை நாள் சிகரெட் பிடிக்காமல் இருந்தது ஆரோக்யமாக தெரிந்தது.

அன்று முழுவதும் பிடிக்காமல் இருந்தால் என்ன என்று நினைத்தேன். இருந்தேன். நெஞ்சு விசாலமானது. அதற்கு பிறகு இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் சிகரெட் பிடிக்கவில்லை.


நான்காவது நாள் சிகரெட் தேவைப்படவில்லை.

நடுவே ஒரு சிகரெட் பிடித்திருந்தாலும் கால் இடறி மறுபடியும் புகைக்குழியில் விழுந்திருப்பேன். முற்றிலும் மாறுபட்ட மனிதனாக & நன்கு சுவாசிக்கிறவனாக & மற்றவர்கள் சிகரெட் பிடித்தால் மூக்கை பொத்திக் கொள்பவனாக மாறினேன்.

ஆனால் என்ன, செய்த பாவங்கள் விடுமா?

சிகரெட்டை விட்ட இரண்டு வருடங்களுக்கு பிறகு இதயத்தை பலமாக தாக்கியது. அடைப்புகள் ஏற்பட்டன. இரண்டாயிரத்தில் பைபாஸ் ஆபரேஷன் செய்து கொண்டேன்.

அப்போதும் சிகரெட் பிடிப்பவனாக இருந்தால் மரணம் அன்றே



குறிக்கப்பட்டிருக்கும். சிகரெட்டை நிறுத்தி ஆரோக்யத்தை அதிகப்படுத்தியதால் அந்த ஆபரேஷனை சமாளிக்க முடிந்தது.

பிறகு பத்து வருடங்கள் எந்தவித இம்சையும் இல்லாமல் அழகாக வாழ்க்கை ஓடியது.

இ ர ண் டா யி ர த் து பதினொன்றில் நீரிழிவு காரணமாக ரத்தக்கொதிப்பின் காரணமாக மறுபடியும் அடைப்பு ஏற்பட, இரண்டாம் முறை பைபாஸ் செய்து கொண்டேன்.

சுவாசபயிற்சிசெய்திருந்ததால், மூச்சு பற்றிய ஞானம் இருந்ததால், தினந்தோறும் காலையும் மாலையும் வேகமாக நடந்ததால், மெல்லிய உடற்பயிற்சிகள் செய்ததால் இரண்டாவது பைபாஸையும் தாண்டிவர முடிந்தது.

ஆனால், இரண்டாயிரத்து பன்னிரெண்டில் அடுத்த சோதனை. பத்தொன்பது வயதில் பிடித்த சிகரெட்டுகள் அறுபத்தாறு வயதில் தன் விஷத்தன்மையை காட்டியது. தன் வக்கிரத்தை நிரூபித்தது.

நுரையீரலின் அடிப்பக்கம் முழுவதும் நிகோடினால் ஏற்பட்ட சளி அடைப்புகள். நுரையீரல் முழு திறனோடு வேலை செய்யவில்லை. அதற்கான திறனை மெல்ல மெல்ல இழந்தது. அதோடு சளி அடைப்பும் சேர்ந்து பழிவாங்கியது. மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

ஒருபிடி சாதத்திற்கு அவஸ்தை படும் நிலைமை. முகம் முழுவதும் மூடி ஆக்சிஜனை வேகமாக செலுத்தினால்தான் உயிரோடு இருப்பேன் என்கிற நிலைமை. என்.ஐ.வி என்கிற அந்த விஷயத்தோடுதான் இரவு தூங்க முடியும் என்ற நிலைமை. பிராங்கோஸ்கோபி என்று மூச்சுக்குழலுக்குள் கருவியை விட்டு சோதனை செய்து அங்கே அடி நுரையீரலில் அடர்த்தியாக அசைக்க முடியாதபடிக்கு கெட்டியாக சளி இருப்பதை தெரிந்துகொண்டார்கள்.

இதை எப்படி சரி செய்வது?

வலியை பொறுத்துக் கொள்ளலாம். வேறு ஏதேனும் பத்தியமாக இருந்தால் அவ்விதமே நடந்து கொள்ளலாம். மூச்சு இழுத்து பிராணவாயு உள்ளே போய் வெளியே வருவதே கடினமானால் எப்படி சமாளிப்பது? தினசரி மரண போராட்டமாக மாறிவிட்டது.

மூச்சு வேகமாக இழுத்து இழுத்து இன்னும் சில நிமிடங்களில் பாலகுமாரன் செத்து விடுவான் என்ற எண்ணத்தை மற்றவருக்கு ஏற்படுத்தியது.

வீடு தவித்தது. வீட்டிற்குள் மூன்று நான்கு ஆக்சிஜன் சிலிண்டர்கள் வைக்கும்படி நேரிட்டது. வேகமாக காற்றை செலுத்தக்கூடிய கருவி தனியாக இருந்தது. ஆஸ்பத்திரியிலிருந்து வீடு வந்தவுடன் வீடு ஆஸ்பத்திரியாக மாறியது. எப்பொழுதும் மூக்கில் ஆக்சிஜன் இருக்கும்படி ஒரு அவஸ்தை.

ஸ்கூட்டர் எடுத்துக்கொண்டு மயிலாப்பூர் முழுவதும் சுற்றித் திரிந்தவனுக்கு சிறைத் தண்டனை போல வீட்டில் அதே அறையில் இருக்கும்படி நேரிட்டது. மிகப்பெரிய வலியில்லை. ஜுரம் இல்லை. ஆனால், ஆக்சிஜன் குழாயை எடுத்துவிட்டால் மூச்சுத்திணற ஆரம்பிக்கும். அது இல்லாமல் நடக்க முடியாது, பேச முடியாது, உண்ண முடியாது, எதுவும் செய்ய முடியாது. காலில் சங்கிலி கட்டி கையில் இரும்பு குண்டை கொடுத்ததுபோன்ற மிகப்பெரிய தண்டனை. வேறு எந்த வழியும் இல்லாமல் அமைதியாக உட்கார்ந்து கொண்டேன்.

ஒருநாளைக்கு நூற்றியிருபது சிகரெட் பிடிக்க வேண்டும் என்கிற நிலையில் இருந்ததை நினைத்து சிரித்துக்கொண்டேன். அப்படி புகைத்தால்தான் கதை எழுத வரும் என்று முட்டாள்தனமாக நம்பியதை நொந்து கொண்டேன்.

மரணம் எல்லோருக்கும் வரும். எப்பொழுது வேண்டுமானாலும் வரும். எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் வரும். ஆனால், மூச்சு திணறி இதோ "இதோ" என்று பயம் காட்டுகின்ற ஒரு நிலைமை யாருக்கும் வரக்கூடாது.

நெஞ்சு வலித்தது. ஐந்து நிமிடம் துடித்தார். உயிர் நீங்கியது என்பது பரவாயில்லை.

மூச்சு விட முடியாமல் உள்ளுக்குள் போன மூச்சை வெளியே செலுத்த முடியாமல், வெளியே இருக்கின்ற பிராண வாயுவை உள்ளே இழுக்க முடியாமல் திணறி கதறுகின்ற வேதனை யாருக்கும் வரக்கூடாது. சிகரெட் பிடிக்கலாம் என்கிற ஆசையுள்ளவர்கள் தயவு செய்து அந்த எண்ணத்தை அழித்து விடுங்கள்.

சிகரெட் பிடிப்பவர்கள் உடனடியாக அந்த பழக்கத்தை கைவிடுங்கள்.

சிகரெட் உங்களை இன்றல்ல... பிற்பாடு ஒருநாள் மிக நிதானமாக கொல்லுகின்ற ஒரு விஷம் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

இந்த இருமல், இந்த முதுகு குனியல், இந்த தளர்வு, இந்த வேதனையெல்லாம் சிகரெட் பிடிப்பதால் விரைவாக ஒரு மனிதனுக்கு வரும். நல்லபடியாக சுவாசம் செய்து கொண்டிருந்தால் எழுபத்தைந்து வயது வரை ஆரோக்யமாக நிச்சயம் இருக்கலாம். அறுபத்தாறு வயதில் தள்ளாடுகின்ற நிலைமை & எழுத முடியாத நிலைமை & பேச முடியாத நிலைமை & ஒரு மனிதனுக்கு வருகிறதென்றால் அது வேதனைக்குரியது.

அது தவிர எந்நேரமும் நம்மைச் சுற்றி தாங்கும்படியாக நம் உறவினர்களுக்கு நாம் சுமையாக இருக்கிறோம் என்பது இன்னும் இம்சையான விஷயம்.

வீட்டிலுள்ள முக்கியமான ஒரு நபர் நோய்வாய்ப்பட்டால் அந்த வீடே நோய்வாய்ப்படும். எனவே எது விஷமோ, எது மிக கொடூரமாக நம்மை தாக்குமோ அதிலிருந்து நாம் விலகி நிற்க வேண்டும்.

புகை பிடித்தல் உடல்நலத்திற்கு தீங்கானது அல்ல, உங்கள் குடும்பத்திற்கு தீங்கானது. உங்கள் வாழ்க்கையை சிதறடிக்கப் போவது. உங்கள் வளர்ச்சியை அறுத்தெறியப் போவது. உங்கள் ஞானத்தை பொசுக்கப் போவது. எனவே, சிகரெட்டை மனதாலும் நினையாமல் நன்கு மூச்சு இழுத்து வெளியே விடுகின்ற பிராணாயாமம் கற்றுக் கொள்ளுங்கள். சிகரெட் ஆசையே வராது.

வன்னியியல் ஆய்வு மன்றம்~கனடா
RESEARCH CENTRE FOR VANNI - CANADA

வன்னியியல் ஆய்வரங்கம் ~ 6

'வன்னிப் பெருநிலப்பரப்பின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள்"
~ ஒரு பன்முகப்பார்வை

காலம்: சனிக்கிழமை, யூலை10,2021
கனடா-காலை 7.30 இலங்கை-மாலை 5.00
ஐரோப்பா-மதியம் 1.30 ஐக்கிய இராச்சியம் 12.30
அவுஸ்திரேலியா- இரவு 9.30 (Mel).

ZOOM MEETING LINK:
https://zoom.us/j/9091187986?pwdZGJkWDFVanINMG1UXN5cmtsWxvUT09
ID: 909 118 7986 Passcode:vanniroot

தொடர்புகளுக்கு: TP:416-644-1113
Email:info@vcarekids.org

தலைமை



Dr.சந்திரசேகரம் பரமலிங்கம்
Dr.Sandrasegaram Paramalingam
BA in Political Science(Cey) LLM(Hull,UK), Ph.D(Keele,UK)
Solicitor, England and Wales

ஆய்வுரை



பேராசிரியர் Dr. ப.புஸ்பரட்ணம் M.A.,Ph.D
முன்னாள் தலைவர் தொல்லியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்
Prof. P.Pushparatnam B.A(Hons),M.A. Ph.D.

ஜயந்தெளிதல் கருத்துப்பரிமாற்றம் இடம்பெறும்
வன்னிச் சங்கம்- கனடா



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE
FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
ᵉroted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இவ்வார ராசிபலன்

**09-07-2021 வெள்ளி தொடக்கம் 15-07-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** பொறுப்புகளும், சிறப்புகளும் சேரக்கூடிய சீரான வாரம். தனவரவு பெருகும். புதிய முதல்களைத் தவிர்க்கவும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர் நட்பு கிட்டும். திறமைகள் வெளிப்படும். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். காதலில் பிரிவு ஏற்படும். பாராட்டுக்கள் தேடிவரும். கல்விக் கடன் ஏற்படும். கடமையில் தடங்கல் ஏற்படும். விவாத முயற்சி வெற்றி தரும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வீரவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**ரிஷபம்:** நலமும் வளமும் நாடி வரக்கூடிய நன்மையான வாரம். யோகமான நாள். உணவுத் தொழில் உயர்வு தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். பங்குச் சந்தை தொழில் லாபம் தரும். மன அமைதி நிலவும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். மனைவி அன்பு அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனமுடன் செயல்பட வேண்டும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். சீரான வாழ்வமையும். சிந்தனைகள் மேலோங்கும். அம்பிகை வழிபாடு ஆரோக்கியம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வடிவுடை அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**மிதுனம்:** நேர்மையான உள்ளங்களுக்கு மேன்மையான வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடிய வாரம். காரிய வெற்றி கிட்டும் நாளாக அமையும். பதவி வாய்ப்பு வரும். வாதகம் விலகும். வருமானம் கை கூடிவரும். நண்பர்களால் நன்மை உண்டு. பெற்றோர் உதவிகள் கிடைக்கும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. கட்டிடத் தொழில் லாபம் தரும். பொன்னான நேரங்களாக அமையும். எள்தானம் ஏற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,3,1,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,M




**கடகம்:** நன்மையான விஷயங்களை உண்மையாக சந்திக்கக்கூடிய நல்ல வாரம். சாதனை படைக்கும் நாள். நிர்வாகம் செலவுகள் கூடும். வாய்ப்புகள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத் தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். மாருதி வழிபாடு மகிழ்ச்சியைத் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமலலி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** பொன்னும், பொருளும் சேரக்கக்கூடிய பொன்னான வாரம். நன்மைகள் பெருகும் நாள். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வீண் விரயம் அதிகமாகும். பெருமைகள் கூடும். திறமைகள் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் மறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: காளிதுர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**கன்னி:** தடைகளுக்கு விடை கிடைக்கக் கூடிய நல்ல வாரம். காதல் பிரிவை ஏற்படுத்தும். வீண் குழப்பங்கள் வந்து போகும். உடல் நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய முயற்சிகள் கை கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. அயல் நாட்டுப் பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான நாள். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச் செய்தி வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மாங்கல்யேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,V




**துலாம்:** கனத்த இதயத்தில் வலுத்த பலன் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். சோதனைகள் நீங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல் நலம் திருப்தி தரும். மன அமைதி குறையும். திருமண வாய்ப்பு கூடும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சு திறமை அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அக்னிலிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,7,9,0
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,U




**விருச்சிகம்:** இறைவனின் கருணை இல்லத்தில் நிரம்பக் கூடிய அற்புதமான வாரம். சுய விடு வாங்க முயற்சி செய்யலாம். மங்களமான நாள். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண முயற்சி வெற்றி தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும். பிரார்த்தனையால் பலன் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: பட்டத்தரசியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Z




**தனுசு:** ஆலய தரிசனத்தால் ஆத்மபலம் பெருகக்கூடிய அற்புதமான வாரம். வெளிநாட்டுப் பயணம் உண்டு, கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைபடும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். பெற்றோர்களால் பாராட்டு பெறுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹோரம்ப கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,8,2,9
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** புதியபாதையில் அடியெடுத்துவைக்கக்கூடிய அற்புதமான வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெருமைகள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பணத் தேவை அதிகரிக்கும். எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். புகழ் கூடும். அந்தஸ்து உயரும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புகள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனகசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**கும்பம்:** சினமும், குணமும் சீராக அமையக்கூடிய சிறப்பான வாரம். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். சொத்து சேர்க்கை உண்டு. உழைப்பில் கவனம் தேவை. கோரிக்கை நிறைவேறும். மனை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார வளம் மேம்படும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவி செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 1,8,2,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,A




**மீனம்:** தடைகளுக்கு விடைகிடைக்கக் கூடிய நல்ல வாரம். காதல் பிரிவை ஏற்படுத்தும். வீண் குழப்பங்கள் வந்து போகும். உடல் நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய முயற்சிகள் கை கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. அயல் நாட்டுப் பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான நாள். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச் செய்தி வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மாங்கல்யேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,V

---


Flex Institute நிறுவனத்துடன் சேர்ந்து உங்கள்
கனடா செல்லும் கனவினை நனவாக்குங்கள்!

நீங்கள் கனடாவுக்குச் செல்வதைப் பற்றிய கவலையா? உங்கள் கனவை நாம் நனவாக்குகின்றோம். இலங்கையின் முன்னணி கனேடிய விசா ஆலோசனை நிறுவனங்களில் ஒன்றான நற்பெயரை Flex Institute நிறுவனம் கொண்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் கனடா செல்லும் விண்ணப்பதாரிகளுக்கு எமது சிறந்த சேவையினை வழங்கி அதன் மூலம் அவர்களின் விசா விண்ணப்பங்களின் வெற்றியை உறுதிப்படுத்துகிறோம். நாம் முக்கியமாக எமது கனடிய விண்ணப்ப நிலையத்தின் மூலம் **Student Visa, a Student- Dependent, Open Work Permit, Visitor Visa, Visa Refusals, Family Visit Visa, Business Visit, and Super Visa Facilities.** வழங்குகிறோம். இதற்கென்றே எமது அனுபவமிக்க தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்கள் உங்களுக்கான உதவிகளை செய்வதற்கு காத்திருக்கிறார்கள். எந்த விதமான தங்குதடையோ, தாமதமோ இன்றி உங்களுக்கான விசாவினை கூடிய விரைவில் பெற்றுத் தருவதில் உத்தரவாதமளிக்கின்றோம். இதற்கென்றே அமைந்ததுதான் எமது On The Spot Consultation சேவை. எமது வாடிக்கயாளர்களில் பலர் மாணவர் முதல் பிற பிரிவுகள் வரை அவர்களது விசா விண்ணப்பங்களை வெற்றிகரமாகப் பெற்றுள்ளனர். **University of Canada, West Algoma University, Fanshawege College, Centennial College, Seneca College, Georgian College, Cambrian College, ST. Laurence College, University of Saskatchewan, Lakehead University.** போன்ற கனடாவிலுள்ள முன்னணி பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கல்வி கற்பதற்காக விசாவினைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளை நேருக்கு நேராக வழங்குவதுடன் விசாவினை பெற்றுத்தர உதவுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் நிதி பின்னணி குறித்து கவனமாக அவதானித்து அவர்களின் விருப்பத்திற்கேற்ப கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் தேர்வு செய்ய நாம் உதவத் தயாராக உள்ளோம். எமது Flex Institute வாடிக்கையாளர், மாணவர்களின் மறுக்கப்பட்ட விசாக்களை பெற்றுத் தந்து அதன் மூலம் பலரது நன்மதிப்பையும் பெற்றுள்ளோம்.

ஆலோசனைகளை தவிர IELTS பயிற்சி நிலையம் ஒன்றினை அமைத்து ஆங்கில மொழியில் பரீட்சை **IELTS, Duolingo English Test, TOFEL and PTE (Academic)** பயிற்சி மற்றும் உதவிகளை செய்து தருகிறோம். ஒரு அனுபவமிக்க விசா நிறுவனமாக எம்மை நாம் உத்தரவாதம் அளிப்பதுடன் உங்கள் விசாவிற்கும் உத்தரவாதம் அளித்து உங்கள் கனடிய கனவு நனவாகும். என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

- இலவச ஆலோசனை
- புலமைப்பரிசில்கள்
- 1000க்கும் மேற்பட்ட கல்வித்திட்டங்கள்

Student Visa, Student Dependent, Business Visa, Family Visit Visa, Super Visa requirements சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படும்.




Are You Looking For
Canada

- Student Visa
- Visit Visa
- Rejected visa
- Business visa
- Super Visa
- Tourist Visa

Call us on: 0777 761 346

flex Institute
Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06.
Hotline: 0777 761346
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
10 வருட கால நம்பிக்கையான சேவை

# யாழ்ப்பாணம்: வாள்வெட்டுக் கலாச்சாரத்தின் பின்னணி ?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

**ஒ**ரு பெரும் தொற்றுநோய் காலத்திலும் யாழ்ப்பாணத்தின் வாள்வெட்டுக் கலாச்சாரம் ஓயவில்லை. அன்மையில் கோண்டாவில் செல்வபுரம் பகுதியில் இரண்டு அணிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவரின் கை துண்டிக்கப்பட்டது. ஒரு அணியில் இருந்து பிரிந்து சென்ற இன்னொரு அணி தனக்கென்று பாடல்களை உருவாக்கியிருக்கிறது. அந்தப் பாடல்களை உருவாக்கிய ஸ்டுடியோதான் தாக்குதலின் இலக்கு. இத்தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டு கைதுசெய்யப்பட்ட மூவரும் 30 வயதுக்குட்பட்டவர்கள். அவர்களைக் கைது செய்தபொழுது கைப்பற்றிய ஆயுதங்கள் தமிழில் தெய்வப் படங்களில் வரும் காட்சிகளில் பயன்படுத்தப்படும் பழையகால ஆயுதங்களை போன்றவை. அந்த ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு தாங்கள் செய்வது ஒரு சாகசச் செயல் என்று நம்பி அவர்கள் அதைச் செய்திருக்கிறார்கள். தாங்கள் செய்வது ஒரு குற்றச்செயல் என்பதை உணராமல் அதை ஒரு சாகச செயலாகக் கருதி அதற்கென்று பாடலையும் உருவாக்குகிறார்கள். ஆயின் இதை எப்படி விளங்கிக் கொள்வது?

தாங்கள் செய்வது குற்றமா சாகசமா என்பது அவர்களுக்கு விளங்கவில்லை. அவர்களுக்கு யார் அதை விளங்க படுத்துவது? நிச்சயமாக அவர்களுடைய பெற்றோர்களால் அது முடியாது. ஏனென்றால் அவர்கள் செய்வதை தடுக்கும் சக்தி தாய் தகப்பனுக்கு இருந்திருந்தால் அவர்கள் இப்படி வாட்களை ஏந்திக்கொண்டு வீதிக்கு வந்திருக்க மாட்டார்கள். அவர்களை கட்டுப்படுத்தும் சக்தி அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கோ அல்லது அவர்களுக்கு போதிக்கும் மதகுருக்களுக்கோ கிடையாது. அல்லது அவர்கள் பிறந்து வளர்ந்த கிராமங்களில் கருத்தை உருவாக்கவல்ல சமூகத் தலைமைகள் அல்லது உள்ளூர் தலைமைகளாலும் அவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை. ஆசிரியர்கள் பெற்றோர் மதகுருக்கள் உள்ளூர் தலைவர்கள் போன்றவர்களால் கட்டுப்படுத்த முடியாத ஒரு வளர்ச்சிக்கு அவர்கள் போய்விட்டார்கள். அது ஒரு விகார வளர்ச்சி. மேல் சொன்ன யாருடைய செல்வாக்கின் கீழும் அவர்கள் இல்லை என்று தெரிகிறது.

அப்படியென்றால் அவர்களை சட்டத்தால் மட்டும் கையாள முடியுமா? இல்லை. கடந்த 12 ஆண்டுகளாக சட்டத்தால் அவர்களை பொருத்தமான விதங்களில் கையாளவோ அடக்கவோ முடியவில்லை என்பதைத்தான் பார்க்கிறோம். இதுதொடர்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியில் வேறு அபிப்பிராயங்கள் உண்டு. மேற்படி குழுக்கள் தமிழ்ச் சமூகத்தை சீரழிக்கும் உள்நோக்கமுடைய தரப்புகளால் உற்பத்தி செய்யப்படுவதாக ஓருகம் பரவலாக உண்டு. இக்குழுக்களை கட்டுப்படுத்துவதில் காவல்துறை போதிய அளவுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டு உண்டு. எனினும் கோண்டாவில். சம்பவத்தை தொடர்ந்து காவல்துறையும் அரச படைகளும் இணைந்து துரிதமாக நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிகிறது.

ஆனாலும் இக்குற்றச்செயல்களில் பின்னணியில் அரசியல் நோக்கங்களைக் கொண்ட சக்திகள் இயங்குவதாக பொதுவாக ஒரு சந்தேகம் யாழ்ப்பாணத்தில் நிலவுகிறது. ஆயுத மோதல்களுக்கு பின்னரான ஒரு சமூகத்தில் இளையவர்களை இலட்சியவாதத்தின் பக்கம் போகவிடாது தடுத்து திசைதிருப்பும் நோக்கில்தான் இப்படிப்பட்ட குழுக்கள் ஊக்குவிக்கப் படுகின்றன அல்லது கண்டும் காணாமல் விடப்படுகின்றன என்று ஒரு பலமான சந்தேகம் யாழ்ப்பாணத்தில் உண்டு. போதைப்பொருள் வலைப்பின்னலையும் அப்படித்தான் பார்க்க வேண்டும் என்று ஒரு விளக்கம் உண்டு.

விளக்கங்கள் வியாக்கியானங்கள் எப்படியும் இருக்கலாம். ஆனால் எல்லாவிதமான வியாக்கியானங்களுக்கும் விளக்கங்களுக்கும் அப்பால் இது தமிழ்ச் சமூகத்தின் ஒரு பாரதூரமான வீழ்ச்சியை காட்டுகிறது. கடந்த வாரம் யாழ்ப்பான பத்திரிகைகளில் அல்லது சமூக ஊடகங்களில் அதிகம் துருத்திக்கொண்டு தெரிந்த செய்திகள் இரண்டு.

ஒரு செய்தி மேற்சொன்ன வாள்வெட்டுச் செய்தி. இரண்டாவது செய்தி அந்த சம்பவத்தில் வெட்டப்பட்ட கையை உடலோடு மறுபடியும் சேர்த்து தைத்த ஒரு மருத்துவ சாதனை பற்றிய செய்தி. இந்த இரண்டும் ஒரே சமூகத்தில்தான் இடம் பெற்றன. ஒருபுறம் வாளேந்திந்திய இளைஞர்கள். இன்னொருபுறம் வெட்டிய கையை சேர்த்துத்தைத்த மருத்துவர்கள். ஒன்று குற்றச்செயல். மற்றது நற்செயல். இவை இரண்டினதும் சேர்க்கைதான் இன்றைய யாழ்ப்பாணத்தின் குறுக்கு வெட்டுமுகத் தோற்றம்.

ஆனால் துயரம் என்னவென்றால் இந்த இரண்டு செய்திகளையும் பரபரப்பான சூடான செய்திகளாக பார்த்துவிட்டு சமூகத்தின் பெரும்பாலான தரப்பு அவற்றைக் கடந்து சென்று விடுவதுதான். உண்மையில் இவை இரண்டும் யாழ்ப்பாணச் சமூகத்தின் முரண்பாட்டை மட்டும் காட்டவில்லை. அவற்றுக்கு மேலாக தன்னை ஒரு பண்பாட்டு தலைநகரம் என்று கூறிக்கொள்ளும் ஒரு குடாநாட்டின் அறிவு, விழுமியம், பண்பாட்டுச் செழிப்பு, தலைமைத்துவம் போன்ற எல்லாவற்றின் மீதும் கேள்விகளை எழுப்பும் ஒரு அகமுரண்பாடு இது. ஏனெனில் மேற்படி இளையோர் அவற்றை குற்றச் செயல்களாக கருதி செய்யவில்லை. அவர்கள் அதை இப்பொழுதும் சாகச உணர்வுடன்தான் முன்னெடுக்கிறார்கள். அவர்களிடம் இருக்கும் அந்த சாகச உணர்வை நெறிப்படுத்தி அதனை இலட்சியங்களை நோக்கி திருப்ப சமூகத்தில் யாருமே இல்லையா?

சில மாதங்களுக்கு முன்பு ஒரு பெரும் தொற்றுநோய் சூழலிலும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியில் ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் திரண்டார்கள். கறுப்பு துணியில் P2P என்று பொறிக்கப்பட்ட பட்டியைக் கட்டிக்கொண்டு சிவப்பு மஞ்சள் கொடிகளை ஏந்தியபடி மோட்டார் சைக்கிளில் ஊர்வலமாக வந்தது ஒரு தொகுதி இளையவர்கள்தான். அந்த ஊர்வலங்களை பார்த்தும் ஒரு செயற்பாட்டாளர் கேட்டார். இதிலும் ஒரு சாகச உணர்வு தெரிகிறது. இந்த சாகச உணர்வை அரசியல் ஆக்க சக்தியாக மாற்ற வேண்டுமென்று. இதே விளக்கம் வாளேந்திந்திய இளைஞர்களுக்கும் பொருந்தும். அதை நாங்கள் குற்றமாக பார்க்கப் போகிறோமா அல்லது வழிதவறிய சாகச உணர்வாக பார்க்கப் போகிறோமா?

அவர்களுக்கு தலைமை தேவையாக இருக்கிறது. அவர்களை அரவணைத்து அவர்களுடைய இளம் இரத்தத்தின் வேகத்துக்கு ஈடுகொடுத்து தலைமைதாங்கி அவர்களை இலட்சியப் பாங்கான வழிகளில் வழிநடத்த தலைவர்கள் இல்லை என்பதே இங்குள்ள பிரச்சினை. உண்மையிலேயே வாளேந்திந்திய இளைஞர்களின் தோற்றம் என்பது தலைமைத்துவ வெற்றிடத்தில் இருந்துதான் வருகிறது. தமிழ் மக்கள் மத்தியில் பொருத்தமான தலைமைகள் இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் ஒரு சிறு தொகுதி இளையோர் இவ்வாறு வழிதவறிப் போகிறார்கள்.

கடந்த 12 ஆண்டுகளாக இவ்வாறு வழிதவறிய இளையோருக்கு தலைமை தாங்க தவறியதற்கு சமூகத்தின் எல்லாத் தரப்புக்களும் பொறுப்பேற்க வேண்டும். இந்த இளையோர் எங்களுக்குப் புறத்தியானவர்கள் அல்ல. அவர்கள் வேற்று கிரகத்திலிருந்து வேற்று நாட்டிலிருந்து வந்தவர்கள் அல்ல. அவர்கள் எங்களுடைய பிள்ளைகள். எங்களுடைய வீடுகளில் எங்களுடைய பள்ளிக்கூடங்களில் எங்களுடைய சனசமூக நிலையங்களில் எங்களுடைய விளையாட்டு மைதானங்களில் எங்களுடைய சந்தைகளில் எங்களுடைய ஆலயங்களில் எங்களுக்கு மத்தியில் எங்களால் வளர்க்கப்பட்டவர்கள்தான். அவர்கள் இன்றைக்கு வாள் எந்துகிறார்கள் என்று சொன்னால் அதற்கு நாங்கள் எல்லாருமே பொறுப்புதான். யாரோ அவர்களுக்கு வாளைக் கொடுக்கிறார்கள் கஞ்சாவை கொடுக்கிறார்கள் என்று சூழ்ச்சி கோட்பாடுகளை உருவாக்கிக் கொண்டிருப்பதற்கு பதிலாக அந்த இளையோருக்கும் எங்களுக்கும் இடையிலான தொடர்பாடல் எங்கே அறுந்தது என்பதை முழுச் சமூகமும் தேடி கண்டுபிடிக்க வேண்டும்.

உங்களுடைய பிள்ளைக்கும் உங்களுக்கும் இடையே யாரோ ஒரு வெளியாள் வாளை, கஞ்சாவை கொண்டுவர முடிகிறது என்றால் உங்களுக்கும் உங்களுடைய பிள்ளைகளுக்கும் இடையே ஏதோ ஒரு தொடர்பாடல் இடைவெளி இருக்கிறது என்றே பொருள். உங்களுடைய பிள்ளை எங்கே போகிறான்? யாரை சந்திக்கிறான்? என்னென்ன செய்கிறான்? எப்பொழுது திரும்பி வருகிறான்? ஏன் பிந்தி வருகிறான்? அவனுடைய கைபேசியில் யார் யாருடைய இலக்கங்கள் உண்டு? கைபேசியில் அவன் உருவாக்கி வைத்திருக்கும் உலகம் எத்தகையது? அவனுடைய கணினியில் அவன் உருவாக்கி வைத்திருக்கும் உலகம் எத்தகையது? அவனுடைய முகநூலில் அவன் உருவாக்கி வைத்திருக்கும் உலகம் எத்தகையது? என்பது குறித்து எங்களில் எத்தனை பேர் நுணுக்கமாக பின்தொடர்கிறோம்? எங்களுக்கும் எங்களுடைய பிள்ளைகளுக்கும் இடையே எங்கே எப்பொழுது இடைவெளி விழுந்தது என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். இது எல்லா பெற்றோருக்குமான ஒரு பொறுப்பு. ஆசிரியர்களுக்குமான பொறுப்பு. உள்ளூர் தலைமைகளுக்கும் மதத் தலைவர்களுக்குமான பொறுப்பு. எல்லாவற்றையும்விட முக்கியமாக அரசியல் தலைவர்களுக்கான பொறுப்பு.

ரத்தத்துடிப்புள்ள இளையவர்களுக்குத் தலைமைதாங்க தகுதியுள்ள தலைவர்கள் யார் உண்டு? எத்தனை கட்சிகளிடம் இளையோர் அமைப்புகள் உண்டு? குறைந்தபட்சம் பல்கலைக்கழகங்களில் மாணவ அமைப்புக்களைக் கொண்டிருக்கும் கட்சிகள் எத்தனை? இதுதான் பிரச்சினை. இளையோரின் வேகத்துக்கு தாக்குப் பிடித்து தலைமை தாங்க தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் பலரால் முடியவில்லை என்பதுதான். இளையோரின் சாகச உணர்வுக்கு சரியான தலைமைத்துவத்தை கொடுத்தால் அது ஆக்க சக்தியாக மாறும். அதற்கு ஒரு அரசியல் தரிசனம் வேண்டும்.

இளையோருக்கு மட்டுமல்ல முழுச் சமூகத்துக்குமே ஒரு பெரும் தொற்றுநோய் காலத்தில் சமூகமுடக்க காலத்தில் வழிகாட்டுவதற்கு எத்தனை தலைவர்கள் உண்டு? கடந்த சில வாரங்களாக இதுபற்றி நான் அடிக்கடி எழுதி வருகிறேன். சமூக முடக்கத்தின்போது பொது மக்களோடு சேர்ந்து முடங்கி கிடப்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் தேவையில்லை. அல்லது பெருந்தொற்று நோய்க்கு எதிரான நடவடிக்கைகளை முழுக்க முழுக்க படையினரிடம் ஒப்படைத்து விட்டு வீடுகளில் முடங்கி கிடப்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் தேவையில்லை. மாறாக மக்களுக்கு விழிப்பூட்டி வேண்டும். தைரியம் ஊட்ட வேண்டும். நோய் தொற்றுக்கு எதிராக உளவியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மக்களை பலப்படுத்த வேண்டும். வழிகாட்ட வேண்டும்.

ஒரு பகுதி அரசியல்வாதிகளும் மக்கள் பிரதிநிதிகளும் நிவாரணம் வழங்குவதில் மினக்கெடுகிறார்கள். அதற்கும் தேவை உண்டு. ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவிகளையும் தாயக மக்களையும் ஒருங்கிணைக்கும் முகவர்களாக செயற்பட்டால் மட்டும் போதாது. அதற்கும் அப்பால் மாற்றத்தின் முகவர்களாக நம்பிக்கையின் முன்னுதாரணங்களாக வாழும் முன் உதாரணங்களாக மக்கள் பிரதிநிதிகளும் அரசியல்வாதிகளும் மாற வேண்டும். அப்படி மாறினால்தான் ஒரு சமூகமுடக்க காலத்தில் சமூகத்துக்கு தைரியம் ஊட்டலாம்வழிகாட்டலாம்.

ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எத்தனை கட்சித் தலைவர்களிடம் இது குறித்து ஆழமான தரிசனங்களும் அதற்கு வேண்டிய வாழ்க்கை ஒழுக்கமும் உண்டு? ஒரு சமூகமுடக்க காலத்தில் தனது சமூகத்திற்கு வழிகாட்ட முடியாத தலைவர்கள் எப்படி ரத்தத் துடிப்புமிக்க இளைஞர்களுக்கு வழி காட்டுவார்கள்? இவ்வாறு வழி காட்டப்படாத ஒரு வெற்றிடத்தில்தான் தாம் செய்வது குற்றம் என்று தெரியாமலேயே ஒரு சிறு பகுதி இளையோர் வாளோடும் கஞ்சாவோடும் நிற்கிறார்கள். அல்லது யாருடையதோ கைப்பாவைகளாக மாறியிருக்கிறார்கள். இது தொடர்பில் ஆழமான சமூகப்பொருளாதார உளவியல் விளக்கங்களின்றி தமிழ் அரசியல்வாதிகள் வெட்டப்பட்ட கையையும் கையை உடலோடு சேர்த்துத் தைத்த மருத்துவரையும் இரு வேறு பரபரப்பான தலைப்புச் செய்திகளாகக் கடந்து போகிறார்களா?

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#53

ஏ ஆர் எஸ் என்று நாடக - திரையுலக கலைஞர்களால் அன்புடன் அழைக்கப்படும் திரு. ஏ ஆர் சுப்பிரமணியம் அவர்கள் சிறந்ததொரு நடிகராவார். ஒருமுறை ஒரு நேர்காணலின்போது நடிகர் திலகம் அவர்கள் பற்றிக் கூறிய தகவல்களை கேட்டு மெய்சிலிர்த்து விட்டேன்.

அட, சிவாஜி ஐயாவை முதன்முதல் பார்த்து ரசித்த "பராசக்தி" படத்தில் வரும் காட்சியைக் கொண்டு சிவாஜியை அவரது நடிப்பை எவ்வாறு கணித்து வைத்திருந்தாரோ அவ்விதமே என் மனதிலும் அப்போது தோன்றியது. இவ்வளவிற்கும் எனக்கும் ஏ ஆர் எஸ் க்கும் சில வருடங்களே வயசு வித்தியாசம். பிற்காலத்தில் சிவாஜி அவர்கள் பெரும் நடிகராகப் பரிணமிப்பார் என்று நாங்கள் இருவரும் எண்ணித் திளைத்த காட்சி இதுதான். இப்படி ஒரு காட்சியை இயக்குனர்கள் கிருஷ்ணன் பஞ்சு சிவாஜியின் நடிப்பாற்றலை கண்டு மெய்ச்சித் தான் அவருக்காகவே இனைத்தார்களோ என்னவோ!

அது ஒரு தனி நடிப்பு. மோனோ ஆக்டிங் என்று சொல்வார்கள். ஒருவரே பல்வேறு குணசித்திரங்களை வெளிப்படுத்தி நடிப்பதாகும்.

கல்யாணி (ஸ்ரீரஞ்சனி) தன் தங்கையென்று தெரிந்தும் அவரிடம் நான் தான் உன் அண்ணன் குணசேகரன் என்று அறிமுகம் செய்ய முடியாத சூழ்நிலை. தங்கையின் குழந்தையை வாங்கி முத்தமிட முயற்சிக்கிறான் முடியவில்லை. தங்கைக்கும் சில காடையர்களால் ஏற்படும் தொல்லைகளிலிருந்து அவளுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என, தன்னையொரு பைத்தியக்காரனாக - "கிறுக்கண்ணா"வாக நினைக்க வைத்து அங்கிருந்த சுமைதாங்கியில் ஏறி உட்கார்ந்து கொண்டு.. "கல்லைத்தான் மண்ணைத்தான்... காய்ச்சித்தான்... குடிக்கத்தான்... கற்பித்தானா... என பைத்தியம் பிடித்தவன் போல் அரற்றுவார்.

பின், தன்னை மகாராஜனாக நினைத்துக்கொண்டு "யாரது மந்திரிப் பிர-தானிகளே வருக... வருக.. இவ்வாசனத்தில் அமருங்கள். எங்கே பரத நாட்டியம் ஆரம்பமாகட்டும்", என்று சொல்லி அவரே... "கோபாலனோடு நான் ஆடுவேனே.. வேணுகோபாலனோடு நான் ஆடுவேனே... எனப் பாடுவார். ஆடுவார்.

மீண்டும் மதில் மேலேறி ஒரு ராஜாவைப் போல் "தேச விசாரணை ஆரம்பமாகட்டும்.. டும்.. டும்.. என தண்டோரா போடுவார். மந்திரி நமக்கு மாதம் மும்மாரி பொழிகிறதா" என வினவுவார். பின் மந்திரியாக மாறிப் பதிலுரைப்பார்.

மக்களில் ஒருவராக மாறுவார். இவ்விதம் "கிறுக்கண்ணா" பல பாத்திரங்களாக மாறி மாறி நடிப்பில் வித்தியாசம் காட்டுமிடத்தைக் கண்டு ரசித்தது மல்லாமல் சிறுவயதிலேயே சிவாஜி அவர்களது எதிர்காலம் சிகரங்களை தொடுவார் என எனது உள்ளுணர்வு சொல்லியது போன்றே திரு ஏ ஆர் எஸ் சும் கணித்துள்ளாரே என வியந்தேன்.




பிற்காலத்தில் ஏ ஆர் எஸ், சிவாஜி அவர்களின் நெருங்கிய நண்பர் ஆகியது மாத்திரமின்றி சில படங்களில் அவருடன் இணைந்து நடிக்கவும் செய்தார்.

அவர்தான் "பட்டாக்கத்தி பை-ரவன்" படத்தின் மதிய இடைவேளையின் போது சாப்பாட்டுடன் வைக்கப்பட்ட தயிர் பச்சடியில் வெங்காயம் சேர்க்கப்பட்டதை வேண்டாம் என்று நீக்கச் சொன்ன சம்பவத்தையும் விளக்கினார்.

"ஏன் நீங்கள் உணவிலிருந்து வெங்காயத்தை நீக்க சொன்னீர்கள்", என சிவாஜியை பார்த்தார், "ஏ ஆர் எஸ்! நான் எதையும் காரணமில்லாமல் சொல்ல மாட்டேன், இடைவேளைக்குப் பின் எனது சீன் என்ன! யாருடன் நடிக்க போகிறேன். நெருங்கியா அல்லது சற்று விலகியா அதைத் தெரிந்து கொண்டு அதற்கேற்றாற் போல் என்னை முழுமையாகத் தயார்படுத்த வேண்டும். நான் (சௌகார்) ஜானகி இறந்துபோக அவளை மடியில் வைத்து நெருங்கி வசனம் பேசி நடிக்கும் காட்சி. என் வாயிலிருந்து உணவு மணம் வரக்கூடாது. அவளுக்கு கஷ்டமாகவிருக்கும். நீயும் இது போன்ற சின்னச் சின்ன விஷயங்களைக் கவனித்துக் கொள்" என்று பெரிய விளக்கமே தந்துவிட்டார். "உண்மையில் சிவாஜி அவர்கள் மகா பெரியவர் தான்", அவரிடமிருந்து கற்றுக்கொள்ள இன்னும் எவ்வளவோ இருக்கு", என அறிந்து சிலிர்த்துப் போனேன்" என்றார் ஏ ஆர் எஸ்.

"நடிகர் திலகம்" அவர்கள் எத்தகைய குணச்சித்திரமாயினும் புகுந்து விளையாடும் ஆற்றல் பெற்றவர். இந்த வேடத்தில் நடித்தால் எனது கதாநாயக இமேஜ் காணாமல் போய்விடுமே, எனக் கிஞ்சித்தும் கவலைப்பட மாட்டார்.

சிவாஜி ஐயா மிகவும் நகைச்சுவை உணர்வு மிகுந்தவர். SENSE முகு HUMOUR நிறைந்தவர். சாதாரணமாகப் பேசிக் கொண்டிருக்கும்போதே ஏதாவது ஜோக் அடித்து எல்லாரையும் சிரிக்க வைத்துவிடுவார். உண்மையில் நகைச்சுவையுணர்வை வெளிக்காட்டி ரைமிங் தவறாது வசனம் பேசி மற்றவர்களைச் சிரிக்க வைப்பது கடினமான சமாச்சாரம்.

நடிகர் திலகம் அவர்கள் நகைச்சுவை பாத்திரங்களையும் விட்டுவைக்கவில்லை. அவர் ஏற்று நடித்த காமெடி படங்களான "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி", "சபாஷ் மீனா" "கலாட்டா கல்யாணம்" "ஊட்டி வரை உறவு" "அஞ்சல் பெட்டி 520" "தெனாலிராமன்" ஆகியவற்றை குறிப்பிட்டு சொல்லலாம்.

"இவர் ஹீரோ, இவர் காமெடியன், இவர் பாடகர், இவர் வில்லன், இவர் ஹீரோ என்றெல்லாம் பிரித்து முத்திரை குத்தி இருந்த காலத்தில் நீங்கள் முதன் முதலாக "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி" என்ற முழு நீள நகைச்சுவைப் படத்தில் மிளிர நடித்திர்கள். அந்த கரெக்டரை நடிக்க எப்படி சம்மதித்தார்கள்? அந்த படத்திற்காக உங்களை எப்படி தேர்ந்தெடுத்தார்கள்? என்ற கேள்விக்கு பதிலுரைக்கும் போது, இவ்வாறு கூறினார்.

"அந்த படத்தை ப. நீலகண்டன் இயக்கியிருந்தார். பத்மினி பிக்சர்ஸ் பி ஆர் பந்துலு தயாரித்திருந்தார். அது ஒரு மராட்டிய சப்ஜெக்ட். அதில் நான் நடித்தேன். அதாவது, ஆபாசமே இல்லாமல் காமெடி இருக்க வேண்டும் என்பதை மையமாகக் கொண்டு எடுத்த படம் அது.

நான் அப்படத்தில் நடிக்க வேண்டும் என்றார்கள். ப நீலகண்டன் அவர்களே எனக்கு சின்ன வயதில் இருந்தே தெரியும். அவர் ஏவிஎம்மில் இருந்தவர். நான் "பராசக்தி" படம் நடிக்க போன போது, "ஸ்திரிபாட்" நடிகனை எல்லாம் ஏன் உள்ளே கொண்டு வந்தீர்கள்?" என்று கூறியவர் அவர்தான். அவரே என்னிடம் வந்து "நீங்கள் என் படத்தில் நடிக்க வேண்டும்" என்று கேட்டால் யாருக்கு வெற்றி? எனக்கு தானே வெற்றி! ஆகையால் நான் நடித்தேன்.




கலைவாணர் என் எஸ் கே அவர்கள் இருக்கும் பொழுது நல்ல காமெடி உண்டானது. அவர் பேசப் பேச, நான் சிரித்துக் கொண்டே இருப்பேன். ரெக்கார்டில் வைக்க வேண்டுமென்றால் "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி" போன்ற காமெடிகளை தான் வைக்க வேண்டும்.

அது ஒரு கிளாசிக் காமெடி என்று சொல்லலாம். நடிப்பு என் தொழில். அதில் நகைச்சுவையும் ஒரு பகுதிதானே! ஆகவே நடித்தேன். அது என்னால் முடியும் என்று தெரிந்து தானே என்னை தேர்ந்தெடுத்தார்கள்.

தொடர்ந்து "சபா" மீனா" படம் வந்தது. அதுவும் காமெடி படம்தான். நானும் சந்திரபாபுவும் நடித்தோம். அவர் நல்ல காமெடியன். இந்தக் காலத்தில் கூட அவர் போல பாடி ஆடுகிறார்கள். அவர் அதை எல்லாம் ஏற்கனவே செய்துவிட்டார். அந்தப் படத்தைப் பார்த்தவர்கள் மனம் குளிரச் சிரித்தார்கள். எனக்கும் நல்ல பெயர் கிடைத்தது.

என்னிடம் நகைச்சுவை உணர்வு மறைந்திருப்பதை முதலில் கண்டுபிடித்துச் சொன்னவர் "அந்த நாள்" இயக்குனர் வீணை எஸ் பாலசந்தர் ஆவார். "தூக்குத்தூக்கி" படத்திலும் எனக்கு நகைச்சுவையோடு கலந்த பாத்திரம்தான்.

"கொண்டுவந்தால் தந்தை.
கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் தாய்
சீர் கொண்டு வந்தால் சகோதரி.
கொலையும் செய்வாள் பத்தினி,
உயிர் காப்பான் தோழன். இக்கருத்தை
மையக்கருவாக கொண்டு எடுக்கப்பட்ட படமாகும்"

இப்படத்தில் பாடலுக்குத் தான் முக்கியத்துவம். லலிதா, பத்மினி போன்ற பிரபலமானவர்கள் நடித்துள்ளார்கள். இப்படத்தின் பாடல்கள் தான் முக்கியம். கிராமங்களில் எல்லாம் ஒரு வருடம் - இரண்டு வருடம் அந்த பாடல்கள் தான் ஒலித்துக் கொண்டிருந்தன.

இந்த படத்தின் மூலம் தான் டி எம் சௌந்தரராஜன் அவர்கள் எனக்காக எழுதப்பட்ட பாடல்களை முதன்முதலில் பாடினார். அதில் உள்ள பாடல்களை கேட்டுக்கொண்டே இருக்கலாம். சலிப்பை இருக்காது.

அந்த இசை கலந்த படத்தில் நானும் இருந்தேன் என்ற பெருமையே ஒழிய அதில் இடம் பெற்ற பாடல்களுக்கு தான் எல்லா பெருமையும் சேரும்" என்று சிவாஜி ஐயா கூறி வைத்ததை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

நினைவுகள் விரியும்....

1st DOSE & 2nd DOSE
POP-UP CLINIC
The Hub – Scarborough Centre for Health Communities
2660 Eglinton Ave. E.
Thursday, July 8
9 AM – 2 PM

Vaccine: Pfizer
FOR 12+ YEARS OLD WHO LIVE, WORK OR GO TO SCHOOL IN SCARBOROUGH
For 2nd dose: Must have received 1st dose of Pfizer at least 21 days ago, OR 1st dose of AstraZeneca at least 8 weeks ago

Vaccine: Moderna
FOR 18+ YEARS OLD WHO LIVE, WORK OR GO TO SCHOOL IN SCARBOROUGH
For 2nd dose: Must have received 1st dose of Moderna at least 28 days ago, OR 1st dose of Pfizer at least 21 days ago, OR 1st dose of AstraZeneca at least 8 weeks ago

- Must provide proof of employment or residence
- Please bring health card or government-issued ID, if you have one
- Bring 1st dose vaccination receipt (Download at https://covid19.ontariohealth.ca/)

Walk in: Tickets will be provided for same day appointments starting on the day of the pop-up on a first-come first-served basis.

Learn more:
www.ScarbVaccine.ca
SCARBOROUGH COVID-19 VACCINE CLINIC

# Covid – 19 தடுப்பூசி பற்றிக் கற்பிக்கும் முதல் முயற்சி எனக் குறிப்பிடக்கூடிய கற்கைச் சிகிச்சையகம் ஒன்று ஸ்கார்பாரோவில் திறக்கப்படுகின்றது

தகுதிவாய்ந்த, புரிந்துணர்வுள்ள மருத்துவர்களில் ஒருவருடன்-ஒருவர் தனிமையில் நேரடியாகக் கலந்தாலோசிக்கும் வசதியை **"VaxFacts Clinic"** ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

**SCARBOROUGH** (ஸ்கார்போர்க் - ஜூலை 7, 2021) **COVID-19** தடுப்பூசி பெறுவது குறித்து உறுதியாகத் தெரியாத ஸ்கார்பாரோ குடியிருப்பாளர்கள் **Scarborough Health Network (SHN)** இன் புதிய **VaxFacts Clinic** மூலம் தடுப்பூசி நிபுணருடன் தனியாக ஒருவருடன்-ஒருவர் தொலைபேசியில் உரையாடுவதற்கு இப்போது பதிவு செய்து கொள்ளலாம். **COVID-19** தடுப்பூசியைப் பெறுவதன் அபாயங்கள் மற்றும் நன்மைகள் குறித்து மக்களுக்கு அறிவுறுத்துவதற்கும், கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கும், உண்மைத் தரவுகளைத் தெளிவுபடுத்துவதற்கும் தகுதிவாய்ந்த, புரிந்துணர்வுள்ள **SHN** மருத்துவர்கள் உள்ளனர்.

"தடுப்பூசி குறித்த நிச்சயமற்ற தன்மை புரிந்துகொள்ளக்கூடியதும் மிகவும் பொதுவானதுமாகும். அழுத்தம் பிரயோகிக்காமல் பாதுகாப்பான விதத்தில், தகவலறிந்த முடிவை எடுப்பதற்குத் தேவையான சரியான விவரங்களைக் குறித்து உங்களுடன் பேசவும், கரிசனைகளைக் கேட்கவும் உங்களுக்கு உதவவும் எமது மருத்துவர்கள் தயாராக உள்ளனர்," என்று **VaxFacts Clinic** இன் தலைமை மருத்துவரும், **SHN** இன் பன்முகத்தன்மை, சமத்துவ சுகாதாரம் மற்றும் உலக சுகாதாரம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாளருமான **Dr. Latif Murji** கூறினார்.

உண்மையில், நிபுணர்கள் கூறுகையில், வரலாற்று ரீதியாகத் தடுப்பூசி போடுவதற்கு மக்கள் தயங்கக்கூடிய மூன்று முக்கிய காரணங்கள் குறித்து அறிவதற்கு **VaxFacts** மருத்துவர்கள் உதவுகின்றனர்:

உரியவசதி: அமைவிடம், நேரம், அணுகக்கூடிய தன்மை அல்லது பக்க விளைவுகள் ஏற்பட்டால் வேலையிலிருந்து லீவு எடுப்பது ஆகியன தடைகளாக இருக்கக்கூடும்
தன்னிறைவு: வயது அல்லது நல்ல உடலாரோக்கிய நிலை காரணமாக **COVID-19** இனால் தீவிரமான நோய்த்தாக்கத்துக்கு ஆளாகும் அபாயம் குறைவாக இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர்.
நம்பிக்கையின்மை: சில நபர்கள் தடுப்பூசி(கள்) அல்லது அவற்றின் மூலப்பொருட்களின் பாதுகாப்பு குறித்துக் கேள்வி எழுப்புகின்றனர் (உதாரணமாக, தற்போதைய தடுப்பூசிகளில் விலங்குப் பகுதிகள் இல்லையா) மற்றும் சிலருக்கு சுகாதாரப் பராமரிப்பு முறை மீது நம்பிக்கை இல்லை வரலாற்றுத் துன்புறுத்தல் மற்றும் பரிசோதனைகள் அத்துடன் சுகாதார அமைப்பில் இன்று காணப்படும் முறைசார் இனவெறி ஆகியவற்றின் காரணமாகப், பூர்வீகக் குடிகள் மற்றும் இனமயமாக்கப்பட்ட சமூகங்களிடையே இது மிகவும் பொதுவானதாகும்.

சாத்தியமான பக்க-விளைவுகள் (57%) அல்லது ஏற்படக்கூடிய நீண்ட-கால விளைவுகள் (54%) பற்றிக் கவலைப்படுவது அல்லது *COVID-19* தடுப்பூசி இவ்வளவு விரைவாக உருவாக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டதனை அவர்களால் நம்ப முடியாதிருப்பது (52%) போன்ற முதன்மையான மூன்று காரணங்களினால் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மையினால் தடுப்பூசி மீது ஏற்பட்டுள்ள நம்பிக்கையின்மையே ரொறன்ரோக் குடியிருப்பாளர்களுக்கு மிகப்பெரிய தடையாக உள்ளது என ஜிளழள மற்றும் ரொறன்ரோ பொது சுகாதாரம் நடத்திய

ஏப்ரல் 2021 தடுப்பூசி மதிப்பாய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ரொறன்ரோ குடியிருப்பாளர்களில் பெரும்பாலோர் (91%) COVID-19 தடுப்பூசி பற்றிய மேலதிகத் தகவல்களை அறிய விரும்புகிறார்கள், அதாவது இது எவ்வளவு காலத்துக்குப் பாதுகாக்கும் (60%), இரண்டாவது டோஸ் தடுப்பூசியைத் தாமதப்படுத்துவதனால் ஏற்படும் விளைவுகள் (52%) **COVID-19** இன் உருமாறும் மற்றும் திரிபுபடும் வகைகளுக்கு எதிராக இந்தத் தடுப்பூசி எவ்வளவு தூரம் பயனளிக்கும் (49%), மற்றும் சாத்தியமான பக்க-விளைவுகள் பற்றிய தகவல்கள் (47%).

இன்னமும் தாமதமாகவில்லை! ஸ்கார்பாரோவில் வசிக்கும், **COVID-19** தடுப்பூசி குறித்துக் கேள்விகள் அல்லது கரிசனைகள் உள்ள எவரையும் இணையத்தளத்தில் ஒரு சந்திப்புக்குப் பதிவு செய்யுமாறு அல்லது தொலைபேசி மூலம் 416-438-2911 **ext** 5738 ஐ அழைத்து முன்பதிவு செய்யுமாறு **SHN** ஊக்குவிக்கின்றது. மேலதிகத் தகவல்களுக்குத் தயவுசெய்து பார்வையிடவும் **www.shn.ca/vaxfacts.**

**Scarborough Health Network** பற்றி:

எமது மூன்று மருத்துவமனைகள் மற்றும் எட்டு சற்றலைட் தளங்கள் மூலம் **Scarborough Health Network (SHN)** எதிர்காலப் பராமரிப்பினை வடிவமைக்கின்றது. எமது பல்வேறு திட்டங்களும் சேவைகளும், கனடாவில் மிகவும் சுறுசுறுப்பானதும் பல்வேறுவகை மக்களைக் கொண்டதுமான சமூகங்களில் ஒன்றான இச்சமூகத்தின் தேவைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. நாங்கள் ஒன்ராறியோவின் மிகப்பெரிய சிறுநீரகவியல் திட்டத்திற்கும், கிழக்கில் ஸ்கார்பரோ மற்றும் அதனைச் சுற்றியுள்ள சமூகங்களுக்காக ஒதுக்கப்பட்ட இதயப் பராமரிப்பு மையத்திற்கும் உரித்துடையவராவோம். அடுத்த தலைமுறையைச் சேர்ந்த உடல்நலப் பராமரிப்பு நிபுணர்களுக்குப் பயிற்சி அளிக்க உதவுவதற்காக ரொறன்ரோ பல்கலைக்கழகத்திற்கான சமூகத்துடன்-இணைந்த கற்பித்தல் தளமாகவும், ஏனைய பல பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுடன் பங்காளராகவும் இருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கின்றோம். **shn.ca** இல் மேலும் அறிந்துகொள்க.


MURALI BUS LTD. 28 years
416.455.3514

56 SEATER COACH BUS




WWW.MURALIBUS.CA

8-SEAT LIMO




Canada & US Anywhere

2 தடுப்பூசிகளும் போட்டிருத்தல் அவசியம்
முகக்கவசம் அணிய வேண்டும்

T1
Montreal Tour and Val Morin Temple
தேர் திருவிழா
July 17 and 18th
Saint Joseph Church, Mont Tremblant, Beach & Boat Driving
(2 people in a room)
$230
தேர் பவனி இல்லை



T2
SEPTEMBER
Cuba சுற்றுலா



T3





EAST COAST
August
4 Province Tour
(4 மாகாணங்கள்)



* Mont Tremblant
* Longest covered bridge
* Reversing Falls
* Magnetic Hill
* Hopewell Rocks
* Peggy's Cove
* Swiss Airflight Crash Scene
* Maritime Museum
* Parliament Building (Charlottetown)
* Historical Place (Charlottetown)
* Potatoe Farm
* Beach

*Quebec *Nova Scotia
*New Brunswick
*Prince Edward Island (P.E.I)

$899
(each person)

(6 night hotel & bus fare) (2 people in a room)





முன்பதிவு செய்தல் அவசியம். தொடர்புகளுக்கு அழையுங்கள்
Murali 416.455.3514 | muralitaran@outlook.com

# கைபேசியும் உறக்கமும்



இன்றைய உலகில் கையடக்க தொலைபேசியின் பாவனை மிகவும் அவசியமானது என்பது நாம் அனைவரும் அறிந்ததே! இதன் பாவனைக்கான நேரமும் அதிகமாகவே உள்ளது. முக்கியமாக நாம் இரவு உறங்கும் முன்பு அதிக நேரம் கையடக்க தொலைபேசியை உபயோகப்படுத்துகிறோம் இது மிகவும் தவறான விடயம் காரணம், இதனால் எமக்கு தூக்கமின்மை, புத்துணர்ச்சி இன்மை, மனச்சோர்வு போன்ற பிரச்சனைகள் ஏற்படுகிறன. இது மட்டுமல்லாமல் இதுனுடன் சேர்ந்து நீரிழிவு நோய் மற்றும் இருதய நோய் போன்றன ஏற்படும் என ஆய்வுகள் கூறுகின்றன.

கைபேசியில் காணப்படும் நீல கதிர்கள் எனப்படும் ஒரு வகையான கதிரானது பயன்பாட்டின் போது எமது கண் வழியாக மூளைக்குச் சென்று மூளையின் முக்கிய தொழிலான எமது உடற்பாகங்களை உரிய நேரத்தில் செயற்படுத்துவதை தடை செய்கிறது.
குறிப்பொக இதன் தாக்கம் அதிகமாக இரவு நேரம் படுக்கைக்குச்சென்ற பின் கையடக்க தொலைபேசியை பயன்படுத்துவதால் ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல் இது முக்கியமாக இளம் வயதில் ஞாபக மறதி ஏற்படுவதை அதிகரிக்கும்.
நாறொன்று சிறப்பாக அமைய இரவில் சிறந்த உறக்கம் கண்டிப்பாக தேவை. ஆனால் இரவில் தூங்கும் முன் அதிகமான கையடக்க தொலைபேசி பாவனையால் சீரான உறக்கம் பெடுவதோடு எமது மூளையும் சரி உடலும் சரி எது இரவு எது பகல் எனும் குழப்பத்திற்கு உள்ளாகி விடும்.



இவ்வாறு பல பாதிப்புகள் ஏற்படுவதால் முடிந்தளவு இதனை தவிர்க்க நான்கு முக்கிய விடயங்களை கையாளுவது பற்றி இக்கட்டுரை மூலம் பார்க்கலாம்.

முதலாவது, படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு மின் சாதனங்களை குறிப்பாக கையடக்க தொலைபேசியை பயன்படுத்த வேண்டாம். இது பலருக்கு கடினமான விடயம் என்றாலும் எமது ஆரோக்கியத்தை நினைத்து செயற்பட்டால் எதுவும் சாத்தியமே.

இரண்டாவது, துயில் எழும்பிய பின்னும் குறைந்தது ஒரு மணி நேரமாவது கையடக்க தொலைபேசியை உபயோகிக்காமல் இருக்க வேண்டும். இது எவ்வாறு சாத்தியமாகும் என நீங்கள் கேட்டாலும் உங்கள் உள் மனது ஏன் சாத்தியமாகாது என கேட்கும். காலையில் எழுந்த வுடன் நல்ல விடயங்கள் மற்றும் இயற்கை காட்சிகளை பார்ப்பது மனதுக்கு மேலும் இன்பத்தை தரும்.

மூன்றாவது, ‘ சூரிய வெளிச்சத்தை அனுபவித்தல்”. முதலில் கூறியது போல் நீல கதிர்கள் இயற்கையாகவே சூரிய வெளிச்சத்தில் கிடைக்கிறது. காலையில் எழுந்ததும் சூரிய வெளிச்சத்தில் அனுபவிப்பதாலும் அதனை பார்ப்பதாலும் கிடைக்கும் இயற்கையான நீல கதிர்கள் மூளைக்கு எது இரவு எது பகல் என பிரித்தறியும் திறனை நிலையாக வைத்திருக்க உதவுகிறது. இதனால் செயற்கயான நீல கதிர்களின் பாதிப்பு குறைவடைந்து நாளொன்றில் சிறப்பாக இயங்க வழிவகுக்கிறது.

நான்காவது, இரவில் கையடக்க தொலைபேசி மூலம் தொழில் செய்பவராக இருந்தால் நீல கதிர்கள் தடுப்பு கண்ணாடி பாவிக்கவும் அல்லது நீல ஒளி கதிர்கள் தடுப்பு அப்பிளிக்கேஷனை உங்கள் தொலைபேசியில் உட்செலுத்தி அதனை பயன்படுத்தலாம்.

இவற்றை கையாளுவதன் மூலம் மேலே குறிப்பிட்டது கோல் கையடக்க தொலைபேசியின் இரவு நேர பாவனையால் ஏற்றப்படும் பாதிப்புக்களை பெருமளவில் குறைக்கலாம். சில தவறுகளை அறியாமல் செய்கிறோம். அறிந்த பின் அவற்றை குறைக்க முயல வேண்டும். இதனால் நாம் மட்டுமல்ல எம்மை பார்த்து வளரும் எதிர்கால சந்ததியினரும் நன்மையே அடைவர்.

- உங்கள் இரா சஹானா



# நித்தியானந்தரின் இந்து தேசம் கைலாயத்தின் கோரிக்கை



கிட்டத்தட்ட 4 அல்லது 5 வருடங்களுக்கு மேலாக கைலாயம் என்ற பதமானது பல்வேறு தரத்திலும் பேசப்பட்டுவந்திருக்கின்றது. அடிக்கடி பல ஊடகங்களின் பேசு பொருளா-கவும் இருந்திருக்கின்றது. சிலருக்கு அது மிகப்பெரிய ஆச்சரியம். சிலருக்கு அது ஒரு நகைப்புக்குரிய விடையமாக இருந்தும்வந்திருக்கிறது. இன்னும் சிலருக்கோ அது பெரும் ஏக்கமாகவும் இருந்திருக்கிறது. ஆனால் அறிந்தோ அறியாமலோ இந்துப் பாரம்பரியத்திற்கு அது மிக மிக அவசிய-மானதும் அதிமுக்கயமான தேவையாகவும் இருந்திருக்கிறது. அனைத்து இந்துக்களும் மிகவும் மகிழ்ச்சியடைய வேண்டியதோடு மட்டுமல்லாது அறிந்து புரிந்து கொள்ள வேண்டும். இந்து தேசம் என கைலாசா ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரம் பெற்றிருக்கின்ற நிகழ்வானது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சம்பவமே. உலகிலுள்ள இந்துக்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் இந்து தேசம் என்ற ஒன்று இருக்கின்றது என. இவ்வாறான வரலாற்று நிகழ்வினை ஏற்படுத்தியவர் பகவான் ஸ்ரீலஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் அவர்களே.

பகவான் ஸ்ரீலஸ்ரீ நித்தியானந்த பரமசிவத்தின் கோரிக்கையை ஏற்று கைலாசத்தை ஒரு தனி நாடாக அறிவித்திருக்கின்றது ஐ. நா. சபை. சுவாமி விவேகானந்தருக்குப் பின்பு மேலை நாட்டுச் சபையில் சனாதன இந்து தர்மத்தின் சத்தியத்தின் மேன்மையைப் புரிய வைத்து வெற்றி கண்டுள்ளார் ஒரு தமிழ் சைவ வீரத் துறவி சுவாமி நித்தியானந்த பரமசிவம் அவர்கள். யோகிகளும், துறவிகளும் கனவு கண்டதை பகவான் அவர்கள் நிஜத்தில் உருவாக்கி விட்டார்கள். *“சுவாமி விவேகானந்தர் விரும்பினார். யோகானந்த சுவாமி அவர்கள் மிகவும் ஏங்கினார். அரவிந்தோ தன் வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்தார். ஆனால் சதாசிவன் செய்து முடித்தார், ராமகிருஸ்ணர், ரமண மகரிஷி, விவேகானந்தர் மற்றும் ஏனைய துறவிகள், மகான்களின் கூட்டு முயற்சியின் விளைவே கைலாயமென” சுவாமி நித்தியானந்த பரமசிவம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இன்று அது நிஜத்தில் நிறைவேறியிருக்கிறது. 200 வருடங்களாக அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இந்து தர்மத்தின் ஆதிவே-ர், ஆணிவேர் கைலாயதேசம்.* அதுமட்டுமல்ல இந்து தர்மத்தின் வழியில், பல குருமார்களின் வழிகாட்டுதலின்படி வாழ்ந்து வருகின்ற ஞானமடைந்த ஒரு சந்நியாசினினது நெறிப்படுத்தலின்கீழ் அமையப்போகின்ற ஒரேயொரு இந்து தேசம் கைலாயம். இந்துதர்ம வரலாற்றினைப் பின்நோககிப் பார்த்தால் தெரியும் அரசன்மாரை வழிநடாத்திய பிரதம மந்திரி ஒரு ஞானமடைநதவராக இருந்திருக்கின்றார். அத்துடள் அரச-சபையில் அரசனுடைய குருவிற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். அரசன் தனக்குச் சந்தேகம் எழும்போதெல்லாம் அந்தக் குருவே அரசனை வழிநடாத்தியிருக்கின்றார். அதனால் அறம் வழுவாது அரசனால் ஆட்சி செய்ய முடிந்திருக்கின்றது.




இந்துதர்மத்தை கடைப்பிடித்து வாழ்வதற்கு சுதந்திரமான ஒரு பிரதே-சம் தேவையென்பதை பகவான் அவர்கள் தீர்க்கமாகவே தெரிவித்திருந்தார். அது மட்டுமல்ல அதற்கு அரசியல்ரீதியாக அங்கீகாரம் தேவையென்பதையும் தெரிவித்திருந்தார். அரசியல் அந்தஸ்து இருந்தால்தான் மக்கள் இந்துதர்மத்தைக் கடைப்பிடித்து வாழவதற்கும், பயிற்சி செய்வதற்கும் அங்கு எந்தவிதமான எதிர்ப்போ, அல்லது தடைகளோ இருக்காது என்பதை பகவான் அவர்கள் பலமுறை கூறியிருக்கின்றார்.

உலகிலுள்ள இந்துக்களுக்காக, இந்து பாரம்பரியத்தை ஒரு விதை வங்கியாகவாவது தான் இருக்கும்போது செய்து வைத்துவிட வேண்டும் என்பதற்காக பகவான் அவர்கள் எடுத்த அயராத முயற்சியின் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரம் இன்று கிடைத்திருக்கின்றது. *இந்த சம்பவமானது ஒவ்வொரு இந்துவும் கொண்டாட வேண்டிய ஒரு வரலாற்று நிகழ்வு.* பகவான் அவர்கள் மனித சமுதாயத்தின்மேல் கொண்டிருக்கின்ற அளவிட முடியாத அன்பினாலும், அக்கறையாலும்தான் அவர் கைலா-யம் என்ற ஒரு நாட்டை அமைத்தார். பல்வேறு தரப்பட்ட சிரமங்களையெல்லாம் தாண்டியே பகவான் நாடு சமைத்திருக்கின்றார் என்பது அவரது பக்தர்கள், சீடர்கள் அறிந்த விடையம். பகவான் அவர்கள் 2020ம் ஆண்டு மாசி மாதம் நடைபெற்ற சிவராத்திரி தினத்தன்று கைலாச நாடு அமைந்திருப்பதை வெளிப்படுத்தியிருந்தார். தற்போது கைலாயமானது ஒரு தேசத்திற்குரிய அங்கீகாரத்தைப் பெற்றிருக்கின்றது.




தற்போது நடந்து முடிந்த ஐக்கிய நாடுகளின் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்தது மட்டுமல்ல, பகவான் நித்தியானந்தர், மற்றும் அவரது ஆஸ்ரமங்களின் மீதான தாக்குதல்களைக் கவனத்தில் கொண்டு அவருக்கு அநீ-தி இழைக்கப்பட்டுள்ளது என்பதனையும் வெளிப்படையாக அங்கீகரித்துள்ளது. அத்துடன் மேலும் அந்தத் தாக்குதலுக்குரிய விசாரணை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவும் அரச நிறுவனங்களுக்கு பரிந்துரை செய்யவும் உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றது.

பகவான் அவர்கள் நீண்ட காலமாக பல்வேறு தாக்குதல்களுகளுக்கும் உட்படுத்தப்பட்டிருக்கின்றார். வெவ்வேறு காலகட்டங்களில் பவ்வேறு வகைப்பட்ட குழுக்களினால் பகவான் தாக்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார். இவ்வாறான தாக்குதல்களை இந்துமத விரோதிகளே பின்நின்று நடாத்தியிருக்கின்றனர். அதுமட்டுமல்ல அரச பாதுகாப்புத்துறையினர்கூட பாரமப்சமாகவே பணியாற்றியிருக்கிறார்கள். பல ஆச்சிரமங்கள் அடித்து நொருக்கப்பட்டிருக்கின்றன, சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன, அத்துமீறி உள்ளே நுளைந்திருக்கின்றார்கள். பாதுகாப்புத்துறையைச் சார்ந்த அரச அதி-காரிகள் விசாரணை என்ற பெயரில் குழந்தைகளிடம் தப்பான தகவல்களைப் பரிமாறியிருக்கின்றார்கள். இந்து மதத்திற்கு எதிரான செயல்களைச் செய்யும்படி குழந்தைகளை வற்புறுத்தியிருக்கின்றனர். உ-ம் ஆச்சிரமங்களில் சுத்த சைவ உணவு மட்டுமே சமைக்கப்படுகின்றன, பரிமாறப்படுகின்றன. குழந்தைகளை புலால் உணவை உண்ணும்படி வற்புறுத்தியிருக்கிறார்கள் அரச அதிகாரிகள். இவ்வாறு பகவானின் நற்பெயருக்குக் களங்கம் வரத்தக்க வகையில் உண்மைக்குப் புறம்பானவகையில் பல்வேறு குற்றச்சாட்டுகள் சித்தரிக்கப்பட்டன. பகவான் அவர்களே “என்னை அடித்துப்பார்க்காத ஆளே இல்லை” என பலமுறை கூறியிருக்கிறார். பகவான் நித்தியானந்த பரமசிவத்தைப் பற்றி தாமே தமக்கு ஏற்றாற்போல, தாங்களே தங்களுக்கு தெரிந்தவற்றை மட்டும் அதில் எந்தளவிற்கு உண்மை இருக்கின்றது என்பதைக் கூட பரிசீலனை செய்துபார்க்காது தாமே சித்தரித்து ஊடக தர்மம் என்பதை சிறிதளவேனும் கடைப்பிடிக்காது பொய்யான தகவல்களை எண்ணற்ற ஊடகங்கள் வெளியிட்டு வந்திருக்கின்றன, வெளியிடுகின்றன. இவ்வாறு சமுக வலைத்தளங்களில் பரப்புவது, ஊடகங்களில் பரப்புவது என மிகவும் ஒற்றுமையாக இணைந்து இந்து மதத்தை அழிப்பதற்காக இந்து மத வி-ரோதிகள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இத்தகைய தவறான செய்திகளை நம்பியமக்களும் நம்மிடையில் இருக்கத்தான் செய்கிறார்கள்.




தற்பொழுது இந்துக்களுக்கு என ஒரு நாடு கிடைத்து, அனு-மதியும் கிடைத்திருக்கின்றது என்ற தகவலானது, சகல மக்களிடமும் போய்சேர வேண்டியிருக்கின்றது. இந்து தர்மத்தை அழிக்க விழைகின்ற விரோதிகள் மிக வேகமாகவும், ஒற்றுமையாகவும் செயற்படுவது போன்று இந்துக்களும் இத் தகவலை ஏனைய இந்துக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய கடமை இருக்கின்றது. இதற்கான பொறுப்பை எடுக்கின்ற இந்து மக்களினது வாழ்வு ஆனந்தமானதாகவும், மங்களகரமாகவும் மிளிர்கின்றது. எனவே ஒவ்வொரு இந்துவும் எதிர்காலத்தில் உங்களது சந்ததி தன்மானத்தோடு வாழவேண்டுமென்பதற்காக உலக மக்களுக்கு இத்தகவலை கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது அவசியமாகும்.




*“மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்”*


உலகமெல்லாம் சைவ நீதி தழைத்தோங்கிய காலம் ஒன்று இருந்திருந்கின்றது என்பதற்கு பல்வேறு தமிழ் இலக்கியங்களும், கல்வெட்டுக்களும், பல நாடுகளில் வானாளாவ எழுந்து நிற்கும் இந்து கோவில்களும் சான்று பகல்கின்றன. ஆனால் நம்மில் பலர் உண்மையான விடையங்களுக்கு ஆதாரம் கேட்பதுண்டு, ஆனால் பொய்யான தகவல்களை ஊடகங்கள் கூறும்போது அவற்றை இலகுவில் நம்பிவிடுகின்ற அறிவீனர்களாகவும் இருக்கின்றனர்.

திபெத், இஸ்ரேல், வடிக்கான் போல கைலாய தேசமும் ஒரு மதரீ-தியான நாடு என்றும் அதுவும் இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கப்போகும் நாடு எனவும் அதற்கான ஆதரவையும் அங்கீகாரத்தையும் அளிப்பாக ஐ. நாடுகள் சபையானது அங்கீகரித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிட வேண்டிய முக்கியமான வேறொரு விடை-யமும் அடங்கியிருக்கிறது. அதில் கைலாய தேசத்தை கைலாச யூனியன் என்று ஐ. நா, சபை குறிப்பிட்டுள்ளது.

மேலும் பகவான்மீதான தாக்குதல்களுக்கு விரிவான விசாரண செய்யப் பரிந்துரைக்கப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் பகவான்மீது பாரியளவிலான சட்ட நடவடிக்கைகள், கொலைத்தாக்குதல்கள், பாலியல்ரீதியான தாக்குதல்கள் என பலவகையான தாக்குதல்கள் கிட்டத்தட்ட இருபது வருடங்களாக தொடுக்கப்பட்டு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஐ. நாடுகள் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அத்தோடு இந்து மத குருமார்கள் மீதும் சந்நியாசிகள் மீதும், நடாத்தப்பட்ட தாக்குதல்கள் பற்றியும் விசாரிக்கப் போவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பல தாக்குதல்கள் ஊடகங்களாலேயே கூட நடாத்தப்பட்டிருக்கின்றது. பலதடவைகள் ஆதி கைலாசமானது அடித்து நொருக்கப்பட்டிருக்கின்றது. இதேமாதிரி வேறு ஆசிரமங்களும் தாக்குதலுக்கு உட்பட்டிருக்கின்றன. பகவான் அவர்கள் இவ்வளவு தாக்குதலுக்கு மத்தியிலும் தளராது தான் எடுத்த காரியத்தில் வெற்றி பெற்றிருப்பது இந்து தர்மத்திற்குக் கிடைத்த பாரிய வெற்றியெனலாம்.

இந்துவாகப் பிறந்தவர்கள் எல்லோரும் இந்துக்களாகிவிட முடியுமா என்பது ஒவ்வொரு இந்துவும் சிந்திக்க வேண்டிய விடையம். இந்து தர்மத்தினை தனது வாழ்க்கையின் நெறியாகக் கடைப்பிடிக்காதவர்களை எவ்வாறு இந்துக்கள் என அழைக்கலாம் என்ற கேள்வி எழுகின்றது. அழகா-ன ஒரு இந்து தர்ம நாடு மலர்ந்திருக்கின்றது. அங்கே இந்துத் துறவி-யின் வழிகாட்டலின்படியே நாட்டுக்கான சட்டதிட்டங்கள் அமையவுள்ளன. அத்துடன் கைலாசாவில் விவாகரத்து என்ற சொல்லுக்கே இடம் இல்லை எனத் தெரிவித்திருக்கின்றார். ஏனென்றால் இந்து தர்மத்தின்படி விவாகரத்து என்ற சொல்லே இல்லை எனப் பகவான் கூறியிருக்கின்றார். கணவன் மனைவிக்கு இடையில் ஏற்படுகின்ற சிக்கலைத் தீர்ப்பதற்கு பூரணத்துவ தந்துவத்திற்கு இணங்க சில வழிமுறைகள் அமைக்கப்படும் எனவும் அவர்கள் அதன்படி வழிகாட்டப்படுவார்கள் எனவும் தெரிவித்திருக்கின்றார். எனவே இந்து தர்மத்தின் படி வாழ்வதற்கும் அல்லது இந்து தர்மத்தைப் பயிற்சி செய்வதற்கும் ஏற்றவகையில் நமக்கு நாடுகிடைத்திருக்கின்றது மட்டுமல்ல அதிகமான நாடுகளில் கோவில்கள் அமைக்கப்பட்டு அவைகள் கைலாயங்கள் என்ற பெயருடன் இயங்கிவருகின்றன.

உலகில் 195 நாடுகள் ஐ.நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 770 நாடுகள் ஐ,நா.வின் அங்கீகாரம் கிடைக்காத நாடுகளும் இருக்கின்றன. ஆனால் இந்த இரண்டுவகையான நாடுகளையும் சேர்த்துப் பார்த்தால் இவற்றில் பல நாடுகளிலும் இந்துதர்மம் ஒரு மதமாகக்கூட கருதப்படவில்லை. இவ்வாறான இருவகை நாடுகளிற்கும் பகவான் நித்தியானந்த பரமசிவம் அவர்கள் இந்து தர்மம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது மட்டுமல்ல அதன் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் புரியவைத்திருக்கின்றார். இந்து தர்மத்தைப் புனரமைத்து, புத்துயிரளித்து அதில் வாழ்ந்து அந்த இந்து தர்மத்தையும் வாழவைப்பதற்கு கைலாச தேசம் கிடைத்திருக்கின்றது என்பது ஒவ்வொரு இந்துவிற்கும் கிடைத்திருக்கின்ற ஒரு அரிய சந்தர்ப்பமே.




Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
Contact: Siva
416-706-8160


PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!
RE/MAX
Four Sixteen Whitby Condos
Old Colony Estates
Hillsborough
Anchor Woods
Anchor Woods By Andrin Homes
Hometown Sharon Village
Blue Sky
Universal City Condos 4
U.C. Homes
Cornell Rouge Homes
On the Mark Towns
Angus Glen South Village Homes
Victory Green Homes
Nao Towns
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 954



## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், கொழும்பு

**"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்**
**தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை**
**சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே**
**வீழ்த்த வாவினையேன் நெடுங்காலமே."**

கொழும்பு மாநகரிலே உள்ள அனேகமான கோயில்களை இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் குடியேறிய செட்டிமார்களே கட்டியுள்ளார்கள். அவர்களது சந்ததியினரே தொடர்ந்து இக்கோயில்களைப் பராமரித்தும் வருகின்றனர். இந்நிலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. அருணாசலம் பொன்னம்பலம் அவர்கள், அடியிட்டு வளர்த்துச் சென்ற இக்கோயில், இன்றும் தன்னிலை மாறாமல் எச்சமயத்தவர்களையும் வரவேற்று வாழ்வழிக்கின்றது.

கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலின் உட்பிரகார அமைப்புக்களை நோக்கும்பொது, தென்னிந்திய கோயிலான மதுரை மீனாட்சிஅம்மன் கோயிலிலே நிற்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. அமைப்பிலும் அவ்வாறான ஒரு ஒருமைப்பாட்டைக் காண முடிகின்றது. ஆலயத்தைச் சுற்றிலும் உள்ளும்புறமும் காணப்படும் வீதிகள் பரந்தவையாக அமைக்கப்பட்டுள்ளன.

கொச்சிக்கடையில் அமைந்துள்ள பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் பொதுஅமைப்பு, தென்னிந்திய கருங்கற் கோயில்களின் அமைப்போடு ஒத்துள்ளது. இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக, கற்பக்கிரகத்தில் சிவலிங்கப்பெருமானும் போகசக்தியும் எழுந்தருளியுள்ளனர். தென்முகமாக அழகிய சிவகாமி அம்பாள் எழுந்தருளியுள்ளார். மகாமண்டபத்திலே ஆடல்வல்லானாகிய நடராசப் பெருமான் கலையுணர்வை ஏற்படுத்தியவாறு காணப்படுகின்றார். இவ்வழகிய திருவுருவம், முப்பது அங்குல உயரமுடையதாகக விளங்குகின்றது. மகாமண்டபத்தில் நடராசப் பெருமானோடு இருபத்தியெட்டு அங்குல உயரங்கொண்ட சிவகாமி அம்பாள் எழுந்தருளியுள்ளார்.

இவ்வாலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகளும், ஆறுகாலப் பூசைகளும், விரதங்களும், அபிஷேகங்களும், விழாக்களும், மிகச் சிறப்பாக சிவாகம முறைப்படி நடைபெறுகின்றது. இவற்றோடு சிவனுக்குரிய திருநாட்களான சிவராத்திரியும், சக்திக்குரிய திருநாட்களான நவராத்திரி போன்றவையும், விரதங்களாகவும், விழாக்களாகவும் இக்கோயிலில் இடம்பெறும். பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலின் வருடாந்த மகோற்சவம் பத்து நாட்கள் நடைபெறும். கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மகோற்சவம், பத்தாம்நாள் பங்குனி உத்தரத் திருநாளன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.

இங்கு நடைபெறும் தேர்த்திருவிழாவைக் காண பெருந்திரளான மக்கள் சாதி, மத, பேதமின்றிக் கூடுவர். தேர்த்திருவிழாவன்று சோமாஸ்கந்தர், அம்பாள், சண்டேஸ்வரர், ஆகியோர் அவரவர்க்கென அமைக்கப்பட்ட அழகிய சிற்பத் தேரிலேறி உலாவருவர். விநாயகர், முருகன்ஆகியோர் தமக்குரிய வாகனங்களில் உலாவருவர். ஆலய வழிபாட்டிலே பல்வேறு நிகழ்வுகளில் பெண்கள் அனுமதிக்கப்படாத காலம் ஒன்றிருந்தது. தேரை பெண்கள் வடம்பிடித்து இழுப்பது தவறென்ற கொண்கை நீண்டகாலமாக நிலவியது. இவ்வாலயத்தின் அம்பாள் தேரை, பெண்களே வடம்பிடித்து இழுக்கும் சிறப்பை இங்கு காணலாம். சுவாமி உள்வீதி உலாவந்து வெளிவீதி உலா வரும்பொழுது, நவசந்தித் திருமுறைகள் ஓதுவார்களால் ஓதப்படுகின்றது.

பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் அதிகாலையில், பள்ளியெழுச்சிப் பாராயணத்தோடு பூசைகள் ஆரம்பமாகும். தினமும் சுவாமி பள்ளியறையிலிருந்து பல்லக்கிலே புறப்பட்டு திரும்புவது வழக்கமான நடைமுறையாகக் காணப்படுகின்றது. காலையிலே கோமாதாவிற்குப் பூசை நடைபெறும். காலை ஏழு மணிக்கும், மாலை ஏழு மணிக்கும் நடைபெறும் பூசைகளில் நித்தியாக்கினி வளர்க்கப்படுவது இக்கோயிலின் சிறப்பம்சமாகும். இங்குள்ள கோசாலையில் வளர்க்கப்படும் பசுக்களிலிருந்து கிடைக்கப்பெறும் பாலும், பாலிலிருந்து பெறப்பட்ட தயிர், நெய் இவற்றோடு கோமாதாவின் கோசலம், கோமயம் போன்றவையே ஆலயத்தில் நடைபெறும் அபிஷேகங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாலயத்தின் முதற் பிரகாரத்திலே கோஷ்டதெய்வங்களாக நர்த்தனவிநாயகர், சனீஸ்வரன், சந்தானகோபாலர், தட்சிணாமூர்த்தி, நாகதம்பிரான், இலிங்கோற்பவர், பிரமதேவர் இவர்களுடன் துர்க்கை அம்பாளும் எழுந்தருளியுள்ளனர். இரண்டாம் பிரகாரத்திலே, பரிவாரமூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். விநாயகர், சோமாஸ்கந்தர், பஞ்சலிங்கங்கள், மகாவிஷ்ணு, வள்ளி தேவசேனா சுப்ரமணியர், வள்ளி தேவசேனா ஆறுமுகர், இராஜராஜேஸ்வரி அம்பாள், அஸ்திரதேவர், சந்திரசேகரர், காத்தவராயர், மகாவிஷ்ணு, இராமர் சீதை இலக்குமணர் ஆஞ்சநேயர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணிவாசகர் ஆகிய நால்வர், ஞானபைரவர், சுவர்ணபைரவர், நவக்கிரக நாயகர்கள், சந்திரர், சூரியர், ஆகியோர் அவரவர் சந்நிதியில் எழுந்தருளியுள்ளனர். இங்குள்ள இலிங்கோற்பவமூர்த்தி கலைநயத்துடன் காணப்படும் திருவுருவமாகப் போற்றப்படுகின்றது.

வெளிவீதியாகிய மூன்றாம் வீதியில் ஆலயத்தின் காரியாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்திலே சிவதொண்டுசெய்யும் சிவாச்சாரியார்கள், வெளிவீதியில் அமைந்துள்ள விடுதிகளில் தங்கியுள்ளனர். இவற்றோடு அழகிய பூமண்டபம், ஆஞ்சநேயர், முனியாண்டிசுவாமி, மாரியம்பாள், கோசாலை தேர்முட்டி, சொர்ணபுஷ்கரணி தீர்த்தத் தடாகம், அரசடிப்பிள்ளையார் போன்ற திருவுருவங்களும், வெளிவீதியில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றனர்.

*தொடரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# அன்பின் தொனி - 616

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தாவே, எருசலேமின் நாளில் ஏதோமின் புத்திரரை நினையும்**

பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து, அங்கே சீயோனை நினைத்து அழுதோம். அதின் நடுவிலிருக்கும் அலரிச்செடிகளின்மேல் எங்கள் கின்னரங்களைத் தூக்கிவைத்தோம். எங்களைச் சிறைபிடித்தவர்கள் அங்கே எங்கள் பாடல்களையும், எங்களைப் பாழாக்கினவர்கள் மங்கள கீதத்தையும் விரும்பி: சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்குப் பாடுங்கள் என்று சொன்னார்கள். கர்த்தரின் பாட்டை அந்நியதேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி? எருச லேமே, நான் உன்னை மறந்தால் என் வலதுகை தன் தொழிலைமறப்பதாக. நான் உன்னை நினையாமலும், எருச லேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும் போனால், என் நாவு என் மேல்வாயோடு ஒட்டிக் கொள்வதாக. கர்த்தாவே, எருசலேமின் நாளில் ஏதோமின் புத்திரரை நினையும், அவர்கள்: அதை இடித்துப்போடுங்கள், அஸ்திபாரமட்டும் இடித்துப்போடுங்கள் என்று சொன்னார்களே. பாபிலோன் குமாரத்தியே, பாழாய்ப்போகிறவளே நீ எங்களுக்குச் செய்தபடி உனக்குப் பதில் செய்கிறவன் பாக்கியவான். உன் குழந்தைகளைப் பிடித்து, கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான். - **சங்கீதம் 137: 1-9**

**கர்த்தாவே, என் விண்ணப்பங்களின் சத்தத்துக்குச் செவிகொடும்.**

கர்த்தாவே, பொல்லாத மனுஷனுக்கு என்னைத் தப்புவியும், கொடுமையுள்ளவனுக்கு என்னை விலக்கி இரட்சியும். அவர்கள் தங்கள் இருதயத்தில் பொல்லாப்புகளைச் சிந்தித்து, யுத்தஞ்செய்ய நாள்தோறும் கூட்டங்கூடுகிறார்கள். சர்ப்பத்தைப்போல் தங்கள் நாவைக் கூர்மையாக்குகிறார்கள், அவர்கள் உதடுகளின்கீழ் விரியன் பாம்பின்விஷம் இருக் கிறது. கர்த்தாவே, துன்மார்க்கனுடைய கைகளுக்கு என்னை நீங்கலாக்கி, கொடியவனுக்கு என்னை விலக்கி இரட்சியும், அவர்கள் என் நடைகளைக் கவிழ்க்கப்பார்க்கிறார்கள். அகங்காரிகள் எனக்குக் கண்ணியையும் கயிறுகளையும் மறை வாய் வைக்கிறார்கள், வழியோரத்திலே வலையை விரித்து, எனக்குச் சுருக்குகளை வைக்கிறார்கள். நான் கர்த்தரை நோக்கி: நீர் என் தேவன் என்றேன், கர்த்தாவே, என் விண்ணப்பங்களின் சத்தத்துக்குச் செவிகொடும். அண்டவராகிய கர்த்தாவே, என் இரட்சிப்பின் பெலனே, யுத்தநாளில் என் தலையை மூடினீர். கர்த்தாவே, துன்மார்க்கனுடைய ஆசைகள் சித்தியாதபடி செய்யும், அவன் தன்னை உயர்த்தாதபடி அவனுடைய யோசனையை நடந்தேறவொட்டாதேயும். என்னை வளைந்துகொள்ளுகிறவர்களுடைய உதடுகளின் தீவினைகள் அவர்கள் தலைகளையேமூடுவதாக. நெருப்புத் தழல் அவர்கள்மேல் விழுவதாக, அக்கினியிலும், அவர்கள் எழுந்திருக்கக்கூடாத படுகுழிகளிலும் தள்ளப்படுவார்களாக. பொல்லாத நாவுள்ளவன் பூமியிலே நிலைப்பதில்லை, கொடுமையான மனுஷனை பறக்கடிக்கப் பொல்லாப்பு அவனை வேட்டையாடும். சிறுமையானவனின் வழக்கையும், எளியவர்களின் நியாயத்தையும் கர்த்தர் விசாரிப்பாரென்று அறிவேன். நீதிமான்கள் உமது நாமத்தைத் துதிப்பார்கள், செம்மையானவர்கள் உமது சமுகத்தில் வாசம்பண்ணுவார்கள். - **சங்கீதம் 140: 1-13**

**கர்த்தாவே, என் வாய்க்குக்காவல் வையும்**

கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், என்னிடத்திற்கு வரத்தீவிரியும், நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில், என் சத்தத்திற்குச் செவிகொடும். என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும், என் கையெடுப்பு அந்திப்பலி யாகவும் இருக்கக்கடவது. கர்த்தாவே, என் வாய்க்குக்காவல் வையும் என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும். அக்கிரமஞ்செய்கிற மனுஷரோடே ஆகாமியக் கிரியைகளை நடப்பிக்கும்படி என் இருதயத்தைத் துன்மார்க்கத் திற்கு இணங்கவொட்டாதேயும், அவர்களுடைய ருசியுள்ள பதார்த்தங்களில் ஒன்றையும் நான் சாப்பிடாமல் இருப்பேனாக. நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும், அது என் தலைக்கு எண்ணெயைப் போலிருக்கும், என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை, அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன். அவர்களுடைய நியாயாதிபதிகள் கன்மலைச் சார்புகளிலிருந்து தள்ளுண்டுபோகிறபோது, என் வார்த்தைகள் இன்பமா னவைகளென்று கேட்பார்கள். பூமியின்மேல் ஒருவன் மரத்தை வெட்டிப் பிளக்கிறதுபோல, எங்கள் எலும்புகள் பாதாளவாய்க்கு நேராய்ச் சிதறடிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் ஆண்டவராகிய கர்த்தாவே, என் கண்கள் உம்மை நோக்கி யிருக்கிறது, உம்மை நம்பியிருக்கிறேன், என் ஆத்துமாவை வெறுமையாக விடாதேயும். அவர்கள் எனக்கு வைத்த கண்ணியின் சிக்குகளுக்கும், அக்கிரமக்காரரின் சுருக்குகளுக்கும் என்னை விலக்கி இரட்சியும். துன்மார்க்கர் தங்கள் வலைகளில் அகப்படுவார்களாக, நானோ அதற்குத் தப்பிக் கடந்துபோவேன். - **சங்கீதம் 141: 1-10**

**என் ஆவி என்னில் தியங்குகிறது, என் இருதயம் எனக்குள் சோர்ந்து போகிறது.**


கர்த்தாவே, என் ஜெபத்தைக்கேளும், என் விண்ணப்பங்களுக்குச் செவிகொடும், உமது உண்மையின்படியும் உமது நீதியின்படியும் எனக்கு உத்தரவு அருளிச்செய்யும். ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும். சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து, என் பிராணனைத் தரையோடே நசுக்கி, வெகுகாலத்துக்குமுன் மரித்தவர்கள்போல் என்னை இருளில் இருக்கப்பண்ணுகிறான். என் ஆவி என்னில் தியங்குகிறது, என் இருதயம் எனக்குள் சோர்ந்து போகிறது. பூர்வநாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன், உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன். என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன், வறண்ட நிலத்தைப்போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது. கர்த்தாவே, சீக்கிரமாய் எனக்குச் செவிகொடும், என் ஆவி தொய்ந்து போகிறது, நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாகாதபடிக்கு, உமது முகத்தை எனக்கு மறையாதேயும். அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காண்பியும், உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன். கர்த்தாவே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும், உம்மைப் புகலிடமாகக் கொள்ளுகிறேன். உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன், உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்து வாராக. கர்த்தாவே, உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும், உம்முடைய நீதியின்படி என் ஆத்துமாவை இடுக்கத்திற்கு நீங்கலாக்கிவிடும். உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழித்து, என் ஆத்துமாவை ஒடுக்குகிற யாவரையும் சங்காரம்பண்ணும், நான் உமது அடியேன். - **சங்கீதம் 143: 1-12**

*(சென்ற வார தொடர்ச்சி...)* *(அத்தியாயம் 19)*

## கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் பழையாற்றுப் பயணம்

அதற்கு வந்தியத்தேவன் வண்டிற்கு மலரைப் பிடிக்கவில்லை என்றால் ஏன் அதைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு நிற்கிறது? என்று தன் வாய்க்குள் முணு முணுத்தபடி 'என் பயணத்தில் பல விரோதிகளைச் சம்பாதித்து விட்டேன் உற்ற நண்பன் கூட பகைவனாகி விட்டான் பல பகைவர் என்னைத் தேடுகிறார்கள் இந்த நிலையில் எப்படி நான் உங்கள் ஏவலைச் செய்வது? தங்கள் காரியம் கெட்டுப் போகக் கூடாது என்று எண்ணுகிறேன் பழுவேட்டரையர்கள் என்னைப் பிடிக்க நாலாபுறமும் ஆட்களை அனுப்பியுள்ளனர். என் நண்பன் கந்தமாறன் நான் தன் முதுகில் குத்திக் கொல்ல முயன்றதாக எண்ணிக் கொண்டிருக்கிறான். ஆழ்வார்க்கடியான் எனும் வீர வைஷ்ணவன் என்னைத் தொடர்கிறான் பழுவூர் இளையராணி நந்தினி தேவி என் மீது ஒரு மந்திரவாதியை ஏவி விட்டுள்ளாள். இவர்களிடம் நான் எப்பொழுது அகப்படுவேன் என்று தெரியாது' என்றான். குந்தவை ஈசானபட்டரை அழைத்து உங்கள் படகோட்டியின் காதுகள் முற்றாக கேட்காது அவனை அழைத்துக் கொண்டு நான் வந்தியத்தேவனுடன் படகில் போய் அவர் கதைகளைக் கேட்போம் என்றாள். அதன்பின் படகில் ஏறினர் வந்தியத்தேவன் மிக மகிழ்ச்சியுடன் தனக்குக் கிடைத்த பாக்கியத்தை எண்ணி மகிழ்ந்தான். வந்தியத்தேவன் தன் கதை கூறத் தொடங்கினான். 'தஞ்சை சென்று உங்கள் தந்தையைப் பார்த்து ஓலை கொடுத்துவிட்டு, சின்னப்பழுவேட்டரையர் என்னில் சந்தேகம் கொண்டதால் நான் அங்கிருந்து தப்பி ஓட முற்பட்டு பழுவூர் ராணி நந்தினியிடம் அகப்பட்டு, இருண்ட மண்டபத்தில் நின்ற போது பழுவூர் ராணியை சந்திக்க வந்த மந்திரவாதி அந்த இருண்ட மண்டபத்தில் நந்தினி கொடுத்த முத்திரை மோதிரத்தை தருமாறு கேட்டு என்னை வதைத்தான். என் மூச்சு திணறி உயிர் போகும் அளவிற்கு வேதனை அதிலிருந்து ஒருவாறு தப்பினேன். கந்தமாறனின் உயிரை தப்புவிக்க உதவியபின் நீர்ச்சுழலில் இருந்து தப்பி நான் இந்த நகரத்தில் புகுந்தேன். பழுவேட்டரையர்களின் ஆட்கள் என்னைப் பிடிக்க காத்திருந்ததை அறிந்து ஒப்பனை செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது நாடகக் குழு ஒன்று வந்தது அதில் கம்சன் மட்டும் மரத்தினாலான முகமூடி தரித்திருந்தான். என் தந்திரத்தால் அவர்களுடன் இணைந்து கொண்டு ஆட்டம் போட்டேன். இவ்வாறு தப்பி கரிகாலன் சொன்படி ஈசானபட்டரை சந்தித்துப் பேசினேன். அவர் இங்கு அழைத்து வந்தார்' என்றான். இந்த விபரங்களைக் கேட்டு இளவரசி மலர்ந்த கண் கொண்டு வந்தியத்தேவனைப் பார்த்து, 'வெற்றித் தெய்வமாகிய கொற்றவையின் கருணை இந்த சோழர் குலத்திற்கு பரிபூரணமாக இருக்கிறது. இதனால் தங்களை இந்த இடர்களில் இருந்து காப்பாற்றி எனக்கு உதவ தேவி இங்கு அனுப்பி வைத்துள்ளாள்' என்றாள். பின்னர் மூவரும் இறங்கினர் குந்தவை அரண்மனை நந்தவனத்திலுள்ள வசந்த மண்டபம் நோக்கி நடந்தாள். வந்தியத்தேவனும், ஈசானப்பட்டரும் அவளைத் தொடர்ந்தனர் அங்கு குந்தவை பனையோலைத் துணுக்கையும், தங்கப் பிடி கொண்ட எழுத்தாணியையும் எடுத்து பின்வருமாறு எழுதினாள் 'பொன்னியின் செல்வா இந்த ஓலை கண்டதும் உடனே புறப்பட்டு வரவும் விபரங்களை இதைக் கொண்டு வருபவன் சொல்லுவான் இவனைப் பூரணமாக நம்பலாம்' என்று எழுதி அடியில் அத்தி இலை போன்ற சித்திரம் வரைந்தாள். பின்னர் அதை வந்தியத்தேவன் கையில் கொடுத்து 'சிறிதும் தாமதிக்காமல் இந்த ஓலையை எடுத்துக் கொண்டு ஈழ நாட்டிற்கு செல்ல வேண்டும். இளவரசர் அருள்மொழிவர்மரிடம் கொடுத்து அவரைக் கையோடு அழைத்து வரவேண்டும்' என்றாள். அதைக் கேட்ட வந்தியத்தேவன் உள்ளம் மகிழ்ச்சியில் குதித்தது. நான் சக்கரவர்த்தியைப் பார்த்தேன், இளவரசியைப் பார்த்தேன் அடுத்து இளவரசரைப் பார்க்க கொடுத்து வைத்திருக்கிறேன் என்று தன் பாக்கியத்தை எண்ணி மனம் குளிர்ந்து தன் வலது கையை நீட்டி ஓலையை பெற்றுக் கொண்டான். அப்பொழுது குந்தவையின் மலரையொத்த மென்மையான கைகள் வந்தியத்தேவனின் கரங்களைத் தொட்டன! அந்தக்கணம் வந்தியத்தேவன் ஆகாயத்தில் எழுந்து பறந்தது போல் ஆனந்தம் கொண்டான். அவன் குந்தவையை நோக்கி தன் மனதுக்குள் பல கவிதைகள் புனைந்தான். பின்னர் வந்தியத்தேவன் புறப்பட்டான். மறுநாள் குந்தவையும், வானதியும் யானை மீது ஏறி பராந்தக




சோழர் ஆதுர சாலையை நோக்கி சென்றனர், யானை பூமி அதிரும்படி நடந்து சென்றபோது நகர மாந்தர்கள் யானையின் மணி கேட்டு வெளியே வந்து, இரு பொன்னரசிகளைக் கண்டு முகம் மலர்ந்து கை கூப்பி நின்றனர். குந்தவை பராந்தக ஆதுர சாலை ஸ்தாபித்து நடாத்தி வந்தாள் இந்தச் சாலை அருகில்

யானை வந்தத வயது முதிர்ந்த ஒருவர் வந்த இளவரசிகளை வரவேற்றார்.

*(தொடரும்...)*


Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**

**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**

**மாதினி நிமலன**

# மரண அறிவித்தல்



அன்னை மடியில்: 28 - 05 - 1954

மண்ணில் மடியில்: 04 - 07 - 2021

## திரு. தனபாலசிங்கம் நவரட்ணம் (தனா)

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும், கனடா ரொறன்டோவை வதிவிடமாகவும் கொண்ட
திரு. நவரட்ணம் தனபாலசிங்கம் (தனா) அவர்கள்
04-07-2021 ஞாயிற்றுக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் - இந்திராணி தம்பதிகளின் அன்பு மகனும், செல்லமணி அவர்களின் அன்புக் கணவரும், லக்னேஸ், கபில்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

காலஞ்சென்ற குணபாலன் (இலங்கை), தனலட்சுமி (கலா - இலங்கை), மேரிலைலா (லைலா - இலங்கை), கீர்த்திசிங்கம் (கீர்த்தி - கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,

கமலாதேவி, சுந்தரலிங்கம், (சுந்தர்) பிரான்சிஸ் சேவியர், தேவஷாலினி ஆகியோரின் மைத்துனரும்,

காலஞ்சென்ற பூபாலசிங்கம் - புஸ்பமலர் (கனடா), காலஞ்சென்ற தேவதாஸ் - தேவரஞ்சினி (திருகோணமலை) ஆகியோரின் மருமகனும்,

அருமைத்துரை - மல்லிகாதேவி (கனடா), நாகராசா - மலர்விழி (சுவிஸ்), குலசிங்கம் - தேவி (ஜேர்மனி), செல்வராசா - சுமதி (சுவிஸ்), சந்திரராசா (குட்டி) - வேல்விழி (சுவிஸ்), கிருஸ்ணபிள்ளை (சிறி) - சாந்தா (சுவிஸ்), சேகர் - பகி (கனடா), வீரசிங்கம் - லதா (கனடா), ராம் - காலஞ்சென்ற சுகந்தி (கனடா) ஆகியோரின் மைத்துனரும்,

தர்சினி - ஆதித்தன் (கனடா), ஜெனா - தீபிகா (கனடா), ஜெனனி - சசிகரன் (கனடா), ஜெகன் - தாரா (கனடா) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

*அன்னாரின் பூதவுடல் 10-07-2021 சனிக்கிழமையன்று மாலை 6:00 மணி தொடக்கம் 9:00 மணி வரை 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home இறுதிக் கிரியைகள் நடைபெறும் மண்டபத்தில் பார்வைக்கு வைக்கப்பெற்று, பின்னர் அடுத்த நாள் 11-07-2021 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 6:00 மணி தொடக்கம் 7:00 மணி வரை அதே மண்டபத்தில் பார்வைக்கு வைக்கப்பெற்று, தொடர்ந்து காலை 7:00 மணி தொடக்கம் 8:30 மணி வரை கிரியைகள் நடைபெற்று, தொடர்ந்து, காலை 9:00 மணிக்கு, அங்கிருந்து 12492 Woodbine Avenue, Gormley, இல் அமைந்துள்ள Highland Hills Crematorium இற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனஞ் செய்யப்படும்.*

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்
மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

செல்வமணி (மனைவி): (647) 515-9923
கபில்யா (மகள்): (647) 866-4909
கீர்த்தி (சகோதரர்): (437) 999-8147
லக்னேஸ் (மகன்): (647) 467-0027
ஜெனா (பெறா மகன்): (647) 989-3804
புஸ்பமலர் (மாமி): (647) 530-5872

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

25ஆ வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

உதயம் 1318 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 9, 2021

World Health Organization

# முன்கூட்டியே முழு இயல்புக்குத் திரும்பும் நாடுகளுக்கு உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

கொரோனா அலையின் தாக்கத்தில் இருந்து உலக நாடுகள் மிகவும் முன்கூட்டியே அவசர, அவசரமாக முழு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாகவும், அதற்கான விலையை நாம் கொடுக்க வேண்டியிருக்கும் எனவும் உலக சுகாதார அமைப்பின் அவசர சுகாதாரத் திட்டத்தின் தலைவர் மைக்கேல் ரியான் எச்சரித்துள்ளார்.

உலகம் முழுவதும் கொரோனா தொற்று பாதிப்பு முழுமையாக நீங்கவில்லை. இந்தியாவில் இரண்டாவது அலை முடிவுக்கு வரும் சூழலில், பல்வேறு நாடுகள் அடுத்தடுத்த அலைகளைச் சந்தித்து வருகின்றன.

இதற்கிடையே பிரிட்டனில் ஊரடங்கில் ஜூலை 19-ம் தேதி முதல் பல்வேறு தளர்வுகள் அறிவிக்கப்பட உள்ளன. கொரோனா பெருந்தொற்று இன்னும் ஓயவில்லை. ஆகையால், மக்கள் வைரஸுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் தெரிவித்திருந்தார்.

# ரொறன்ரோவின் 'தமிழர் சமூக மையத்திற்கு' கனடாவின் மூவகை அரசுகளிடமிருந்து நிதி கிடைப்பது உறுதியாகியது




கனடாவின் ரொறன்ரோ மாநகரில் எங்கேயாவது ஒரு இடத்தில் தமிழ் மக்களுக்கான ஒரு 'சமூக மையம்' அமைய வேண்டுமென நீண்டகாலமாக எடுக்கப்பட்டு வந்த முயற்சிகளுக்கு தற்போது சாதகமான தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளமை தமிழ் மக்களுக்கு 'நாக்கில் தேன் தடவியது" போன்ற ஒரு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

*(உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)*

# கனடா லிபரல் அரசின் முன்னாள் நீதி அமைச்சரான ஜோடி வில்சன் – ரெய்போல்ட் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என அறிவிப்பு



கனடாவின் பாராளுமன்ற உறுப்பினரும் லிபரல் அரசாங்கத்தின் முன்னாள் நீதி அமைச்சருமான ஜோடி வில்சன்-ரெய்போல்ட் நேற்று வியாழக்கிழமை ஒரு பகிரங்க அறிவிப்பை விடுத்ததார். அதில் தான் அடுத்த பொதுத் தெர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்துள்ளார். அத்துடன் கடியப் பாராளுமன்றம் என்பது மோசமான பின்னணியில் இருந்து தனிநபர்களை ஓரங்கட்டும்" நச்சுத்தன்மையும் பயனற்ற தீர்மானங்களை எடுக்கும் ஒரு தளம் என்றும் அவர் கனடியப் பாராளுமன்றத்தை விமர்சனம் செய்தார்.

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

# சக்கர நாற்காலியில் பாராளுமன்றத்திற்குச் சென்ற இரா. சம்பந்தனை விமர்சித்து சமூக ஊடகங்களில் 'பதிவுகள்'



நேற்று செவ்வாய்கிழமை 6ம் திகதி ஒரு சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்து தனது உதவியாளர்கள் சகிதம் பாராளுமன்றத்திற்குச் சென்ற இரா. சம்பந்தனுக்கு எதிராக சமூக ஊடகங்களில் 'விமர்சனங்கள்' முன்வைக்கப்படுகின்றன என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

"இவ்வளவு கஸ்டப்பட்டு மக்களுக்கு சேவையாற்ற விரும்பியவர் கடந்த மைத்திரி- ரணில் காலத்தில் எவ்வளவு சேவைகள் செய்திருக்கலாமே" என்று பலர் முகநூலிலும் டுவிட்டர் பக்கங்களிலும் பதிவிட்டுள்ளனர்.

மேலும் சிலர் "சம்பந்தன் ஐயா, சம்பளத்திற்கும் சலுகைக்குமாகவே இவ்வாறு சிரமங்களோடு பாராளுமன்றத்திற்கு வருகின்றார்" என்றும் " இவருக்கு வாக்களித்த திருகோணமலை வாக்காளர்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும்" என்றும் கேள்விகளை முன்வைத்துள்ளனர். *(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)*

# மகிந்த, பசில், கோட்டாபாய ஆகியோரை 'மும்மூர்த்திகள்' என்று வர்ணித்துள்ள முகநூல் அன்பர்கள்



இலங்கையின் புதிய நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட பசில் ராஜபக்ச நேற்றைய தினம் வியாழக்கிழமை காலை பாராளுமன்றத்தில் சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராகவும் பதவி பிரமாணம் செய்துக் கொண்டார். அவருக்கு முன்னர் இந்தப் பதவியை வகித்து வந்தவர் அவரது சகோதரர் மகிந்த ராஜபக்ச என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவரது பதவியேற்பு வைபவத்தின் படத்தை பார்த்த முகநூல் அன்பர்கள் கோட்டாபாய, மகிந்த மற்றும் பசில் ஆகியோர் ஒன்றாக நிற்கும் படத்தைப் பார்த்து, அதன் கீழ் 'மும்மூர்த்திகள்" என்று குறிப்பிட்டுள்ளார்கள்

*(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)*

RE/MAX ACE
PUNCH SOCKALINGAM
www.mlslistingtoday.com
Punch
Dir: 416.786.2463
BUY...SELL...LEASE...INVEST...

# இலங்கைப் பாராளுமன்றத்திற்கு அருகே அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் காவல்துறையினரால் கைது



இலங்கைப் பாராளுமன்றத்திற்கு அருகே நேற்று வியாழக்கிழமை அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்கள் என செய்தியாளர் அறிவித்துள்ளார்

இந்த சந்தர்ப்பத்தை காணொளியாக பதிவுசெய்த ஊடகவியலாளர்களின் கமாராக்கள் மீதும் இலங்கைப் பொலிசாரால் கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. *(உள்ளே விபரமான செய்தி 4ம் பக்கத்தில்)*